கல்கி



ALKI செப்டம்பர் 11.1955 4 அணா



வசந்தி வீட்டிலேயே தங்குகிறாள்
சந்தையில்
சீனு! வசந்தி எங்கே?
ஆமாம். இல்லாவிட்டால் எப்படி அவை இவ்வளவு சுத்தமாகச் செய்ய முடியும்.
பார்த்தாயா எவ்வளவு சுத்தமாக என் துணிகளை ஸன்லைட் சோப் வெளுத்திருக்கிறது!
இன்றே நான் ஸன்லைட் சோப்பை வாங்குகிறேன்!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப் துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது
இந்தியாவில் தயாரித்தது

S. 236-50 TM

கல்கி

மலர் 15
இதழ் 6

மன்மத ஆவணி 26

பொருளடக்கம்

1955 செப்டம்பர் 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பாருங்கள்
முற்றிலும் புதுமையான
கதாபாத்திரமாக முழுத்
திறமை காட்டி
பத்மினி நடிப்பதை
A.C. பிள்ளை
அளித்தும்
வைத்யா
பிலிம்ஸ்
மங்கையர்
திலகம்
டைரக்ஷன்
பிரசாத்
தயாரிப்பு - ஸ்ரீ பரதசங்கர்
சென்னை
சித்ரா
பிரபாத்
ஸரஸ்வதி
மற்றும் தமிழ்
நாடெங்கும்
RKF
WORLD RIGHTS CONTROLLED BY
ராகாகிருஷ்ண பிலிம்ஸ் லிட்.,
34, தியாகராயா ரோடு......மெட்ராஸ் - 17 -



மலர் 15 }
இதழ் 6 }

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

{ மன்மத ௵
{ ஆவணி 26

அஞ்சலி செய்வோம்!

செப்டம்பர் மாதம் பதினோராம் தேதி யென்றால் எட்டையபுரம் பாரதி மண்டபத்தையும், மகாகவி பாரதியாரின் திருவிழாவும் மனத்தில் எழுந்து நிற்கின்றன.

தமிழில் 'மறுமலர்ச்சி' என்ற புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்து, மங்காத சுடர் வீசும் அற்புதமான கவிதைகளாலும், ஜீவனுள்ள வண்ணத் தமிழ் வசனத்தினாலும் தமிழ் அன்னைக்கு அணி அணியாக அலங்காரங்கள் செய்தார் மகாகவி பாரதியார். இன்றும் தமிழர் இதயங்களிலெல்லாம் நின்று தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் காத்து வருகிறார் அவர். ஆண்டுதோறும் அவருடைய திருவிழாவைக் கொண்டாடி, அவர் நமக்கு வகுத்துக் காட்டிய இலட்சியங்களை யெல்லாம் மனத்தில் நன்றாகப் பதித்து அவர் பாடிய நெறியிலே வாழ்ந்து வருவதே நமது கடமை. இந்த முறையிலே, செப்டம்பர் பதினோராம் தேதி தமிழர் சமூகத்துக்கே பொதுவான ஒரு முக்கிய பண்டிகையாகும்.

இந்தப் பண்டிகை தினத்தில் பாரதியாரின் திருவாக்கு ஒன்றை இங்கே நினைவு படுத்த விரும்புகிறோம்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பாரதியார் எழுதினார் :

" பூர்விக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை......பண்டைக் காலத்துச் சக்திமான்களை வியப்பதும் அவர்களுடைய பெருமையை உலகமறிய முழக்குவதும், கூடிய வரை பின்பற்ற முயல்வதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கவனிப்பார்கள் ?"

இப்படி ஆணித்தரமாகக் கேட்கும் பாரதியார் தமிழ் மக்களை நோக்கி, *" மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும், வருஷோத்சவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும் "* என்று கேட்டுக் கொண்டார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு.

அன்று பாரதியார் செய்த உபதேசத்தைக் கடைப்பிடித்துத் தமிழ் மக்களாகிய நாம் முதன் முதலாக அவருக்கே எட்டையபுரத்தில் ஞாபகச் சின்னம் கட்டி மகிழ்ந்தோம். இன்று அந்த பாரதியார் தினத்தில் இன்னொரு நல்ல முயற்சியைக் குறித்த வேண்டுகோளும் மற்றொரு பக்கத்தில் வெளியாகி யிருக்கிறது.

தமிழ் நாட்டில் எத்தனையோ மகான்கள் தோன்றி நமது சமயத்தையும், கலைகளையும், நம்முடைய ஞானச் செல்வத்தையும் வளர்த்தார்கள். சமீப காலத்தில் சென்ற நூற்றாண்டில் இங்ஙனம் தமிழ் நாட்டில் தோன்றி பக்தியையும் கலையையும் வளர்த்த பெரியார்களுள் மிக முக்கியமானவர்கள் சங்கீத மும்மூர்த்திகள் என்று கொண்டாடப்படும் ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாம சாஸ்திரிகள் ஆகிய மும்மணிகளுமே.

இந்த மூன்று மகான்களும் ஒரே காலத்தில் தோன்றியவர்கள் என்பதே ஒரு அதிசயம். அதைவிடப் பெரிய அதிசயம் இம்மூவரும் தோன்றியது ஒரே ஊரில்— திருவாரூரிலேதான்!

திருவாரூர் என்றால் சிவநேசச் செல்வர்கள் எல்லாம் சென்னியிலே சூடி வணங்கும் திவ்ய ஸ்தலம். இந்தத் திருநகரிலே எத்தனையோ மகான்கள் அவதரித்திருக்கிறார்கள். எத்தனையோ சித்தர்களும், ஞானப்ரகாசர் போன்ற ஞானிகளும், கபிலர் போன்ற கவிஞர்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன்ற நாயன்மார்களும்

நடமாடி இந்தப் பூமியிலே புனிதம் விளைத்திருக்கிறார்கள். கமலாம்பிகையும் அஜபா நடேசன் என்று அழைக்கப் பெறும் தியாகராஜப் பெருமானும் கோயில் கொண்டு எழுந்தருளித் தமிழ்க் குலத்துக்குத் திருவருள்பொழிந்திருக்கிறார்கள். இந்த மரபை யெல்லாம் யொட்டியே, பஞ்ச பூத ஸ்தலங்களில் ஒன்றாகிய இந்தத் திருவாரூர்த் திருப்பதியிலே பிறந்து பக்தியினால் இசை மூலம் இறைவனை வழிபட்டார்கள் இந்த சங்கீத மும்மூர்த்திகள்.

"திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று பாடக்கூடிய அளவில், எத்தனையோ நூற்றாண்டுகளாக, ஞானமும் கலையும் இணைந்து வளர்ந்த இந்தப் புண்ணியச் சூழ்நிலையிலே இம் மூவரும் இதயம் கலந்து நின்று, பரம்பரை பரம்பரையாக வழங்கி வந்துள்ள இசையிலும் பக்தியிலும் ஊறி அநேக அற்புதப் பாடல்களை இயற்றினார்கள். இது தமிழ் நாடு முழுதுமே பெருமைப்பட வேண்டிய ஒரு சாதனை.

"இசை என்பது பித்தளை, வெண்கலம், தங்கம் போன்ற உலோகத்தைப் போல! தியாகராஜரைப் போன்ற பக்திமானுடைய வாக்கில் இந்த உலோகம் விக்ரமாக உருவாகி விடுகிறது. அவர் செய்துள்ள கீர்த்தனங்கள் எல்லாம் இசையிலே ஆக்கப்பட்ட மூர்த்தி வடிவங்கள்!" என்று தியாகராஜர் நூற்றாண்டு விழாவிலே திருவையாற்றில் பேசும்போது ராஜாஜி குறிப்பிட்டார். இந்த உண்மை இந்த மூவருடைய கீர்த்தனங்களுக்கும் பொருந்தும்.

நாத ரூபத்தில் இறைவனைப் பல கீர்த்தன வடிவங்களிலே உருவாக்கித் தந்த மூன்று மகான்களுக்கும், நினைவுச் சின்னங்கள் எழுப்பி ஆண்டுதோறும் விழாக்கள் கொண்டாடுவது நமது கடமையாகும். இப்பொழுது திருவாரூர் சங்கீத மும்மூர்த்தி சபையார் மேற் கொண்டிருக்கும் திருப்பணி இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு நமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் தருகிறது.

பாரதியார் மண்டபம் எழுப்பும் முயற்சியில் தமிழ் மக்கள் ஊக்கத்தோடு உதவி செய்து வெற்றி வழங்கினார்கள். அது போலவே இந்த முயற்சிக்கும் ஊக்கத்தோடு உதவி செய்து மும்மூர்த்திகள் பிறந்த இல்லங்களிலேயே அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுந்தோங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த முயற்சிக்கும் வேண்டுகோளுக்கும் இசைந்த முறையிலே பாரதியாரின் திருநாள் என்று வெளியாகும் இந்த இதழின் அட்டையில், சங்கீத மும்மூர்த்திகளும் அவர்கள் பிறந்த புண்ணியத் திருவாரூரிலே விளங்கும் கமலாலயமும், மூவர்ணங்களிலே சித்திரித்திருக்கிறார் ஓவியர் மணியம். இந்த மூவர்ணச் சித்திரத்தின் திருக் காட்சியைப் போலவே இந்த மும்மூர்த்திகளின் நினைவு மண்டபங்களும் கலைக் கோவிலாக எழுந்தோங்க வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நற் பணியில் தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

காங்கிரஸ் கமிட்டி காட்டும் வழி

கோவாவில் போர்ச்சுகீசிய சர்க்கார் கையாண்ட கொடிய அடக்குமுறைகள் பாரத நாடெங்கும் மக்களிடையே மனக் கொதிப்பை உண்டாக்கியது இயல்பேயாகும். அதன் காரணமாக, போர்ச்சுகல் சர்க்கார் மீது இந்திய சர்க்கார் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவில்லை என்று சிலர் புகார்கள் கூறி வருகின்றனர். அத்தகைய புகார்கள் சரியல்ல என்பதை, புதுடில்லியில் சென்ற வாரம் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்ட நடவடிக்கைகளைக் கவனிப்போர் அறிந்து கொள்ளலாம். கோவா பிரச்னை சம்பந்தமான விவாதத்தில் இருபதுக்கு மேற்பட்ட ராஜ்யங்களைச் சேர்ந்த முதல் மந்திரிகள் கலந்து கொண்டார்கள் என்பதிலிருந்து, அவ் விஷயமாக இந்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றன என்பது தெரியவில்லையா! இத்தகைய சந்தர்ப்பங்களில் பாமர மக்களைப்போல் பொறுப்பு வாய்ந்த சர்க்கார் உணர்ச்சி வசப்பட்டு விடக் கூடாது. இந் நிலையில், அ. இ. கா. கமிட்டித் தீர்மானம் தேச மக்களுக்குக் காட்டியுள்ள வழியை எல்லோரும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

"கோவா விடுதலைக்காக இந்திய மக்கள் தனிப்பட்ட சத்தியாக்கிரகத்தில் ஈடுபடக் கூடாது. கோவாவுக்குள் வெகு ஜனப் பிரவேசம் கூடாது என்ற கொள்கையையும் இக் கமிட்டி ஊர்ஜிதம் செய்கிறது. கோவா பிரச்னையைக் கட்சி விவகாரமாகக் கருதாமல், இந்திய சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கையை ஆதரிக்கும்படி இந்திய மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்."

இதுதான், கோவா சம்பந்தமாக அ. இ. கா. கமிட்டியில் நிறைவேறிய தீர்மானத்தின் சாரம்.

"கோவா வெகு சீக்கிரத்தில் இந்தியாவுடன் சேர்ந்தே தீரும். அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் கைக்கொண்டு வருகிறோம்" என்று நேருஜீ கூறியுள்ள உறுதிமொழியில் நம்பிக்கை வைத்துப் பாரத மக்கள் ஏகமனதாக இந்திய சர்க்காரை ஆதரிக்க வேண்டியது கடமையாகும். பொது மக்களின் ஆதரவு பூரணமாக இருக்குமாயின், கோவா விஷயமாக இந்திய சர்க்காரின் முயற்சி விரைவில் மகத்தான வெற்றி பெறும் என்பது நிச்சயம்.

பல தேசத்து சங்கீதங்களையும் நான் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். நமது புராதன சங்கீதத்துக்கு நிகரானது இவ்வுலகத்தில் வேறெங்கும் இல்லை என்பது என்னுடைய முடிவு. கவிதை விஷயத்திலும் இப்படியே.—பாரதியார்

சாதி உணர்ச்சி ஒழியும் வழி

கல்கி வாசகர்களுக்குள் எந்த விதமான சாதித் துவேஷமும் இருக்காது. துவேஷத்தினால் உண்டாகும் அந்த சந்தோஷம் நமக்கு வேண்டாம். ஆரம்பத்தில் அமிருதம் போல் இருக்கும். முடிவில் அது விஷமாகும்.

சரநெஞ்ச மக்களும் மரநெஞ்ச மாக்களுமே இரண்டு மக்கட் சாதிகள்; இதுவொழிய வேறு சாதியில்லை. 'பட்டாங்கிலுள்ளபடி' என்றான் ஔவை. தமிழ் மூதாட்டியின் சொல்லை மறந்து விட்டு சாதி மனப்பான்மையை வளர்த்துக் கெட்டுப் போனோம். இதைப் பளிச்சென்று உணர்ந்து வேறு வழியில் நடந்து கொண்டாலொழிய உய்வில்லை.

'சாதி பேதங்களை ஒழிக்க வேண்டும் என்று நானும்தான் சொல்லுகிறேன்' என்கிறார் கழகத் தலைவர். 'என்னுடன் சேருங்கள், ஒன்றுபட்டு வேலை செய்யலாம்' என்கிறார்.

என்ன வேலை?

எல்லாரும் சேர்ந்து ஒரு சாதியை வெறுப்பதே வேலை என்கிறார். இதைக் காங்கிரஸ் எப்படி ஒத்துக் கொள்ள இயலும்?



காங்கிரஸே சாதி வெறுப்பில் இறங்கி விட்டால், பிறகு விமோசனம் ஏது? ஒரு சாதியை வெறுப்பதற்குச் சாதி மனப்பான்மையை வளர்த்தே தீர வேண்டும். நெருப்பை வளர்த்தால் அது எல்லாவற்றையும்தான் எரிக்கும். சாதி உணர்ச்சி வளர்ந்தால் பலசாதி உணர்ச்சி கட்டாயம் காடாக வளரும். அதைப் பார்த்துத் திகைப்பதில் என்ன பயன்? முதலில் வளர்த்து விட்டுப் பிறகு அதைத் தடுக்க இயலாது. ஒன்றுபட வேண்டுமானால் ஒன்றுபட வேண்டுமே யொழிய விதிக்கு விலக்கு இட்டு ஒற்றுமை வளர்க்க முடியாது. "உப்பே சப்பையாகிப் போனால் அந்தத் தப்புக்கு உப்பு ஏது?" என்றார் ஏகநாதர். காந்திஜி இப்போது உயிருடன் இருந்திருந்தால் அதையே சொல்லுவார். சந்தேகமில்லை. காங்கிரஸ்காரருக்கு எந்த சாதித் துவேஷமும் உதவாது. "நான் பார்ப்பனரைத்தான் துவேஷிக்கச் சொன்னேன். சாதிக்குச் சாதி போட்டி போடச் சொன்னேனா?" என்பார் கழகத் தலைவர். இந்த வாதத்துக்கும் காங்கிரஸுக்கும் வெகு தூரம். இயற்கை வேகத்துக்கும் இது வெகு தூரம். படர் கள்ளியை அடியோடே தொலைத்தால்தான் சமாளிக்கலாம். வேலிக்கு மட்டும் இருக்கலாம் என்று வைத்துக் கொண்டால் வயலையே கவர்ந்து விடும்.

"சாதி வேண்டாம்", "வேண்டவே வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு "ஒன்று மட்டும்" என்று மெதுவாகப் புறநடை சூத்திரம் வைக்கப் பார்ப்பது கழகத்தின் தொல்காப்பியமாக இருக்கலாம். அது காங்கிரஸ்கன்னால் ஆகாது. சாதிகள் ஒழிந்து ஒன்றுபடுவதற்கு வழி என்ன? உள்ளத் துப்புரவும் பேதமற்ற விவாக வழக்கமும் இவை இரண்டுமே வழி. வேறு இல்லை.

விவாகம் என்பது சமூகச் சீர்திருத்தத்துக்காகவே செய்யும்படியான ஒரு காரியமல்ல. தனிப்பட்ட விஷயங்கள் பல கலந்த சிக்கல் சமாசாரம்.

தடைகளை நீக்க யோசிக்கலாமே யொழிய, "இவர்கள் வெவ்வேறு சாதி, சரி, முடி போட்டு விடலாம்" என்று

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

செய்துவிட முடியாது. ஆயினும் நோக்கம் இதுவாக இருக்க வேண்டும். நீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டு அந்த முடிவை நிறைவேற்றுவது சமூகத்துக்கு நன்மை—எல்லாருக்கும் நன்மை என்று பெரியோர்கள் நிச்சயித்து விட்டால், பிறகு காரியம் நிறைவேறும். ஆயினும் இத்தகைய விஷயங்களில் சாவதானம் வேண்டும். மூலையடியாக ஓடிச் செல்வதில் லாபமில்லை.

விவாகத்துக்கு முக்கிய அம்சம் கடவுள். கடவுள் இன்றிக் கலியாணம் இல்லை. கடவுள் இல்லாத விவாகம் வேறு; 'கலியாணம்' வேறு. கழுத்தில் கட்டும் நாணுக்கு மஞ்சள் பூசுகிறோம். மஞ்சளின் பொருள், ஈசுவரன் திருவருள்.


உள்ளத் தூய்மை முதல்படி. அது வின்றி எந்த உபாயமும் பயனில்லை. பயனில்லை யென்பது மட்டுமல்ல. நல்ல காரியமும் தீய காரியமாகவே முடியும். உள்ளத் தூய்மை சம்பாதிப்பது எப்படி? தெய்வ பக்தி இன்றி அது முடியாது என்பது என் முடிவு. பால் வேண்டுமானால் புல் போட்டுத் தான் தீர வேண்டும். பால் வேறு புல் வேறு என்பது விதண்டாவாதம்.

வெறுப்புக்கு ஆளானோர் என்ன செய்வது? இதையும் கூச்சமின்றிக் கேட்கலாம்.

கூச்சமின்றி விடையும் சொல்லுகிறேன். வெறுப்புக்கு வெறுப்பு மருந்து ஆகாது. வெறுப்புக்குக் கோபம் மருந்து ஆகாது. ஆகாததை முந்திச் சொன்னேன். உதவும் மருந்து ஒன்றே. அதுவும் முடிவில் தெய்வ பக்தியே யாகும். வெறுப்பைக் கடல் போல் பொறுத்துக் கொண்டு சாந்தமாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

கஷ்டங்களை ஆண்டவன் வகுத்தது என்று பொறுத்துக் கொள்ள வேண்டும். வெற்றிக்கு அதுவே வழி. வெற்றி நிச்சயம். மற்றதெல்லாம் அழிவுக்கு வழி. ஆண்டவன் அமைத்திருக்கும் வாழ்க்கையில் எந்த நோயும் பொறுமையால் தீரும். இந்த உண்மையை ஐயமின்றி நம்பலாம்.

நாட்டின் சுபிட்சம்



"தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி துரிதமாக இருக்க வேண்டுமானால் அதற்குத் தகுந்தாற்போல் வரிப் பளுவும் அதிகமாகத்தான் இருக்கும்."—நேருஜி

திருவாரூர் சங்கீத மும்மூர்த்திகள்

நினைவு மண்டபத் திருப்பணி

" நல்லன யாவும் நாடுறு நாடு
நாரத கான நலம்திகழ் நாடு "

என்று நமது புண்ணிய பாரத பூமியைப் பாடினார் மகாகவி பாரதியார்.

கான நலம் திகழ்கின்ற இந்தப் புண்ணிய பாரத நாட்டிலே நம்முடைய தென்னாடு, மிகப் பழமையான கலா சாரம் நிரம்பியது. சமயம், தத்துவ ஞானம், கலைகள் ஆகிய துறைகளில் நம்முடைய லக்ஷியமும், சாதனைகளும் அபாரமானவை. நம்முடைய கர்நாடக சங்கீதமோ ஈடு இணையற்றது என்று கொண்டாடப் படுகிறது. இதற்கு முக்கிய காரணம் நமது நாட்டின் அற்புதமான சங்கீத பரம்பரையாகும். அதிலும் சங்கீத மும்மூர்த்திகளான ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ ஸியாம சாஸ்திரிகள் ஆகிய மும்மணிகளின் சேவையை யாரும் மறக்க முடியாது. இந்த மூன்று மகான்களும் ஒரே காலத்தில் இருந்தவர்கள். அது மட்டுமல்ல. ஒரே ஊரில், திருவாரூரில், பிறந்தவர்கள். இது ஒரு அதிசயமே யல்லவா?

திருவாரூர் தமிழ் நாட்டின் புனிதமான க்ஷேத்திரங்களில் மிகவும் முக்கியமான ஒரு ஸ்தலம். "தென்னாடுடைய சிவன்" இங்கே தியாகராஜன் என்ற திருநாமம் தரித்து எழுந்தருளி யிருக்கிறான். இந்தத் திருக்கோயில் எத்தனையோ நூற்றாண்டுகளாக பக்தர்களையும், ஞான சீலர்களையும், கவிஞர்களையும், சங்கீத மகான்களையும் ஆட்கொண்டிருக்கிறது. கமலாலயம் என்னும் புனித தீர்த்தத்தின் சிறப்போடு, சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த சிறப்பும் தஞ்சை ஜில்லா திருவாரூருக்கே உரியது.

மகான்களை வழிபட்டு அவர்களுடைய திருவருளை நாடுவது என்பது தொன்று தொட்டு நமது நாட்டில் வழங்கி வந்துள்ள பக்தி முறை. இதையொட்டியே திருவையாற்றில் ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் ஆராதனை விழாவை வருஷந்தோறும் பக்தி சிரத்தையோடு கொண்டாடி வருகிறோம். இதுபோலவே தீக்ஷிதர், ஸியாம சாஸ்திரிகள் ஆகிய இரு மகான்களின் அமர தினங்களையும் கொண்டாடி வருகிறோம். இந்நிலையில் இப்பொழுது பொது மக்களிடையே இன்னொரு நல்லெண்ணமும் வளர்ந்து வருகிறது. அதாவது இந்த மூன்று மகான்களின் ஜன்ம தினத்தையும் அவர்கள் பிறந்த ஸ்தலமாகிய திருவாரூரிலேயே கொண்டாட வேண்டும் என்று பல பக்தர்களும் கருதுகிறார்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் திருவுளக்கருத்தும் இதுவே.

இதன் பயனாக இப்பொழுது திருவாரூர் மும்மூர்த்தி சபை ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. இதன் நோக்கம் சங்கீத மும்மூர்த்திகளுக்குத் திருவாரூரில் பொருத்தமான நினைவு மண்டபங்கள் எழுப்பி, அவர்களது சங்கீதச் செல்வத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே.

நம்முடைய நல்லதிர்ஷ்டம் இந்த மும்மூர்த்திகள் பிறந்த இல்லங்கள் இன்றும் திருவாரூரில் நம் கண் முன் நிற்கின்றன. வித்வான் ஆலத்தூர் வெங்கடேசய்யர் அவர்கள் திருவாரூரில் தீக்ஷிதர் பிறந்த மனையை, தாமே வாங்கித் திருவாரூர் மும்மூர்த்தி சபைக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். பிக்ஷாண்டார் கோவில் பிரபல மிராசுதார் ஸ்ரீ ராஜகோபால பிள்ளையவர்கள் இந்த மனையில் கட்டிடம் தொடங்குவதற்காகப் பண உதவி செய்திருக்கிறார்கள். அந்த மனையில் தீக்ஷிதரின் நினைவாக ஒரு மண்டபம் எழுப்பி, அதில் ஒரு பூஜா க்ருஹமும் சங்கீத மன்றமும் நூல் நிலையமும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தீக்ஷிதர் தமது வாழ்வில் பெரும் பகுதியைத் திருவாரூரில் கழித்தவர். தியாகராஜப் பெருமானையும், கமலாம்பிகையையும், மற்றும் திருவாரூர் தியாகராஜர் கோவிலிலுள்ள மூர்த்திகளையும் பற்றி அநேக அற்புதமான கிருதிகள் செய்திருக்கிறார். ஆரூரில் ஆட் கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனாரைப் பற்றியும் தீக்ஷிதர் துதி பாடியிருக்கிறார். ஆகவே 'திருவாரூர் இசைஞானி' என்ற பெருமை தீக்ஷிதருக்கு விசேஷமாகப் பொருந்தும்.

மகான் தியாகராஜ சுவாமிகள் திருவாரூர் தியாகராஜரின் திருநாமத்தையே தரித்தவர். திருவாரூரில் அவர் பிறந்த நாளைக் கொண்டாடுவதும், அந்த ஜன்ம பூமியில் அவர் பிறந்த வீட்டிலேயே அவருக்கு ஒரு நினைவு மண்டபம் எழுப்புவதும் மிகவும் பொருத்தமே. இதைப் போலவே திருவாரூரில் ஸியாம சாஸ்திரிகள் பிறந்த வீட்டிலும் அவருக்கு ஒரு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும்.

இறைவனே நாத வடிவமாக நிற்கிறான் என்றும், நாத உபாசனையே உன்னதமான பக்தி சாதனம் என்றும் கருதி வழி

படுகிற பரம்பரையில் வந்த நாம், திருவாரூரில் இந்த மும்மூர்த்திகளின் நினைவு மண்டபத் திருப்பணிக்கு உற்சாகத்தோடு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இந்த நிதி திரட்டும் காரியத்துக்காகச் சென்னையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட் டிருக்கிறது. நன்கொடை அனுப்புவோர் இந்தக் கமிட்டியின் பொக்கிஷதாரரான ஸ்ரீ சதாசிவம், கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

வி. எஸ். தியாகராஜ முதலியார் — தலைவர்

எஸ். அனந்தராமகிருஷ்ணன்

ஏ. எம். எம். அருணாசலம்

வி. ராகவன் .... காரியதரிசி

சதாசிவம் .... பொக்கிஷதார்

என்ன சேதி?

பாரதி விழா

செப்டம்பர் மாதம் பிறந்து விட்டாலே தமிழ் மக்களின் நினைவு இயல்பாகவே பாரதியாரைச் சுற்றி வட்டமிடுகிறது. அவர் தமிழ் மக்களுக்கு எத்தகைய புத்துணர்ச்சியையும் புது விழிப்பையும் நல்கி விட்டார் என்றெண்ணி எண்ணி மக்கள் பெருமிதம் கொள்கிறார்கள். அந்த நன்றியுணர்ச்சியைக் காட்ட 11, 12 தேதிகளில் பாரதியார் விழா தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் அமோகமாகக் கொண்டாடுவார்கள். இவ்வாண்டும் சென்னையில் பாரதியார் சங்கத்தினர் 11, 12 தேதிகளில் தியாகராய நகர் வாணி மகாலில் சிறப்பாகப் பாரதியார் விழாக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாண்டு விழாவுக்குத் தலைவர் பேராசிரியர் திரு அ. சீனிவாச ராகவன். 'கல்கி' ஆசிரியர் திரு சோமு வரவேற்புரை நிகழ்த்துகிறார். குன்றக்குடி அடிகளார் தொடக்க உரை நிகழ்த்துகிறார். கல்வி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கிறார். ராஜாஜியும் பரலி நெல்லையப்பரும் ஆசி கூறுகிறார்கள். கவியரங்கமும் மற்றும் பலரின் சொற்பொழிவுகளும் அகில இந்திய ரேடியோவைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். ராஜம் அவர்களின் இன்னிசை விருந்தும் குமாரி சு. வி. சரோஜா அவர்களின் நாட்டியமும் இருக்கின்றன.

பாரதியார் பிறந்த எட்டையபுரத்திலும் 11, 12 தேதிகளில் இவ்வாண்டு பாரதி விழா கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். டாக்டர் ஏ. வி. செட்டியார், 'கல்கி' ஆசிரியர் திரு சோமு, திரு ம. பொ. சி. முதலியவர்களுடைய சொற்பொழிவும், திரு என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியாரின் ஹாஸ்ய விருந்தும் நடக்கப் போகிறது. பாரதி நாமம் வாழ்க! பாரதி புகழ் வாழ்க!

மலேயா சர்க்காரின் தைரியம்

மலேயா நாடு அரசியல் துறையில் வெகு வேகமாக முன்னேறி வருகிறது. அந்த நாட்டில் துங்கு அப்துல் ரஹ்மான் தலைமையில் ஏற்பட்டுள்ள ஜனப்பிரதிநிதி சர்க்கார் பிரிட்டிஷ் அதிகாரிகள் செய்யத் துணியாத ஒரு காரியத்தைத் தைரியமாகச் செய்ய முன் வந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அதாவது அங்கு சென்ற எட்டு வருஷங்களாக பிரிட்டிஷாருக்கு ஓயாத தொல்லை கொடுத்துச் சிறைப்பட்டுள்ள கம்யூனிஸ்டுகளை யெல்லாம் விடுதலை செய்ய அப்துல் ரஹ்மான் சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். இம் முயற்சியை ஏற்கனவே கடுமையாக எதிர்த்து வந்த பிரிட்டிஷார்கூட அதற்கு இப்போது இசைந்திருக்கிறார்களாம். மலேயாவில் ஜனப்பிரதிநிதி சர்க்கார் ஏற்பட்ட பிறகு கம்யூனிஸ்டுகளின் ஆர்ப்பாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டதென்று தெரிகிறது. அடுத்தபடியாகச் சிறையில் உள்ள கம்யூனிஸ்டுக் கைதிகளை விடுதலை செய்வதன் மூலம் அவர்களுடைய எதிர்ப்பு மறைந்து அந்த நாட்டில் சென்ற எட்டு வருஷங்களாக யாரும் கண்டறியாத அமைதி உண்டாகும். மலேயாவில் சுயாட்சி ஏற்பட வேண்டும் என்பதே தங்களுடைய இலட்சியம் என்று கம்யூனிஸ்டுகள் கூறி வந்தனர். இப்போது அங்கு சுயாட்சிக்கு முதற்படியாக ஜனப்பிரதிநிதி சர்க்கார் ஏற்பட்டிருப்பதால், இனி கம்யூனிஸ்டுகளின் ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமில்லை. மலேயா சர்க்கார் கம்யூனிஸ்டுக் கைதிகளுக்கு மன்னிப்பு அளிப்பதன் மூலம் அந்த நாட்டில் சுயாட்சி ஏற்படுவதற்குத் திருப்திகரமான சூழ்நிலை உண்டாகலாம்.



பரஞ்சோதி

கல்கி

[நாயகா நாயகி பாவத்தில் இறைவனைத் துதித்து எழுதப்பட்ட பக்திப் பாடல்கள் தமிழில் அனந்தம். அந்த மரபை யொட்டி, பேராசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் இயற்றிய பாடல்.]

ஒளியே வடிவமாய் ஓங்குமோர்
ஒப்பில் பரஞ்சோதி தான்
எளியனேன்இங்கு ஏற்றிய மண் விளக்கின்
சுடரிலும் திகழ்ந்தான்

ஆதி அந்தம் இல்லா புவன
அகிலம் படைத்தருளாளன்
பேதையே னெந்தன் நெஞ்சகமதனை
மேவி மகிழ்ந்த என் மணாளன்—அரும்

வேத மந்திர மெல்லாம் ஓதிடும்பொருளாய்
நாத ப்ரணவமான பெருமான்
உயர் போதமில்லாத என் சித்தத்தையும்
உவந்தேற்றே எனக்கருள் புரிவான்

இன்னமுதும் ஆரமுதம் அமரக்கீந்தான்
திருமகட்குக் குறைவிலா நிதிகள் தந்தான்
என்னைத் தேடிவந்தான் அன்பை நாடிவந்தான்
இந்த ஏழையின் நேயம் இரந்தான்

பி. ஸி. ஜி

சென்ற வாரத்தில் செப்டம்பர் 3-ம் தேதியில் ரசிக ரஞ்சனி சபை மண்டபத்தில் பி. ஸி. ஜி யைப் பற்றி ராஜாஜி விஸ்தாரமாகப் பேசினார். கூட்டம் மண்டபம் நிறைந்து வெளியிலும் ஜனங்கள் திரளாக நின்று கேட்டனர். மற்ற விஷயங்களையெல்லாம் விளக்கியதோடு மூன்று மிக முக்கியமான விஷயங்களை எடுத்துக் காட்டினார்:

1. டாக்டர்கள் பேரில் சர்க்காருக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு பி.ஸி.ஜிக்கு விரோதமான அபிப்பிராயங்களை வெளியிட்டால் உத்தியோகத்துக்கே ஆபத்து வரும் என்ற பீதியை உண்டாக்கி விட்டிருப்பது பெருந்தவறு என்றும், இந்த அடக்குமுறை வைத்திய சாஸ்திரத்தின் முன்னேற்றத்திற்கும் உண்மை சமூக நலனுக்கும் பாதகமாகுமென்றும் வன்மையாகக் கண்டித்தார். அவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒரு டாக்டரும் இல்லாதிருந்ததற்குப் பயமே காரணம் என்று விளக்கினார். பயப்படுத்தவில்லை என்று தில்லி மந்திரி சொல்லுவதில் என்ன பயன்! சென்னை மந்திரிக்கும் சென்னை டாக்டர்களுக்கும் உண்மை தெரியும்.

2. நமது நாட்டில் வயது முதிர்ந்தோரைப் பரிசோதித்துப் பார்த்திருப்பதில் ஒரு விஷயம் முடிவாக ஏற்படுகிறது. நூற்றுக்குக் கிட்டத்தட்ட என்பது பேருக்கு மேல் க்ஷய ரோகத்துக்கு இயற்கையிலேயே காப்பு அடைந்திருக்கிறார்கள். உடலில் ரோகம் நின்றிருந்தாலும், அது அடங்கி நிற்கிறது. ஒன்றும் பாதிக்கவில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில், பி. ஸி. ஜி ஊசி குத்துதல் அவசியமுமில்லை, ஒரு பயனுமில்லை. குத்தவும் கூடாது என எல்லா நிபுணர்களுமே ஒப்புக் கொள்ளுகிறார்கள். சிறு குழந்தைகளுக்கு இயற்கைக் காப்பு உண்டாவதற்குள் பி. ஸி. ஜி ஊசி குத்தி அவர்களுக்கும் காப்பு உண்டாக்கலாம் என்பது பி. ஸி. ஜி பிரசார வாதம்.

கொஞ்ச நாள் பொறுத்திருந்தால் அக்குழந்தைகளுக்கும் இயற்கையிலேயே அதாவது நாமாக ஒன்றும் செய்யாமலேயே தன்பாட்டில் காப்பு ஏற்பட்டு விடுமல்லவா, ஏன் சந்தேகத்துக்குரிய ஒரு உயிர்க்கிருமி விஷத்தைப் புகுத்த வேண்டும், என்பது கேள்வி.

இதற்கு பி. ஸி. ஜி வாதர் சொல்லுவது:—

இயல்பிலேயே காப்பு உண்டாகும் என்பது உண்மை. ஆனால் அதை அடைவதற்குள் குழந்தைக்கு எங்கேயாவது தொத்து ஏற்பட்டு நோய் கண்டு இறந்து போகலாம். ஏராளமாகக் குழந்தைகள் க்ஷய வியாதிப்பட்டு இறந்து வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு பி. ஸி. ஜி ஊசி என்கிறார்கள்.

இது அவர்கள் வாதம். இதற்காகத்தான் குத்த வேண்டும் என்கிறார்கள். இந்த வாதம் ஆதாரமற்றது என்பதை ராஜாஜி புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காண்பித்தார். சர்க்கார் கணக்குப்படியே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்பதாம் ஆண்டு ரிப்போர்ட்டில் கண்ட புள்ளி விவரங்கள்:—


சென்னை இராஜ்யத்து முக்கியமான இருபத்தெட்டு முனிஸிபாலிடிகளில் பதிவாகிய க்ஷய ரோக மரணங்களின் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது 4329.

இந்த மொத்தத் தொகையில் பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் மரணம் 183. இவ்வளவே, குழந்தைகளிடையே க்ஷய ரோகத்தால் உண்டான இந்தக் குறைவான மரணக் கணக்கானது சர்க்காரின் பி. ஸி. ஜி பிரசார வாதத்துக்கு அசைக்க முடியாத விடையாக இருக்கிறது.

மொத்த க்ஷயரோக மரணத்தில் நூற்றுக்கு மூன்றேதான் குழந்தைகளின் மரணம். இதை அதிகப்படுத்திச் சொல்வது அக்கிரமம். குழந்தைகளின் பெருவாரியான மரணத்துக்குக் காரணம் நம் நாட்டில் க்ஷயரோகம் அல்ல; வயிற்றுக் கோளாறுதான் காரணம். மேற்கண்ட ரிப்போர்ட்டில் காணும் வயிற்றுக் கோளாறு மரணங்களின் பதிவு மொத்தம் அந்த 28 முனிஸிபாலிடிகளில்:— 5595. இதில் பதினைந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மரணம் 3507.

ஆகவே நம் நாட்டுக் குழந்தைகளைப் பற்றி அநுதாபம் இருந்தால் வயிற்றுக் கோளாறுகளை நிறுத்தும் முயற்சி செய்ய வேண்டும். நல்ல உணவும், சுத்தமான குடிதண்ணீருமே முக்கியமான விஷயம். இதைக் கவனிக்க வேண்டுமே ஒழிய க்ஷயரோகம் வந்து விடுமே என்ற பீதியைப் பரப்பி, பி. ஸி. ஜி ஊசி குத்துவதில் பயனொன்றுமில்லை. வீண் ஆரவாரமும் புது ரோகங்கள் உண்டாக்குவதுமே ஆகும். வெளிநாட்டு ஸ்தாபனங்களைத் திருப்தி செய்யும் ஆசையே இந்த பி. ஸி. ஜி திட்டத்தின் மூர்க்கத்தனத்துக்குக் காரணம். செய்ய வேண்டிய வேலையை விட்டுவிட்டுத் தவறான நாடகம் நடந்து வருகிறது.

3. மேல்நாட்டில் பசுக்களுக்கு வரும் க்ஷய ரோகக் கிருமிகளினின்று உண்டாக்கின இந்த பி. ஸி. ஜி திரவத்தைப் பசுக்களுக்கு வரும் வியாதியைத் தடுப்பதற்காகப் பயன்படுத்திப் பார்த்தார்கள். இதில் பயனில்லை என்று முடிவில் விட்டு விட்டார்கள். இது அமெரிக்க மாட்டு வைத்திய நிபுணர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்தப் பசுக்களின் நோயிலிருந்து எடுத்துப் பதனிட்டதாகச் சொல்லுகிறார்களோ அந்தப் பசுக்களுக்கே அது பயனில்லையென்று கண்டபின் நம்முடைய குழந்தைகளுக்கு ஏன் இது என்று ராஜாஜி கேட்டார். பயனிருப்பதற்கும் பயனில்லையென்பதற்கும் யாதொரு பிரமாணமும் இல்லை. உள்ளே விஷத்தை ஏற்றுவது, அதன்பிறகு வியாதி வராதிருந்தால் 'நம்முடைய ஊசிக் குத்தினால் ஏற்பட்ட நன்மை.' வந்து விட்டால் 'உன்னுடைய அதிர்ஷ்டம்.' இதுவே இந்த அரை வைத்திய வியாபாரம்.


The
TAJ MAHAL
AGRA
FAMOUS throughout INDIA
West End
Watch Co.
BOMBAY • CALCUTTA
SOWAR PRIMA
SPECIAL AUTOMATIC
12''' Size
Everbright Steel Rs. 240
Write for
FREE Catalogue.

சிங்கப்பூருக்கு

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல் மூலம்
செல்லுங்கள்



துரிதமாயும், சுகமாயும் செல்லும்
கான்ஸ்டலேஷன்கள்

பிரயாண மார்க்கத்தில் நேர்த்தியான சேவை

துரிதமாயும், சுகமாயும் செல்லும் ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல் லைனர் மூலம் 12 மணி அவகாசத்திற்கும் குறைந்த நேரத்தில் பம்பாயிலிருந்து சிங்கப்பூர் சேர்ந்து விடலாம். பிரயாண மார்க்கத்தில் குறுகிய ஒரு மணி நேரம் மதுரையில் நிற்கிறது. ருசிமிக்க சைவ சாப்பாடு, மற்றும் புலால் உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

பிரதி வெள்ளிக்கிழமை: பம்பாய் – மதுரை – சிங்கப்பூர்

கீழ்நாடுகளுக்கு
ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல் மூலம்
பறந்து செல்லுங்கள்


ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

12-ஏ, மகாத்மா காந்தி ரோட், பங்களூர் கன்டோன்மென்ட், பங்களூர்
டெலிபோன்: 4153 & 4553

இந்தியா ஹவுஸ், திருச்சி ரோட், கோயம்புத்தூர்
டெலிபோன்: 549

சக்தி மான்ஷன், 55, பெஸன்ட் ரோட், மதுரை
டெலிபோன்: 88194

AII. 3073



85. சீதை மகிழ்ந்தாள்

பயங்கர வானர சேனை லங்கைக் கடியில் பூமி அதிர இறங்கி விட்டது. ஒரு பெரிய வனத்தில் சுகமாகத் தங்கிற்று. யுத்த ஆயத்தமான லங்கா நகரத்திலிருந்தும் ராக்ஷசர்களுடைய கோஷம் கிளம்பிற்று. சங்கம் பேரிகை துந்துபி முதலிய யுத்த வாத்தியங்களின் நாதம் கேட்டதும் வானரர்களுடைய உற்சாகம் இன்னும் அதிகமாயிற்று. ராமசந்திரன் சேனையை அணிவகுத்து யார் யார் எந்த எந்த ஸ்தானத்தில் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்துச் சொன்னபடி சேனை அணிவகுக்கப்பட்டு நின்றது.

லங்கையைப் பார்த்து, "ஆஹா! லக்ஷ்மணா! இந்த நகரத்தின் அழகைப் பார்த்தாயா?" என்றான் ராமன்.

லங்கையைக் கண்டதும் ராமனுடைய உள்ளம் சீதையிருந்த இடம் சென்றது. தானும் படையும் வந்தது இப்போது அவளுக்குத் தெரிந்திருக்குமல்லவா, தைரியம் அடைந்திருப்பாளல்லவா, என்றெல்லாம் எண்ணினான். ஆயினும் அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் சேனையை அணிவகுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

* * *

சுகன் என்ற ஒரு ராக்ஷஸ சாரன் ராவணனிடம் சென்று, "தாங்கள் சொல்லியனுப்பியபடி என் காரியத்தைச் செய்தேன். ஆனால் ஒன்றும் பயனில்லாமல் போய் விட்டது. என்னைத் துன்பப்படுத்தித் திருப்பியனுப்பி விட்டார்கள். விராதன், கபந்தன், கரன் முதலியவர்களை விளையாட்டாகக் கொன்ற ராமன் சுக்ரீவனுடைய சேனையுடன் சீதையைச் சிறை வைத்திருக்கும் இடத்தை அறிந்து கொண்டு லங்கையை அடைந்து விட்டார்கள். கரடிகளும் வானரங்களும் கடலைத் தாண்டி வந்து யுத்தத்துக்குத் தயாராய் லங்கைக்கு முன் நிற்கிறார்கள். தரை காணாமல் சேனை நின்றுவிட்டது. இனிப் பேச்சில் ஒன்றும் பிரயோசனமில்லை. அவர்களுக்கு நம் பேரில் உண்டாயிருக்கும் துவேஷம் யுத்தத்தினால் தான் தீர வேண்டும். வேறு வழியில்லை. மன்னனே! யோசனை செய்து என்ன செய்ய வேண்டியதோ அதைச் செய்வீராக."

இவ்வாறு சொல்லிவிட்டு முடிவில் மெதுவாக, "சீதையைத் திருப்பித் தந்து விட்டால் பிழைக்கலாம்" என்று சொன்னான்!

ராவணனுக்குக் கோபம் பொங்கிற்று. "என்ன சொன்னாய்? சீதையைத் திருப்பித் தருவது என்கிற பேச்சு யாரும் என்னிடம் பேச வேண்டாம். என்னுடைய சக்தியை அறியாமல் இந்தப் பேச்சுப் பேசுகிறீர்கள். தேவ தானவ கந்தர்வ யக்ஷர்கள் யார் வந்தாலும் என்னால் வதம் செய்யப் படுவார்கள். இந்திரனே வந்தாலும் சரி, யமனே வந்தாலும் சரி, என் பாணங்களால் எரிக்கப் படுவார்கள். பார், இந்த அற்ப ராமனும் அவனுடைய சேனையும் எப்படி துவம்சம் ஆகப் போகிறது!" என்றான்.

ராவணன் உண்மையில் அவ்வாறே நம்பினான். தன்னுடைய பூர்வ சரித்திரத்தை எண்ணி எண்ணி அடைந்திருந்த கர்வத்தினால் புத்தி யிழந்து மூர்க்கனாகிப் போய் விட்டான்.

பிறகு இரண்டு அமைச்சர்களை அழைத்துவரச் சொல்லி அவர்களுக்கு

உத்தரவிட்டான். "லங்கைக்குச் சேது கட்டிவிட்டு, பெருஞ் சேனை வந்து இறங்கியதாகச் சாரர்கள் சொல்லுகிறார்கள். இது ஆச்சரியமாக இருக்கிறது. ஆயினும் காரியம் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீங்கள் சென்று சத்துரு சைன்யத்தை நன்றாகப் பார்த்து எனக்கு அவர்கள் பலத்தின் விவரத்தைச் சொல்ல வேண்டும்!" என்று சொல்லி அனுப்பினான்.

அப்படியே அவர்களும் வானர வடிவம் தரித்து வானர சைன்யத்திற்குள் பிரவேசித்து, சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். விபீஷணன் இவர்களுடைய மாறு வேஷத்தைக் கண்டு கொண்டு அவர்களைப் பிடித்து ராமன் முன் கொண்டு போய் நிறுத்தினான்.

"சுவாமி! நாங்கள் தூதர்கள். எங்களுடைய அரசனால் அனுப்பப்பட்டோம். எங்களை விட்டுவிடுங்கள்" என்றார்கள்.

ராமன் சொன்னான்: "இவர்களுக்கு நம்முடைய சேனையைக் காட்டி, எல்லாம் பார்த்துப் போகச் சொல்லுங்கள். இவர்களை விட்டு விடுங்கள்! ஏ, ராக்ஷச தூதர்களே! நீங்கள் திரும்பிச் சென்று ராவணனுக்குச் சொல்லுங்கள். 'எந்த பலத்தை நம்பி நீ சீதையைத் தூக்கி வந்தாயோ அந்த பலம் இன்று சோதனைக்கு உள்ளாகும். உன்னுடைய கோட்டையும் நகரமும் உன்னுடைய சேனையும் நாளையே அழிவதைப் பார்ப்பாய்! நாளைக் காலையில் ராமனுடைய பாணங்கள் உன்மேல் பாயும்.' இப்படி உங்கள் அரசனுக்குச் சொல்லுவீர்களாக!"

ராமன் சொன்னதைக் கேட்ட ராக்ஷச தூதர்களும் "அப்படியே!" என்றார்கள். "உமக்கு ஜெயமாகுக!" என்று தங்களையும் அறியாமல் அவர்களின் வாயினின்று எப்படியோ வழக்கத்தின் வசமாக வெளி வந்தது. இது ஒரு நல்ல நிமித்தமாக எல்லாரும் கருதினார்கள்.

ராவணனிடம் அவர்கள் சென்று, "சுவாமி! விபீஷணனால் நாம் கண்டு பிடிக்கப்பட்டோம். ஆனால் ராமன் எங்களைக் கொல்லாமல் விட்டு விட்டான். அரசனே! நம்முடைய பகைவர்கள் ஒரே உறுதியாக இருக்கிறார்கள். ராமனும் லக்ஷ்மணனும் வாலி தம்பியாகிய வானர ராஜனும் விபீஷணனும் ஒரே மனமாக இருக்கிறார்கள். இவர்களால் நடத்தப்பட்ட இந்த சேனையை நாம் ஜெயிப்பது கஷ்டம். தசரதன் மகன் ராமனைப் பார்த்தோம். அவன் ஒருவனே போதும், நம்முடைய நகரத்தையும் சேனையையும் அழிக்க. இவ்வாறு எங்களுக்குத் தோன்றுகிறது. வானர சேனையின் வீரத்தையும் யுத்தத்துக்கு அவர்கள் ஆத்திரம் கொண்டிருப்பதையும் கண்டோம். இவர்களை விரோதிப்பது நல்லதல்ல. உடனே சீதையை ராமனிடம் ஒப்புவித்து விடுவது நல்லதாகும். யோசியுங்கள்!" என்றார்கள்.

தங்களுடைய அரசனுடைய க்ஷேம நலத்தை உத்தேசித்துத் தூது சென்ற மந்திரிகள் இப்படிச் சொன்னார்கள். ராவணனுக்கோ இப்போது கோபம் தாங்க முடியாமற் போயிற்று.

"உலகமெல்லாம் எனக்கு விரோதமாக நின்றாலும் அதற்காக நான் பயப்பட மாட்டேன். தேவ கந்தர்வ தானவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வந்து என்னை எதிர்த்தாலும் நான் சீதையைத் திருப்பித் தர மாட்டேன். தூது சென்ற நீங்கள் பகைவர்களால் அடிபட்டுப் பயந்து போய் இப்படிச் சொல்லுகிறீர்கள். கோழைகாள், யார் வந்து என்னை எதிர்த்து நிற்க முடியும்? எந்தப் பகைவன் என்னை ஜெயிக்க முடியும்?"

இப்படிச் சொல்லி விட்டுத் தானே அரமனை மாளிகையின் மேல் ஏறிச் சென்று சத்துரு பலத்தை நேரில் பார்த்தான். பிறகு மந்திரிகளோடு நீண்ட நேரம் பேசினான். சத்துரு சைன்யத்திலுள்ள வீரர்கள் யார், யார் என்பதையெல்லாம் தூது சென்று திரும்பியவர்களை விசாரித்தான்.

அவர்களும் ஒவ்வொரு வானர வீரனைப் பற்றியும் அவன் கொண்டு வந்திருக்கும் படையைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். பூ மண்டலத்தில் பலவேறு வனங்கள், மலைகள், நதிப் பிரதேசங்களிலிருந்து வந்து கூடியிருக்கும் அந்தப் பெரிய வானர, கரடிச் சேனையின் பலத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்குள்ள தேக பலமும் வீரியமும், அவர்கள் ராமனிடத்தில் வைத்திருக்-

ளும் அசையாத பக்தியும், அவர்கள் அனைவருக்குள்ளும் இருக்கும் ஒற்றுமையும், ராக்ஷசர்களை வதம் செய்ய வேண்டும் என்கிற ஆத்திரமும் எல்லாம் மந்திரி ஸாரணனால் சொல்லப்பட்டது. வானர சேனைக்குள் புகுந்த போது ஸாரணன் கூடச் சென்ற மற்றொரு மந்திரியும் ராவணனுக்கு வானர வீரர்களைப் பற்றி விசேஷமாகச் சொன்னான்.

"அதோ பார்! அவன் தான் ராமசந்திரன்! அதோ பார்! அவன் பக்கத்தில் லக்ஷ்மணன். நீதி சாஸ்திரம், யுத்த சாஸ்திரம் அனைத்தும் அறிந்தவன். இவன் ராமனுக்கு நடமாடும் இரண்டாவது உயிரும் வலது கையுமாவான். அதோ பார்! அவன் பக்கத்தில் வாலியினுடைய மாலையை அணிந்து கொண்டிருக்கிற சுக்ரீவனை. வாலிக்குச் சம வீரன். அதோ பார்! அவன் பக்கத்தில் உன் தம்பி விபீஷணன். இவர்களை வெல்வது சுலபமல்ல. வெற்றிக்கு வேண்டிய முயற்சிகளை யெல்லாம் யோசித்துச் சரியாகச் செய்வீராக!" என்றான்.

பகைவனுடைய பலத்தைப்புகழ்ந்து பேசிய மந்திரிகளின் பேரில் ராவணனுக்குக் கோபம் மேலும் மேலும் பொங்கிற்று. மூர்க்கனுடைய குணம் இது. உண்மையைச் சொல்லும் தூதர்கள் பேரிலும் க்ஷேமத்தைக் கோரிப் பேசும் மந்திரிகளின் பேரிலும் புத்திசாலியான அரசன் கோபிக்க மாட்டான். ஆனால் ராவணனுடைய மதி இப்போது கலங்கிப் போயிருந்தது! அவனுக்கு இப்போது உண்மையும் பிடிக்க வில்லை, ஹிதமான உபதேசமும் பிடிக்க வில்லை.

ஏதோ யோசனை செய்தான். தன்னுடைய மனப் போக்கை வைத்து ராமனுடைய குணத்தை அளந்தான். இது தானே உலக இயற்கை? சீதை தனக்கு எப்படியாவது உடன் பட்டு விட்டால் ராமன் அவமானமடைந்து மனமுடைந்து திரும்பி விடுவான் என்பது அவன் எண்ணம். ஆனபடியால் இப்போது இன்னொரு முயற்சி செய்து அவளை எப்படியாவது உடன் படச் செய்ய வேண்டும் என்று தான் அறிந்த யுக்தி முறையில் தீர்மானித்தான்.

இதற்காக ஒரு மாயக்கார அரக்கனுடைய உதவியை நாடினான்.

"மின்னல் நாக்கனே! உனக்கு எல்லா மாய வித்தையும் தெரியுமல்லவா? நான் உனக்குச் சொல்லியனுப்புவேன், அப்போது நீ வந்து சீதையின் முன் அவளுடைய புருஷன் ராமனுடைய தலையைப் போல் ஒன்று செய்து அதைக் கொண்டு வந்து வைக்க வேண்டும்" என்று சொன்னான். அந்த மாய வித்தைக் காரனும் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டு தயாரானான்.

அதன்மேல் ராவணன் அசோக வனம் சென்று மறுபடி ஜானகியைக் கண்டு பலவாறு சொல்லி ஏமாற்றி, "உன் புருஷனும் அவன் சேனையும் ஹதம் செய்யப் பட்டார்கள். என் வீரர்கள் கடல் தாண்டிச் சென்று, ராமனும் அவன் வானர சேனையும் களைப்படைந்து தூங்கிக் கொண்டிருந்த சமயத்தில் திடீர் என்று தாக்கி ராமன் உள்பட எல்லோரையும் கொன்று விட்டார்கள். சேனை சிதறி ஓடிப்போயிற்று. உன் புருஷன் ராமனுடைய தலையை என்னுடைய வீரன் எனக்குக் காண்பிக்கக் கொண்டு வந்திருக்கிறான். இன்னும் ஏன் பிடிவாதம் செய்கிறாய்? என் அந்தப்புரத்துக்குத் தலைவியாகிச் சுகமாக இருப்பாயாக. மூர்க்கம் செய்யாதே! லங்கைக்கு அரசி ஆவாய். நான் சொல்வதைக் கேள்!" என்று சொல்லி ஒரு அரக்கியை அழைத்துப் போய், "வித்யுஜ்ஜிஹ்வனை வரச் சொல்!" என்றான்.

அந்த மந்திரவாதி அரக்கனும் ராமனுடைய தலையைப் போலவே இருந்த ஒரு மாய சிருஷ்டியைச் சீதையின் முன்னிலையில் வைத்தான்.

• • •

சீதை பார்த்துத் திடுக்கிட்டாள். தன் கதி இப்படியாயிற்றே என்று பிரலாபிக்கலானாள்.

இதற்கிடையில் ராமனுடைய சேனை லங்கையை நெருங்கி விட்டபடியால் மந்திரிகளும் சேனாபதிகளும் அவசரமாக வந்து ராவணனைப் பார்க்க அனுமதி கேட்டுச் சொல்லியனுப்பினார்கள். ராவணன் உடனே சீதையை விட்டு விட்டு சபைக்குப் போக வேண்டியதாயிற்று.

ராவணனுடைய இருப்பு அந்த மாயத்தில் இன்றியமையாத ஒரு அம்சம். அவன் அந்த இடம் விட்டுப் போனதும் மாயா உருவம் தானாகவே கரைந்து போயிற்று. ராமனுடைய தலை என்று காட்டப்பட்ட பொய்த் தலை புகை போல் மறைந்து போய் விட்டது!

விபீஷணனுடைய மனைவியான ஸரமை என்பவள் சீதைக்குத் தோழியாக இருந்து வந்தவள், ராவணன் செய்த மாய வித்தையைச் சீதைக்கு விளக்கிச் சீதைக்கு ஆறுதல் தந்தாள்.

"ராமனை யாரும் கொல்லவில்லை. அவனும் அவனுடைய பெரும்படையும் லங்கை வந்து சேர்ந்து விட்டது. கடலைத் தாண்ட அற்புதமாக ஒரு சேது கட்டி விட்டு அதன்மேல் மற்றொரு கடலைப் போன்ற பெரும் வானர சேனை வந்து இறங்கி விட்டது. ராக்ஷசர்கள் எல்லோரும் திகிலடைந் திருக்கிறார்கள். ராவணன் உன்னை மாய வித்தையால் ஏமாற்றப் பார்க்கிறான்" என்று சீதைக்கு உண்மையைச் சொன்னாள்.


ஸரமை சீதைக்கு இன்னும் சில விஷயங்களைச் சொன்னாள்:

"ராவணனுடைய மந்திரிகள் பலர் அவனுடைய க்ஷேமத்தை விரும்பி 'சீதையை ராமனிடம் ஒப்புவித்து விடு, அழியாமல் தப்பலாம்' என்று சொன்னார்கள். எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. 'யுத்தத்திலாவது உயிரை விடுவேன், ராமனிடம் நான் வணங்கி நிற்கமாட்டேன். சீதையைத் திருப்பித் தந்து சமாதானம் செய்து கொள்ளமாட்டேன்' என்று ராவணன் தீர்மானமாகச் சொல்லி விட்டான். அம்மையே! உனக்கு ஒரு அபாயமுமில்லை. ராமன் வெல்வான். இந்தக் கொடியவன் மாள்வான்" என்றாள்.

இப்படி ஸரமை சொன்ன சமயத்தில் திடீர் என்று வானர சேனையில் பேரிகைகளும் சங்கங்களும் ஒலிக்கும் சத்தம் கிளம்பிற்று.

ராவணன் அழிந்தான் என்று சீதை நிச்சயம் செய்துகொண்டு மகிழ்ந்தாள். லங்கையில் அதே சமயம் அந்தப் பெருஞ் சத்தத்தைக் கேட்ட அரக்கர்கள் பயத்தால் நடுங்கினார்கள்.


ஆடவர் அல்லது பெண்மணி
கடவுளால் பிராணிகளுக்கு அளிக்கப்பட்ட
இப்பொழுது ரோஹித் மில்கள் கணக்கற்றவை
களும் பிரமிக்கத்தக்கவைகளுமான அந்தவை
நிறங்களைத் திரட்டி அவைகளால்
அச்சடித்து வெளியிட்டிருக்கின்றன.
ரோஹித் துணிகள்—பெண்மணிகளுக்கான
வாயில் புடவைகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட
பருத்தி ஆடைகள், ஆடவர்களுக்கான
ஷர்ட் துணிகள்—எல்லாம் கண்ணைப்பறிக்க
தோற்றமுள்ளவை, ஆனால் விலை அதிகமில்லை.
ரோஹித் துணிகள் தயாரிக்கப்படுகின்றன.
வசீகர நிறம்...
ஆனந்தமயமான வாழ்வு.
ரோஹித் மில்ஸ் லிட்.
ஆமதாபாத் 8
நிறங்கள் மங்குவதில்லை, தரத்திற்கு பங்கம் ஏற்படாது
அது ரோஹித் மில்களால் தயாரிக்கப்பட்டது
மானேஜிங் ஏஜண்ட்: ஸ்ரீ வாடிலால் லல்லுபாய்



வட இந்திய யாத்திரை 7

கங்கை

கங்கை நதியின் கால்வாய்க்கரையில் நின்று பார்த்தால் அது புதிதாக வெட்டிய கால்வாய் தானா என்று வியக்கத் தோன்றும். உலகத்தில் கால்வாய் வெட்டும் இன்ஜினீயரிங் கலை விந்தைகளுக்குள்ளே, கங்கைக் கால்வாய்தான் சிறந்தது என்றும், அது போன்ற அதிசயம் உலகிலேயே வேறு எங்கும் கிடையாது வென்றும் பிரசித்தி பெற்ற இன்ஜினீயரிங் கலை நிபுணர்கள் பலருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டிருந்தோம்.

அது உண்மை. முக்காலும் உண்மை என்பதைக் கங்கைக் கால்வாய் கரையோரமாக அமைந்துள்ள அழகான சாலை வழியே சாதாரணமாகப் போகும்போதே நன்றாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

கங்கைக் கால்வாயை வெட்டும்போது எவ்வளவு முன் யோசனையுடன் வெட்டியிருக்க வேண்டும். அடாடா! எப்பேர்ப்பட்ட இடத்தில் கால்வாய் வெட்டியிருக்கிறார்கள். இமய மலையிலிருந்து உற்பத்தியாகி ஓடி வரும் எண்ணற்ற காட்டாறுகளுக்குக் குறுக்கேயல்லவா வெட்டியிருக்கிறார்கள். ஆகா! அந்தக் காட்டாறுகளுக்குக் குறுக்கே கங்கைக் கால்வாய் போகும்போது எவ்வளவு கம்பீரமாகப் போகிறாள்! எவ்வளவு நுட்பமான இன்ஜினீயரிங் விந்தைகளுக்கு ஆளாகிறாள்! பொங்கி வரும் வெள்ளப் பிரவாகத்தை எவ்வளவு தூரம் அடக்கி ஒடுக்கிக் கொண்டு போகிறாள்! அந்த விந்தைகள் எல்லாம் வெறும் மாயத் தோற்றமா! கண்கட்டு வித்தையா! என்று எண்ணிச் சந்தேகப்படுகிறோம்.

அங்கெல்லாம் கங்கை நம்முடன் நேருக்கு நேர் பேசுகிறாள்! இப்படிப் பல உருவங்கள் எடுத்துச் செல்லத் தான்பட்ட கஷ்டங்களை யெல்லாம் விவரமாகச் சொல்லுகிறாள். தான் செல்லும் பாதையில் குறுக்கிடும் பயங்கரக் காட்டாறுகளை யெல்லாம் சில இடங்களில் முகமன் கூறி வரவேற்கிறாள்! சில இடங்களில் அந்த ஆற்றை அமுக்கிவிட்டுத் தான் மேலே செல்லுகிறாள்! சில இடங்களில் தானே அடங்கி ஒடுங்கி அந்த ஆற்றுக்கு அடியில் புகுந்து கொண்டு செல்கிறாள்! இந்தக் காட்சிகள் மறக்க முடியாத விந்தைக் காட்சிகள்.

கால்வாய் இன்ஜினீயரிங் கலை நுட்பமெல்லாம் நிறைந்த, இந்தக் கங்கைக் கால்வாயை வெட்ட எவ்வளவு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உழைத்துப் பாடு பட்டிருக்க வேண்டும்! எத்தனை இன்ஜினீயர்கள் வேலை செய்திருக்கவேண்டும்! எவ்வளவு நீடித்த நாட்கள் அவர்கள் எல்லாம் சேர்ந்து தொண்டாற்றியிருக்க வேண்டும்! ஒரு ஆண்டு இரண்டு ஆண்டு நடந்திருக்க வேண்டிய வேலையா இது! பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்திருக்க வேண்டிய வேலையாக அல்லவா தோன்றுகிறது. 1939-ம் ஆண்டில் ஆரம்பித்து 1949-ம் ஆண்டில் கால்வாய் வெட்டும் வேலையை முடித்திருக்கிறார்கள். பத்து ஆண்டுகள் இடைவிடா முயற்சியுடன் ஈடுபட்டு





பேசுகிறாள்

நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனாலும் 1854-ம் ஆண்டில்தான் அதாவது கங்கைக் கால்வாய் வெட்டி முடித்த ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் கால்வாயின் தண்ணீர் விவசாயிகளுக்கு நேரிடையாகப் பயன்பட ஆரம்பித்தது.

அந்தக் காலத்திலேயே கங்கைக் கால்வாய் வெட்டுவதற்கு மூன்று கோடி ரூபாய் செலவானதாம். மூன்று கோடி ரூபாயும் லட்சக் கணக்கான மக்களும் இரவு பகல் என்று பாராமல் பத்து ஆண்டுகள் பாடுபட்டு கங்கைக் கால்வாயை வெட்டி உருவாக்கி யிருக்கின்றனர். அவர்களுடைய உழைப்பும் தியாகமும் வீண் போக வில்லை. கங்கைக் கால்வாயும் அதன் கிளைக் கால்வாய்களுமாக மூவாயிரம் மைல் நீளமுள்ள அதன் அமைப்பு சென்ற நூறு ஆண்டுகளாக எத்தனையோ புண்ணியம் செய்து வருகிறது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஒன்பது ஜில்லாக்களை வளப்படுத்திக் கோடிக் கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்து வருகிறது. நூறு வருஷத்துக்குப் பிறகு இன்றைய தினம் வரையில் உத்தரப் பிரதேசத்தில் கொடிய பஞ்சம் ஏற்படாமல் மக்கள் வயிறார உண்டு வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் கங்கைக் கால்வாய்தான்.

கங்கைக் கால்வாயைப் புதிதாக வெட்டி, அதற்கு உயிர் ஊட்டி, அதுவும் அழிவில்லாத உயிர் ஊட்டி, நம்முடன் நேருக்கு நேர் பேசவும், தன் வீரம் நிறைந்த அந்தக் காலத்துக் கதையைச் சொல்லவும் செய்திருக்கும் இன்ஜினீயரிங் கலைச் சிறப்பை அறிந்து கொள்ள அதன் வழியே சென்று அங்கு உள்ள சில இன்ஜினீயரிங் விந்தைகளைப் பார்ப்போம்.

இன்ஜினீயரிங் விந்தைகள்

ஹரித்துவாரத்தில் இருந்து சுமார் ஒன்றரை மைல்களுக்கு அப்பால் உள்ள மாயாபூர் என்னும் இடத்தில், பண்டாக்கள் வெட்டிய பழைய கால்வாயிலிருந்துதான் புதிய கால்வாயை வெட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்திருக்கிறார்கள். பழைய கால்வாய்க்கு எதிரில் ஒரு அணையும், தண்ணீரைத் திறந்து மூடுவதற்கு வேண்டிய வசதிகளுடன் கூடிய பல மதகுகளும் அமைத்திருக்கிறார்கள்.

ஹரித்துவாரத்தில் இருந்து ரூர்க்கி வரையில் இருபது மைல் தூரத்துக்குள்தான் கால்வாய் வெட்டுவதில் பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டன. அந்த இருபது மைல் தூரத்துக்குள் பல காட்டாறுகள் குறுக்கிடுகின்றன. அந்த ஆறுகளில் மழைக் காலத்தில் வெள்ளம் ஏராளமாக வரும். கோடையில் தண்ணீரே இல்லாமல் வறண்டு கிடக்கும். மழைக் காலத்தில் காட்டாற்றில் வரும் வெள்ளம் கங்கையில் வரும் வெள்ளத்தை விட அதிகமாக இருக்கும். அந்தத் தண்ணீர் கங்கைக் கால்வாயில் புகுந்து விட்டால் அவ்வளவுதான்! கங்கைக் கால்வாய் கரையோரமாக உள்ள கிராமங்கள் வெள்ளத்தில் மிதக்க வேண்டியதுதான். கங்கைக் கால்வாய்த் தண்ணீரை உபயோகித்து விவசாயம் செய்த வயல்கள் எல்லாம் அழிந்து நாசமாகப் போக வேண்டியதுதான். அதனால் அந்தக் காட்டாறுகளுக்கும், கங்கைக் கால்வாய்க்கும் தொடர்பு இல்லாமல் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வதற்கு இன்ஜினீயர்கள் பட்டிருக்கும் கஷ்டங்கள் கற்பனை செய்து காண முடியாது.





கங்கைக் கால்வாய்க் கரைக் காட்சி. காவல் காக்கும் கம்பீரமான சிங்கங்கள் படுத்திருக்கும் கோலத்தைப் பாருங்கள்!

மாயாபூரிலிருந்து ரூர்க்கி செல்லும் வழியில் ஐந்தாவது மைலில் ராணிபூர் என்ற காட்டாறு கங்கைக் கால்வாயைக் குறுக்கிடுகிறது. அந்த ஆற்றுக்கு வணங்கி வழிவிடும் நிலையில் கங்கைக் கால்வாய் இருக்கிறது. அதாவது ராணிபூர் நதிக்கு அடியில் கங்கைக் கால்வாய் ஓடுகிறது. இது ஒரு அதிசயம். கம்பீரமாக ஓடிவரும் கங்கைக் கால்வாய் ராணிபூர் நதிக் கரையில் வந்தவுடன் அப்படியே பூமிக்குள் அமுங்கி மறைந்து விடுகிறது. விசாலமான அந்த ராணிபூர் ஆற்றுக்கு அப்பால் மீண்டும் கங்கைக் கால்வாய் மேல் எழுந்து வந்து துள்ளிக் குதித்து ஓடுகிறது. இப்படிப் பூமிக்குள் புகுந்து கிளம்பும் கால்வாய் அமைப்புக்கு ''சூப்பர் பாஸேஜ்'' என்று பெயர்.

இந்த சூப்பர்பாஸேஜின் நீளம் இருநூறு அடி. இருபத்தைந்து அடி அகலத்துக்கு எட்டு மதகுகள் பூமிக்குள் புகுந்து ராணிபூர் ஆற்றுக்கு அப்பால் மேல் எழுந்து வருகிறது. இந்த மதகுகள் வழியே செல்லும் நீருடன் மரம் மட்டைகள் முதலியன சென்று அடைத்துக் கொள்ளாமல் ஒவ்வொரு மதகு வாசலிலும் சல்லடைகள் பொருத்தி யிருக்கின்றனர். இதைத் தவிர இருபத்தைந்தடி அகலம் உள்ள தனிக் கால்வாய் ஒன்றும் படகுகள் போக்குவரத்துக்காக அமைந்திருக்கிறது.

கங்கைக் கால்வாய் விவசாயத்துக்காக வெட்டிய கால்வாய் மட்டுமல்ல. போக்குவரத்து சாதனத்துக்கும் உபயோகமாகி வருகிறது. கங்கைக் கால்வாயில் இருபது அடி அகலம் உள்ள படகுகள் செல்லலாம். படகுகள் போக்குவரத்துக்குச் சௌகர்யமாக இருப்பதற்காகவும் வேண்டி முன்யோசனையுடன் கால்வாயை வெட்டி யிருக்கிறார்கள். அந்தப் படகுகள் 'சூப்பர் பாஸேஜ்' வழியாகச் செல்ல வேண்டுமே! அதாவது படகுகளும் பூமிக்கு அடியில் புகுந்து சென்று மீண்டும் மேலே வந்து அதன் பிரயாணத்தைத் தொடங்க வேண்டும் அல்லவா! அதற்காக வேண்டி சூபர் பாஸேஜ் வரும் இடத்துக்குச் சற்று தூரத்துக்கு முன்னாலேயே இருபத்தைந்தடி அகலத்துக்கு ஒரு தனிக் கால்வாய் அமைத்திருக்கிறார்கள். இந்தக் கால்வாயில் படகு புகுந்து செல்லும் முறை அதிசயமானது.

படகு கால்வாயோடு வருகிறது. சூப்பர் பாஸேஜ் உள்ள இடத்துக்கு வந்தவுடன் படகுப் போக்கு வரத்துக்கு என்று இருக்கும் தனிக் கால்வாயில் படகைத் திருப்புகிறார்கள். படகு சூப்பர் பாஸேஜின் படகுப் பாதைக்கு நேராக வந்தவுடன் அந்தக் கால்வாய்த் தண்ணீரை அடைத்து விடுகிறார்கள். கால்வாய்த் தண்ணீரை அடைத்தவுடன் எஞ்சியுள்ள தண்ணீர், அதாவது படகு நிற்கும் இடத்தில் உள்ள தண்ணீர்மட்டும் சூப்பர் பாஸேஜ் வழியாகப் புகுந்து மேல் செல்லுகிறது. அப்படிச் செல்லுவதால் படகு நிற்கும் இடத்தில் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே போகிறது. படகும் கீழே இறங்கிக் கொண்டே போகிறது. தண்ணீர் குறைந்தவுடன் படகு பூமிக்கு அடியில் சுமார் இருபது அடிக்குக் கீழே சென்றுவிடுகிறது. அப்பொழுது இருபது அடிக்குக் கீழே உள்ள மதகு வழியாக ராணிபூர் நதிக்கு அடியில் படகு தாராளமாகச் செல்ல முடிகிறது. ராணிபூர் நதிக்கு அப்பால் படகு சென்றவுடன், ஏற்கனவே படகுப் பாதைக் கால்வாய்க்குள் தண்ணீர் வராமல் மூடி இருந்தார்கள் அல்லவா! அதை மெதுவாகத் திறந்து விடுகிறார்கள். தண்ணீர் அந்தக் கால்வாயில் புகுந்து ஓடுகிறது. தண்ணீர் ஓட ஓட இருபது அடிக்குக் கீழே உள்ள கால்வாயில் தண்ணீர் நிரம்புகிறது. படகு மேலே வருகிறது. கங்கைக் கால்வாய் தண்ணீர் உயரத்துக்குப் படகு வந்தவுடன், அந்தப் பக்கத்தில் உள்ள படகுக் கால்வாய்க் கதவைத் திறந்து விடுகிறார்கள். படகு எவ்விதத் தடங்கலும் இல்லாமல் மீண்டும் தன்னுடைய பிரயாணத்தைத் தொடங்கி விடுகிறது. சூயஸ் கால்வாய் வெட்டிக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களே, அதே முறைதான் இதுவும்.

அடாடா! இந்த இடத்தில் இன்ஜினியரிங் கலைத் திறமையைப் போற்றிப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. மனிதனின் அறிவுத் திறமைக்கு அத்தாட்சியாக விளங்குகிறது இந்த சூப்பர் பாஸேஜ்!

• • • • • •

ராணிபூர் சூபர் பாஸேஜ் மதகைத்தாண்டி இன்னும் நாலு மைல் சென்றால் பத்ரி என்ற காட்டாறு மீண்டும் குறுக்கிடுகிறது. இந்த இடத்திலும் கங்கைக் கால்வாயில் ஒரு சூப்பர் பாஸேஜ் கட்டி யிருக்கிறார்கள். இந்த சூபர் பாஸேஜூம் இருநூறு அடி அகலமும், படகுப் பாதையும் கொண்டவைதான்.

பத்ரி சூபர் பாஸேஜ் மதகைக் கடந்து இன்னும் நாலு மைல் சென்றால் ராத்மௌ நதி குறுக்கிடுகிறது. தனௌரி என்ற ஊருக்கு அருகில் இந்த ராத்மௌ நதியும், கங்கைக் கால்வாயும் ஒன்றுடன் ஒன்று கூடிக் குலாவி விட்டுப் பிறகு தனித்தனியே பிரிந்து செல்லுகின்றன. இந்த முறைக்கு ''லெவல் கிராஸிங்'' என்று சொல்லுகிறார்கள். அதாவது ரயில்



அழுக்கை அறவே அகற்றுங்கள்!



காவேரி
சூபர் சோப்

அகத் தூய்மைக்கு முதற் படி புறத்தூய்மை என்பது வழக்கு. அழுக்கையும், துர் நாற்றத்தையும் அகற்ற சாலச் சிறந்தது 'சால்முக்ரா' எண்ணெ சேர்ந்த காவேரி சூபர் சோப்.

இன்றே ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள் :

மேட்டூர் செமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் : சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

பெரிய ஜங்ஷனில் சாலைந்து தண்டவாளங்களைத் தாண்டிக் குறிப்பிட்ட பிளாட்பாரத்துக்கு வந்து நிற்கிறது. பிறகு அங்கிருந்து கிளம்பித் தண்டவாளங்களைக் கடந்து விட்டு வழக்கமான தன்னுடைய தண்டவாளத்தில் செல்கிறதல்லவா! அது போலவே கங்கைக் கால்வாயும் ராத்மௌ நதியுடன் கலந்து உறவாடிப் பிரிந்து செல்லுகிறது.

ராத்மௌ நதியும், கங்கைக் கால்வாயும் கலந்து ஓடும் இடத்தில் வழக்கம் போல படகு செல்வதற்குத் தனியே ஒரு பாதை அமைத்திருக்கிறார்கள். காட்டாற்றில் சில சமயங்களில் தண்ணீர் குறைவாக வரும். சில சமயங்களில் தண்ணீரே இருப்பதில்லை. அந்தமாதிரி சமயங்களில் கங்கைக் கால்வாயின் தண்ணீர் காட்டாற்றில் ஓடி விடாமல் இருப்பதற்காக ஒரு அதிசய அணை கட்டியிருக்கிறார்கள். பத்தடி அகலமும் வேண்டியளவு உயரமும் செய்து கொள்வதற்கு வசதியாக நாற்பத்தேழு இரும்பு கதவுகள் கொண்ட அணை அது. காட்டாற்றில் தண்ணீர் குறையும் போதெல்லாம் அந்த அணைக் கதவுகளை உயர்த்தி கங்கைக் கால்வாய் தண்ணீர் காட்டாற்றுக்குள் போகாமல் தடுத்து விடுகிறார்கள்.

பத்ரி காட்டாறு கங்கைக் கால்வாயை எத்தனையோ தொல்லைகளுக்கு ஆளாக்கிக் கொண்டு வந்திருக்கிறது. காட்டாற்றில் திடீர் திடீர் என்று எதிர்பாராத வெள்ளம் வந்து, கங்கைக் கால்வாயையே உடைத்து நாசம் செய்து விடுமாம். பிறகு பதினாயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து கால்வாயைச் செப்பனிட்டுச் சீர் செய்வார்கள். அந்த ஆறு கங்கைக் கால்வாயைத் தாண்டிப் போய்விழும் இடத்தில் பூமியைப் பத்தடி இருபது அடி என்று ஆழமாகக் குழி பறித்து விடுகிறது. இதனாலும் கங்கைக் கால்வாய் பல ஆபத்துக்கு உள்ளாக நேரிட்டிருக்கிறது. 1947-ம் ஆண்டு பத்ரி ஆற்றில் வந்த வெள்ளம் போல் இது வரையில் வந்ததில்லை. அந்தச் சமயத்தில் விநாடிக்கு எழுபதினாயிரம் கன அடி தண்ணீர் அந்த ஆற்றில் வந்ததாம். அதனால் கங்கைக் கால்வாயில் இருந்த 'லெவல் க்ராஸிங்' பாலத்தின் அமைப்பு பெரிதும் பாதிக்கப்பட்டுச் சிதைந்து சீர்குலைந்து விட்டது.

இவ்வாறெல்லாம் கங்கைக் கால்வாயைச் சோதனைக்கு உள்ளாக்கி வந்த பத்ரியை இப்பொழுது இன்ஜினீயர்கள் கட்டுப்படுத்தி விட்டார்கள். அதில் எவ்வளவு வெள்ளம் வந்தாலும் கங்கைக் கால்வாயைப் பாதிக்காத முறையில் பல சீர்திருத்தங்கள் செய்து விட்டார்கள். பத்ரி ஆறு கங்கைக் கால்வாயைத் தாண்டிச் செல்லும் இடத்தில் பூமியைத் தோண்டி நாசம் செய்யாமல் சிமின்டைக் கொண்டு பலமாதிரி கட்டைகள் கட்டி பத்ரியின் வேகத்தைத் தடுத்து அமைதியாகச் செல்லும்படி செய்திருக்கிறார்கள். பூமியைத் தோண்டிக் குழி பறித்து விளைக்காமல் செய்திருக்கும் இன்ஜினீயரின் வித்தை மிக்க அதிசயமானது.

* * *

பத்ரி லெவல் க்ராஸிங் பாலத்தைக் கடந்து இன்னும் ஒன்பது மைல் அப்பால் சென்றால் சோலனி ஆறு கங்கைக் கால்வாயைக் குறுக்கிடுகிறது. இந்த இடத்தில் கங்கைக் கால்வாய் சோலனி ஆற்றைக் கீழே அமுக்கிவிட்டு ஜம்மென்று மேலே ஓடுகிறது. இவ்வாறு ஓடும்படி அமைத்திருப்பதற்கு "அக்வாடட்" என்று பெயர். இந்த அக்வாடட் பாலம் உலகில் உள்ள அக்வாடட் பாலங்கள் எல்லாவற்றையும் விடப் பெரியது. அதைவிட அதிசயம், இரும்பும், சிமின்டும் இல்லாமல் கட்டியிருப்பது. இந்த அக்வாடட்டின் அடிதளத்தின் அகலம் இருநூற்று ஐம்பதடி. மேல் பகுதி மூன்னூற்று ஐம்பதடி அகலம். ஒருமாதிரி முக்கோண வடிவத்தில் அமைந்திருக்கிறது. நீளம் தொள்ளாயிரத்து இருபது அடி.

அடாடா! அந்த அக்வாடட்டின் அழகை எப்படிச் சொல்வேன். அதன் கரையில் கார் பஸ் முதலியவைகள் செல்வதற்கு வேறு சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலையில் மத்தியில் நின்று குனிந்து பார்த்தால் சோலனி ஆறு தண்ணீர் இல்லாமல் பயங்கரமாக வாயைப் பிளந்து கொண்டு இருக்கிறது. மழைக் காலத்தில் அந்த ஆற்றில் இரு கரையும் ததும்பி வழியத் தண்ணீர் ஓடுமாம். அப்போது பார்ப்பதற்குப் பத்தாயிரம் கண்கள் வேண்டுமாம். அவ்வளவு அபாரமான காட்சியாக இருக்கும் என்று எங்களுடன் வந்த இன்ஜினீயர் விளக்கிக் கொண்டிருந்தார்.

சோலனி அக்வாடட்டுக்கு மூன்று மைல்களுக்கு அப்பால் ரூர்க்கி இருக்கிறது. ரூர்க்கி நகரத்துக்குச் செல்லும் சுமார் மூன்று மைல் தூரம் வரையில் கங்கைக் கால்வாயின் இரு கரைகளிலும் செங்கல்லினால் படித்துறை கட்டியிருக்கிறார்கள். அக்வாடட் ஆரம்பத்தில் கால்

வாய்க் கரையில் உயரமான மேடை கட்டி அதன்மீது இரண்டு சிங்கங்கள்— பெரிய கோயில்களில் நந்தி படுத்திருக்குமே அது போல கங்கைக் கால்வாய் வரும் திக்கை நோக்கிப் படுத்திருக்கின்றன. மூன்று மைல்களுக்கு அப்பால் ரூர்க்கி நகரத்துக்குள் இதே போல இரண்டு சிங்கங்கள் கால்வாய் செல்லும் திசையை நோக்கிப் படுத்திருக்கின்றன. அந்தக் கம்பீரமான சிங்கங்கள் படுத்திருக்கும் முறையானது இரவும் பகலுமாக அந்தக் கரையைக் கவனத்துடன் காவல் காத்துக் கொண்டிருப்பது போன்ற பிரமையை உண்டாக்குகிறது.

கங்கைக் கரையின் இருபுறத்திலும் கரையைப் பலப்படுத்துவதற்காகச் செங்கற்களைக் கொண்டே சுவர் அமைத்திருக்கிறார்கள். நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிமிண்ட் கண்டு பிடிக்காத அந்தக் காலத்தில் கட்டிய அந்தச் சுவர்கள் இன்றும் சிதைந்து போகாமல் உறுதியுடன் இருக்கின்றன. இந்த விவரங்களை எல்லாம் இன்ஜினியர் விளக்கினார்.

சிங்கங்கள் படுத்திருக்கும் கங்கைக் கரையிலிருந்து கரையோரமாகப் பிரவேசிக்க ஆரம்பித்தோம். பிரவேசித்ததுதான் தாமதம். அப்படியே அசந்து போய் விட்டோம். அப்பேர்ப்பட்ட அற்புதமான காட்சிகள் கங்கைக் கால்வாயின் இரு கரையிலும் தென்பட்டன.

அதை எழுத்தில் வர்ணிப்பது முடியாத காரியம். அப்படியே வர்ணித்தாலும் படிப்பவர்கள் மனக்கண்முன்னால் அந்தக் காட்சியைக் கொண்டுவருவது அசாத்தியம். ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகக் கங்கையில்

> **ஞானி**
>
> தெய்வமே தாயென்று நம்பி எவன்
> குழந்தை போல் நடக்கிறானோ
> அவனே ஞானி. — பாரதியார்

இறங்கிக் குதூகலத்துடன் நீராடுவதற்காகவே கங்கைக் கால்வாய் வெட்டியிருக்கிறார்களோ என்று எண்ணி வியக்கத் தோன்றுகிறது.

கங்கைக் கரையோரக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சென்றபோது ஒரு இடத்தில் எங்களையறியாமல் நின்று விட்டோம். பருவ மங்கை யொருத்தி கையிலே உருண்டையான ஒரு தடியை வைத்துக் கொண்டு எதையோ அடித்துக் கொண்டிருந்தாள். அவள் கையால் அடிபடக் கொடுத்து வைத்தது யார் என்று பார்த்தோம். வேறு யாருமில்லை. அவள் அணிந்திருந்த புடவையின் ஒரு பகுதிதான் என்பதைத் தெரிந்து கொண்டோம். அந்தப் பக்கத்தில் எல்லாம் துணியைத் துவைப்பதற்குப் பதிலாகத் தடிகொண்டு அடிக்கிறார்கள்.


அடாடா! அந்தப் பெண்மணி துணியைத் தடியால் அடிப்பது ஏதோ நாட்டிய மேடையில் நடனம் ஆடுவது போன்று இருந்தது. அவள் பாவத்தோடு துணியை அடித்தாள். பாவம் என்றால் ஒரு வகையானதல்ல. அவள் உட்கார்ந்திருந்த நிலையிலே பாவம்; தடியை ஓங்கி அடிப்பதில் பாவம்; அப்பொழுது ஏற்பட்ட உடம்பின் அசைப்பிலே பாவம்; கழுத்தின் வளைவிலே பாவம்; கைகளின் நெளிவிலே பாவம்; அவள் முதுகில் புரண்டு விளையாடும் கூந்தல் கூட அல்லவா பாவத்துடன் ஆடிப் புரண்டு கொண்டிருந்தது.

இந்தக் கங்கைக் கால்வாய் காட்சியைப் பார்த்து விட்டு நாங்கள்தான் மெய்ம்மறந்து நின்றோம்என்பதில்லை. கங்கையே அங்கு சற்றுத் திகைத்து நின்று விட்டுத்தான் போகிறாள். வேகமாக வீசிக் கொண்டிருந்த காற்று அங்கு வந்து சற்று நின்று அந்தக் காட்சியைப் பார்த்து மெதுவாக வீசிக்கொண்டு போனது. இதை விட அதிசயம் வானத்தில் சூரியனும் அந்த மோகனக் காட்சியைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததுதான்.

இதெல்லாம் அப்படி என்ன விசேஷம்! நம் ஊர் காவேரிக் கரையில் காணாத காட்சிகளா என்று கேட்கத் தோன்றும். கங்கைக் கால்வாய்க் கரைக்குச் சென்று இதுபோன்ற எழில் மிக்க காட்சிகளைப் பார்த்து உங்கள் கழுத்து வலிக்கும் போதல்லவா உங்களால் அதை உணர முடியும்!

** ** **

நமது சுதந்திர சர்க்கார் கங்கைக் கால்வாயில் இப்பொழுது இன்னும் ஆயிரம் மைல் நீளத்துக்குப் பல கிளை நதிகள் வெட்டியிருக்கிறார்கள். அப்படி வெட்டுவதற்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்கும் கங்கைக் கால்வாய் முகத்துவாரமான மாயாபூர் அணை பார்க்க வேண்டிய அற்புத அணை. அந்த அணையையும், அதை யொட்டி கங்கைக் கால்வாயில் அமைந்திருக்கும் அருவி மின்சார அதிசயங்களையும் பார்த்து வருவோம், வாருங்கள்! (தொடரும்)



பரிபூர்ண மாக நம்புவ தற்க்கும்...
கவர்ச்சிகர மான அமை ப்புக்கும்...
உட்பூச்சுக்கு ம்,வெளிப்பூச் சுக்கும்...
நேர்த்தியான வர்ணவேலைக ளுக்கும்...
அதைப்பற்றி சந்தே கமே இல்லை...அதுதா ன் எல்லோரும் விரும் பும் நேர்த்தியான ஸிந் தடிக் எனமல்...
ஷாலிமார் ஸூபர்லாக்
ஸிந்தடிக் எனமல்
ப்ரஷ்ஷினுல் பூசலாம், தோய்த்துபூசலாம், அல்லது ஸ்பிரே பண்ணலாம். பலதடவைகள் கழுவுவதற்கு ஏற்றது. 38 விதபளபளப்பான கலர்களில் கிடைக்கின்றது.



கிழவரின் புன்னகை

அகிலன்

மிகப் பெரிய விஞ்ஞான மேதையான அந்தக் கிழவர் இப்படிச் செய்வாரென்று யாரும் எதிர்பார்க்க வில்லை. உலகமே திடுக்கிட்டது. வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை, கிழக்கோடியிலிருந்து மேலக்கோடி வரை, எங்கெல்லாம் நாகரிகம் பரவி உள்ளதோ அங்கெல்லாம் இந்தச் செய்தி அதிர்ச்சி தந்தது.

விஞ்ஞானத்தில் அற்ப அறிவு உள்ளவர்களுக்குக் கூட அவரைப் பளிச்சென்று தெரியும். அத்தனை பெரிய மனிதர்.

பத்திரிகைகள் முதல் பக்கத்தில் அந்தச் செய்தியை வெளியிட்டன:

மேதையின் மறைவு.
விஞ்ஞானியின் விபரீத முடிவு.
அறிஞரின் தற்கொலை!

ஆம், திடீரென்று ஒரு நாள் காலை அவருடைய அறையில் கிழவரைக் காணவில்லை. ஒரு துண்டுக் காகிதத்தில், "நான் இன்றிரவு கடலில் விழுந்து இறக்க முடிவு செய்து விட்டேன். போய் வருகிறேன்" என்ற குறிப்பு மட்டும் மேஜை மேல் காணப்பட்டது.

அவருக்குச் சமையற்காரியாகவும் பணிப்பெண்ணாகவும் இருந்தவளிடம் விசாரித்தனர். அடிக்கடி அவர் தற்கொலை பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் என்பதைத் தவிர, வேறொன்றும் துப்புக் கிடைக்க வில்லை.

அவர் வசித்த கிராமத்தை அடுத்த ஆழ் கடலை வலை போட்டு அரித்துப் பார்த்தார்கள். முக்கிய நாடுகளுக்குத் துப்பறியும் நிபுணர்களை அனுப்பிச் சல்லடை போட்டார்கள். ஒன்றிலும் பலன் கிடைக்க வில்லை. உலகம் அப்போது அடுத்த பெரும் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்ததால், விஞ்ஞானியைப் பற்றிய சலசலப்பு விரைவிலேயே அடங்கி விட்டது. அதிகமாக அது அந்த ஒரு மனிதரின் கஷ்டத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை.

ஆனால் கிழவர் அப்போது உயிருடன் தான் இருந்தார்!

அவர் பத்திரமாய்த் தம்முடைய இயந்திரப் படகில் ஆயிரம் மைலுக் கப்பாலுள்ள ஓர் சிறு தீவுக்குப் போய்ச் சேர்ந்தார். காட்டுமிராண்டிகள் வசித்த தீவு அது. இருநூறு பேர்கள் கூட அங்கே இருந்தார்களா என்பது சந்தேகம். ஏற்கனவே அந்தத் தீவுக்கும் அவருக்கும் சிறு தொடர்புண்டு. அதன் தலைவன் அவருக்குப் பழக்கமானவன்.

அவர் சென்ற விமானம் நொறுங்கி விழுந்த சமயம் அவர் அந்த மனிதர்களால் காப்பாற்றப் பட்டார். அதுவே முதல் பழக்கம்.

பிறகு ஓய்வுக்கு அவராகவே அங்கு போய் ஒரு மாதம் தங்கித் திரும்பினார். அவர்களுடைய மொழிகூட விஞ்ஞானிக்குக் கொஞ்சம் தெரியும்.

காட்டுமிராண்டிகள் என்று நகரத்தவர்களால் அழைக்கப் பெற்ற அந்தத் தீவினரிடத்தில் அவருக்கு அளவற்ற அன்பு. ஆனால் அவர்கள் மொழியில் காட்டுமிராண்டிகள் என்றால் வெறி பிடித்த மிருகங்கள் என்று பொருள்.

கிழவர் தங்களிடம் நாகரிகத்தைப் பரப்பவோ, மத போதனை செய்யவோ, பகுத்தறிவைப் புகட்டவோ வரவில்லை என்று தெரிந்த பிறகு அவரைத் தங்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டார்கள். பிரியத்தோடு பழகினார்கள்.

கிழவருக்கு அந்தத் தீவு சொர்க்கமாகத் தோன்றியது.

இயற்கைத் தேவி அங்கு இன்ப நடனம் புரிந்தாள். அருவியாக அவள் ஓடிக் குதித்

தான்; மலர்களாக அவன் விழித்துச் சிரித்தான்; கனிகளாக அவன் குலுங்கி விம்மினான். அவன் இதழூறும் தேன் துளிகள் ஆயிரம் ஆயிரம் மலர்ச் சிறைகளில் நறுமணத்தால் சூழப்பெற்றுச் சுவைப்பாரற்றுக் காத்திருந்தன. நீண்டு வளர்ந்த கடற்கரைத் தென்னை மரங்களின் உயரத்தில் அவன் லட்சியக் கனவாக வளர்ந்தான். மலைகளின் சிகரத்தில் அவன் அமைதியின் சொரூபமாய் மோனத் தவமிருந்தான்.

கிளாக் காலத்தில் ஆணும் பெண்ணுமாய் அவர்கள் கூடிப் புரிந்த ஆனந்த நடனம் கண்டு, 'எத்தனை இன்பம் இந்த உலகில்!' என்று பூரித்தார் விஞ்ஞானி.

அவர் ஏதோ ஓர் நோக்கத்துடன்தான் அங்கு வந்திருக்க வேண்டும்.

தம்முடன் இயந்திரப் படகில் எடுத்து வந்த சில கருவிகளை அந்த மனிதர்களின் உதவியால் அவர் ஓர் மலை உச்சிக்குக் கொண்டு சேர்த்தார். பக்கத்து அருவியின் வேகத்தில் இயங்குகிற மாதிரி ஓர் பொறியைப் பொருத்தினார். நீண்ட கம்பிகளால் அந்தப் பக்கமெல்லாம் ஒன்றாக இணைத்தார். இத்தனைக்கும் அவர்களுடைய பேருதவி கிடைத்தது.

தீவின் தலைவன் ஆச்சரியத்துடன் அவரைக் கேட்டான்: "இதெல்லாம் என்ன!"

"வெளி உலகத்தில் நடப்பதைப் பார்க்கக் கருவிகள் அமைக்கிறேன். விரைவில் நீங்கள் எல்லோருமே வெளிநாட்டுக் காட்சிகளை இதன் மூலம் பார்க்கலாம்."

தலைவனுக்குப் பேரானந்தம். மற்றவர்களும் அந்த நல்ல நாளை ஆவலாக எதிர்பார்த்தார்கள்.

ஒரே ஒரு இளைஞனுக்கு மட்டும் இது பிடிக்கவில்லை. அவன் சந்தேகத்துடன் முணுமுணுத்தான்.

"நான் உங்கள் பேச்சை எப்படி நம்புவது! எங்கள் தீவை முற்றுகை போடத்தான் நீங்கள் கம்பியால் இணைக்கிறீர்கள்."

அந்த இளைஞன் ஒருமுறை அங்கு வழி தவறிக் கரை தட்டிய கப்பல் மூலம் வெளிநாடு சென்று திரும்பியவன். ஏற்றிக்கொண்டு போன கப்பல் தலைவன் அவனுடைய தொல்லை பொறுக்க முடியாமல் சீக்கிரமே அவனை அனுப்பி விட்டான். தலைவனுக்கு அடுத்தாற்போல் அந்தத் தீவில் அவனே அறிஞன்.

கிழவர் தம் தாடியைத் தடவிக் கொண்டு அவனைக் கூர்ந்து நோக்கினார். "உன் சந்தேகமும் நியாயமானதுதான். எப்போது இதனால் உங்களுக்குக் கெடுதல் என்று தெரிகிறதோ, அப்போது நீ என்னைக் கொன்று விடலாம்."

இளைஞன் ஒப்புக் கொண்டான்.

கிழவர் அல்லும் பகலும் அதன் அருகிலேயே உட்கார்ந்து விட்டார். தொலை நோக்கிக் கருவியால் எல்லை தாண்டி உற்றுப் பார்த்தார். காதுகளில் தொலை பேசியை மாட்டிக் கொண்டு எந்தக் குரலையோ உற்றுக் கேட்டார். தலைவன் அவரிடம் விசாரித்தபோது, "இன்னும் சிலநாள் பொறுத்தால், காட்சிகளைப் பார்க்க முடியும்" என்றார்.

சில சமயம் அவருக்கு ஆழ்ந்த சிந்தனை; சில சமயம் எண்ணற்ற உணர்ச்சி அலைகள்; சில சமயம் எல்லையற்ற பயப்பிராந்தி. அசுர வேகத்தில் அவர் இயந்திரத்தை முடுக்கிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் திடீரென்று தலைவனிடம் சொல்லி எல்லோரையும் கூவி அழைத்தார். அவர் தேகம் பயத்தால் வெலவெலத்தது; நாக்கு குளறியது.

"ஓடி வாருங்கள்! வந்து இந்த மலைச் சரிவில் ஒளிந்து கொள்ளுங்கள். இடி, மழை, புயல், பூகம்பம் எல்லாம் ஒன்றாய் வரப்போகிறது. வாருங்கள்; ஓடி வாருங்கள்!"

அந்த இளைஞன் அவரையும் அவர் இயந்திரத்தையும் சந்தேகத்துடன் பார்த்தான்.

"போ! நீ முதலில் ஒளிந்து கொள். இல்லாவிட்டால் வீணில் அழிந்து போவாய்."

எல்லோரும் தலைவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு மலைச் சரிவில் பதுங்கினார்கள்.

ஆ! அடுத்த நிமிடத்தில்......!

காதுகளைப் பிளக்கும் ஆயிரம் இடிச் சத்தம், கண்களைப் பிளக்கும் ஆயிரம் மின்னல்கள், நெருப்பின் ஜ்வாலை ஒவ்வொருவர் முன்னாலும் மஞ்சளாக, சிவப்பாக, ஊதாவாக, நீலமாக ஏழு நிறங்களில் குபீரெனப் பற்றியது.

தொடர்ந்தாற்போல் மண் மழை, பூமியின் அதிர்ச்சி, புயலின் சீற்றம், கடலின் குமுறல், மரங்களின் ஓலம், மிருகங்களின் உறுமல், பறவைகளின் படபடப்பு!

ஊழிக்காலம்! ஊழிப் பேய்களின் பயங்கரக் கொக்கரிப்பு! "ஹா!...ஹா!...ஹோ!"

"ஹோய்!...ஹாய்!...ஹாய்!"

உச்சித் தலையில் முடி குத்திட்டு நிற்க, தாடி பல பக்கமும் பறக்க, இயந்திரத்தை வெறியுடன் இயக்கிக் கொண்டிருந்தார் கிழவர்.

எல்லாம் முடிந்தது. ஊழிக்குப் பின் ஏற்படுமே அந்தப் பொல்லாத பேரமைதி.

கிழவர் குரல் கொடுத்தார்: "அபாயம் நீங்கி விட்டது. எல்லோரும் வாருங்கள்!"

முதல் முதலாக அந்த இளைஞன் கண்களில் நெருப்புப் பொறி பறக்க வேங்கையெனத் தாவி வந்தான்.

அன்றுபோல் இன்றும்

பாபிலோனிலும், நீல நதிக்கரையிலும் இருந்த நாகரிகங்கள் செத்து மறு ஜன்மமடைந்து விட்டன. ஹிந்துஸ்தானம் அன்று போலவே இன்றும் உயிரோடிருக்கிறது. ஏனென்றால் எல்லா தர்மங்களிலும் பெரிய தர்மமாகிய ஆத்ம பரித்தியாகம் இந்த தேசத்தில் சாகாதபடி இன்றும் சிலரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

— பாரதியார்

"கிழட்டுப் பயலே! எல்லாம் உன் இயந்திரத்தால் வந்த வினை!"

பளிச்சென்று அவன் கையிலிருந்த கத்தி கிழவரின் மார்பில் ஓங்கிப் பாய்ந்தது. இருதயத்திலிருந்து அவருக்கு ரத்தம் பீறிட்டது. அதற்குள் கூட்டமும் அவரைச் சூழ்ந்து கொண்டது.

கிழவரின் முகத்தில் ஒரு புறம் வேதனை; மறுபுறம் புன்னகை.

"இப்போது இந்தத் தீவிலுள்ள மனிதர்களையும் உயிரினங்களையும் தவிர உலகத்தில் எல்லாமே அழிந்து விட்டன. வல்லரசுக் கோஷ்டிகள் இரண்டாகப் பிரிந்து ஒன்றை ஒன்று நம்பாமல், ஒரே சமயத்தில் அணுவால் தாக்கிக் கொண்டு உலகுக்கே அழிவு தேடி விட்டன. உயிரினத்தின் ஒரு துளியையாவது காப்பாற்ற முடியுமா என்கிற ஆசையால் இங்கு வந்தேன். என் வேலை முடிந்துவிட்டது. இனி இந்தக் கருவிகளையும் கடலில் தூக்கி எறிந்து விட்டு ஒற்றுமையாக வாழுங்கள்."

"உலகத்திற்கு அழிவா!" என்றான் தலைவன்.

"ஆமாம்; கடவுள் படைத்தார். காட்டுமிராண்டிகள் அழித்து விட்டார்கள்." அப்போது மூடிய கிழவரின் கண்கள் பிறகு திறக்கவே இல்லை.

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
12—8—52

8-உ அனுப்பிய அன்பான கடிதம் கிடைத்தது.

தாங்கள் கல்வி சம்பந்தமான என் கொள்கைகளை ஆமோதிக்கிறீர்கள். மிக்க சந்தோஷம். பொதுவாக இளைஞரைப் பற்றி வயசானவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. உலகம் தோன்றிய நாள் தொடங்கி என்று சொல்லலாம். அதனாலேயே நெடுகிலும் வயசானவர்கள் போட்ட திட்டங்கள் எல்லாம் கொடுமையாக இருந்திருக்கின்றன.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் காலை ஆறு மணிக்கே பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு வரச் சொல்லி விடும். சாயங்காலம் ஆறுமணிக்குத் தான் பள்ளிக்கூடத்தை விடுவார்கள். இந்தப் பன்னிரண்டு மணிகளும் பிள்ளைகள் படுகிற சித்திரவதையைச் சொல்லி முடியாது. ஆனால் படிப்பு ஏதேனும் உண்டோ, அதுதான் இல்லை!

ஆனால் இப்போதுள்ள ஆங்கில முறைப் பள்ளிக்கூடங்களில் நடக்கிற கொடுமையோ இன்னும் மோசம்!

ஏதோ பர்மாவுக்குப் போகிறீர்கள். அங்குள்ள இயற்கை அமைப்பு, நதிகள், நகரங்கள், மக்கள் நடை உடை பாவனைகள் எல்லாவற்றையும் பார்க்கிறீர்கள். அறிந்து கொள்ளுகிறீர்கள். கஷ்டம் இல்லாமலே அறிந்து கொள்ளுகிறீர்கள்.

ஆனால் திருநெல்வேலியிலுள்ள ஒவ்வொரு பையனும் பெண்ணும் பர்மாவைப் பற்றி என்ன என்ன எல்லாமோ உருப் போடும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். விஷயம் விளங்காது. மூளையைக் குழப்புகிறார்கள். இந்த விதமாக உலகத்திலுள்ள தேசங்களைப் பற்றியெல்லாம் நீண்ட நீண்ட பாடம். பிள்ளைகளுக்கு அறிவு கெட்டுப் போய் விடும். திருத்தவே முடியாது. அதனாலேதான் நம்முடைய எஞ்ஜினீர்கள் முதலானவர்கள் பிரயோசனம் அற்றவர்கள் என்று பேர் வாங்கி இருக்கிறார்கள். ஒரு விஷயமே புரியாது அவர்களுக்கு. அமெரிக்கப் பிரயாணமோ, ஜெர்மனி பிரயாணமோ ஒன்றும் உதவின பாடாக இராது.

இங்கிலீஷ், தமிழ், கணக்கு, ஸையன்ஸ், எல்லாப் படிப்பும் பிரயோசனம் அற்ற படிப்புதான்.

இங்கிலீஷ் நேருக்கு நேர் விஷயத்தோடு ஒட்டியதாக இருக்க வேண்டும். தமிழும் அப்படித்தான். கணக்கும் அப்படித்தான். வீட்டுக் கணக்கு, கடைக் கணக்கு என்றுதான் இருக்க வேண்டும் பையன்களுக்கு.

வேண்டாத அல்ஜீப்ரா டிரிகோணமெட்ரி, எங்கும் இல்லாத கணக்குக் கேள்விகள் எல்லாம் கருவிகள், கொடுமை பண்ண! அவ்வளவுதான்.

ஸையன்ஸ் பையன்களுக்கு வெகு ரஸமாய் இருக்க வேண்டும். ஆனால் பள்ளிக்கூடத்தில் ஸையன்ஸ் கிடையாது. எல்லாம் பாடப் புஸ்தகம், லெக்ச்சர், உபாத்தியாயர் அவ்வளவுதான். ஸையன்ஸுக்கான பொருள்களையும் கருவிகளையும் பையன்களே கையாள வேண்டும். அப்போது ஸையன்ஸ், கல்விக்கு உயிர் உண்டாக்கும்.

இதையெல்லாம் ஒழிக்க முடியவா செய்யும். ஆசிரியர்களிடம் இதைச் சொன்னாலே கோபம் வரும்.

கையினால் வேலை செய்வதற்குத் தட்டுமுட்டுகளும் வசதிகளும் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டும். பையன்கள் இஷ்டம் போல் வேலை செய்ய வேண்டும். உதவியை நாடினால் உதவி செய்ய வேண்டும்.

இப்படியெல்லாம் வசதி செய்திருந்தால் பள்ளிக்கூடந்தான். நிமிஷத்துக்கு நிமிஷம் கல்வி வளரும்—ஒரு வருஷத்துக் கடைசியில் அல்ல.

ஏதோ எழுதியிருக்கிறேன். சிந்தனைக்கு விஷயம். அவ்வளவுதான்.

அன்புள்ள
டி. கே. சிதம்பரநாதன்


டீல்டிரின் என்பது என்ன?
குளோரினேடெட் ஹைட்ரோகார்பன் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த கிருமிநாசனியே டீல்டிரின் எனப்படுவது. இதை ஒரு சிறிது உபயோகித்த மாத்திரத்திலேயே மலேரியா, பைலேரியா போன்ற வியாதிகளுக்குக் காரணமான கொசுக்கள், கரப்பான் பூச்சிகள், தெள்ளுப் பூச்சிகள், உண்ணிகள், ஈக்கள் முதலிய சகல விதமான பூச்சிகளும் அடியோடு நாசமடைகின்றன.
புதிய டீல்டிரின் சேர்ந்த ஷெல்டாக்ஸ், டீல்டிரினின் நீண்ட நாள் உழைக்கும் சக்தியுடன், கிருமிகளை க்ஷணத்தில் ஒழிக்கும் சக்தி வாய்ந்த மருந்து சத்துக்களையும் சேர்த்துத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. எனவே, டீல்டிரின் சேர்ந்த ஷெல்டாக்ஸ், பறக்கும் பூச்சிகளை யெல்லாம் விரைவில் வீழ்த்தி ஒழித்துக் கட்டுவதுடன், சுவர்களின் மீதும், குப்பைத் தொட்டிகளுக்குள்ளும், வீட்டிலுள்ள சாமான்களின் மேலும் இதைத் தெளித்து வைத்தால், கொல்லும் சக்தி நிறைந்த இதன் திவலைகளின் மீது பட்ட மாத்திரத்தில் எல்லா விதமான பூச்சிகளும் உடனே நாசமடைகின்றன.
Shelltox with dieldrin
டீல்டிரின் சேர்ந்த ஷெல்டாக்ஸ்
கொசுக்கள், ஈக்கள், எறும்புகள், குளவிகள், கரப்பான் பூச்சிகள், கறையான்கள், தேள்கள், உண்ணிகள், தெள்ளுப் பூச்சிகள், மூட்டைப் பூச்சிகள், வண்டுகள் முதலிய சகல விதமான பூச்சிகளையும் நிச்சயமாக நிர்மூலமாக்கும், சக்தி மிகுந்த கிருமிநாசனி.
பர்மா - ஷெல் ஸ்தாபனத்தாரால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

ASP/BS-C 12

4



பூதான சரித்திரத்திலே நான்கு ஆண்டுகள்

சுரேஷ்ராம்

வினோபா 1954-ம் ஆண்டு மழைக் காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்தார்பங்கா,ஸஹர்ஸா, மூஸாபர்பூர் முதலிய ஜில்லாக்களில் முழங் கால் மட்டுமுள்ள தண்ணீரிலும், இடுப்பு வரையுள்ள தண்ணீரிலும் கடந்து சென்று பூதான வேலை புரிந்தார். படகுகளை உபயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றிய இடங்களில் தான் படகுகளைப் பயன்படுத்திக் கொண்டார்.

வெள்ளத்தின் உபத்திரவம் கடுமையாக இருந்தபோதிலும் வினோபா அடிகளின் கூட்டங்களுக்கு ஏராளமான ஜனங்கள் வந்து அவரது பொன் மொழிகளைக் கேட்டனர். மழை கொட்டிக் கொண்டிருந்தாலும், அவரது பிரார்த்தனைக் கூட்டங்களில் கிராமவாசிகள் உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொண்டனர்.

பீஹார் விவசாயப் பெருமக்களின் உள்ளத்தில் இந்தப் பூதான வேள்வி எவ்வளவு தூரத்துக்குப் பதிந்திருக்கிறது என்பதை மற்றொரு சம்பவத்தின் மூலமும் நன்கு அறியலாம்.

ஒரு கிராமத்துக்கு வினோபா சென்றதும் அந்தக் கிராம வாசிகள்,

"சீதா சீதா ராம் போலோ
சப்கோயீ பூமிதான் தேதோ!"

என்று பாடி வரவேற்றார்கள். அதாவது, "சீதா சீதா ராம் என்று சொல்லி யாவரும் பூமிதானம் புரியுங்கள்" என்பதுதான் அந்தப் பாட்டின் பொருள்.

சந்தாளர்கள் என்னும் பிற்பட்ட வகுப்பினர் வசிக்கும் பகுதிகளில், 'ஐயா, தாங்கள் நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள், நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று பாடி வரவேற்றார்கள்.

"பாபா! ஜமீன் லோ! ஜமீன் லோ!"

1954-ம் வருஷக் கடைசி. பீஹாரில் நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்பவர்கள் வினோபா அடிகளின் பூதான, சம்பத்திதான இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டனர். அதன் பயனாக 15,000 டன் நிலக்கரியைத் தானமாக வழங்கினார்கள். இதைக் கொண்டு என்ன செய்வது என்று கேட்கலாம்.

நிலமில்லாதவர்களுக்கு, பரம ஏழைகளுக்கு நிலத்தை வழங்கியுள்ளார் வினோபா. அவர்களுக்கு அதில் பாடுபட சக்தியுண்டு. ஆனால் ஏர் வாங்கவும், மாடு வாங்கவும், கலப்பை வாங்கவும், கிணறு வெட்டவும் எங்கே போவார்கள்! அதனால்தான் சம்பத்திதானம் என்னும் இயக்கத்தை ஆரம்பித்தார் வினோபா. யார் யார் எந்தப் பொருள் கொடுக்க விரும்புகிறார்களோ அதையெல்லாம் வினோபா பெற்றுக் கொள்ளத் தயார். அம் முறைப்படிதான் வினோபா நிலக்கரியை வாங்கிக் கொண்டார். நிலத்தில் கிணறு வெட்ட வேண்டும். வெட்டிய கிணற்றுக்குக் கட்டடம் கட்டச் செங்கல் வேண்டும். இந்தச் செங்கல் செய்வதற்கு உபயோகப் படுத்த அந்த நிலக்கரியைக் கொடுத்து விட்டார். செங்கல் சூளைக்காரர்கள், அந்த நிலக்கரியின் மதிப்புக்கு அந்த ஏழைகளுக்குச் செங்கல்கள் கொடுத்து, கிணறு எழுப்ப உதவ வேண்டும் என்று ஏற்பாடு செய்து விட்டார்.

பீஹார் ராஜ்யத்தில் 1954-ம் வருஷம் டிசம்பர் 31-ம் தேதி வரை வினோபா அடிகள் இருந்தார். அதாவது 939 நாட்கள் செலவிட்டார். இந்த நாட்களில் தமது அபூர்வ ஆத்ம பலத்தினால் 22,32 474 ஏக்கர் நிலங்களைப் பெற்றார்! இனி அடுத்து எங்கே போனார்!

புது வருஷம் (1955ம் ஆண்டு) பொல பொல வென்று விடியும் வேளை. பகவான் புத்தரும், மகா வீரரும் தோன்றிப் புனிதப் படுத்திய பீஹார் ராஜ்யத்தை விட்டுப் புறப்பட்டு வைஷ்ணவ பக்தர்களால் சிறப்பிக்கப்பட்ட வங்க ராஜ்யத்தில் அடி யெடுத்து வைத்தார். தேச பக்தியும், கலையார்வமும் மிகுந்து விளங்கும் அந்த ராஜ்யத்துக்கு முதல் தடவையாக இப்பொழுதுதான் வினோபா சென்றார். வங்கத்தில் 25 நாட்கள் வினோபா அடிகள் செலவிட்டார். அந்த இருபத்தைந்து நாட்களில் பூதானம் என்பது சமுதாயத்தையே மாற்றிப் புனர் நிர்மாணம் புரியும் ஒரு கொள்கை என்று வங்க மக்களின் உள்ளத்திலே ஆழப்பதித்துவிட்டார்.

இருபத்தியாறுவது நாள் – ஜனவரி 26-ம் தேதி இந்திய மக்கள் சுதந்திரப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்ட புனித தினம். இந்தப் புனித நாளிலே வினோபா ஒரிஸ்ஸா மண்ணில் அடி யெடுத்து வைத்தார். அன்றே வினோபா அடிகளுக்கு ஒன்றேகால் லட்ச ஏக்கர் நிலத்தையும் 93 முழு கிராமங்களையும் ஒரிஸ்ஸா மக்கள் வழங்கினர். அதை ஏற்றுக் கொண்டு வினோபா, ஒரிஸ்ஸா ராஜ்யம் சாதித்துள்ள மகத்தான சாதனையைப் பற்றிப் பாராட்டி விட்டுப் பின்வருமாறு கூறினார்:

"ஒரிஸ்ஸா மக்களிடம் நான் எதிர்பார்ப்பது கொஞ்சமல்ல. இந்த ராஜ்யத்தில் மகாநதி மிகவும் பரந்து அகலமாகப் பாய்ந்து கடலில் கலக்கிறது. அதே மாதிரி இந்த பூதான ஆறும் இந்த ராஜ்யத்தில் மிகப் பரவலாகப் பாயும் என்று எதிர்பார்க்கிறேன். முன்னர் ஸ்ரீ முகுந்த தேவர் கங்கையாற்றை

ஒரிஸ்ஸா ராஜ்யத்துக்குக் கொண்டு வர முயன்றார். இயலவில்லை. அந்தக் கௌரவம் அவருக்குக் கிடைக்காமற் போய் விட்டது. ஆனால் நீங்கள் அதைச் சம்பாதிக்கப் போகிறீர்கள். இந்த பூதான ஆறு கங்கையேதான். நீங்களும் அத்துடன் நீந்திச் செல்லுங்கள். மக்கள் சேவை யென்னும் கடலிலே சங்கமமாகித் திளையுங்கள்!" என்றார்.

மார்ச்சு 25, 26, 27 தேதிகளில் விநோபா அடிகள் பூரியிலிருந்தார். அங்கிருந்த போது தான் ஏழாவது சர்வோதய மகாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. அப்போதுதான் விநோபா அடிகள் பொது நலத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்கள் அத்தனை பேருக்கும் பின் வரும் வேண்டுகோள் விடுத்தார்:

"இரண்டு ஆண்டுகளுக்கு நீங்கள் அனைவரும் இந்த பூதான சக்கரத்தைச் சுழல உங்கள் தோள் கொடுங்கள்! சர்வோதயத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்களுக்கு மட்டுமோ, இந்திய மக்களுக்கு மட்டுமோ விடுத்த வேண்டுகோள் அல்ல! உலக மக்கள் அனைவருக்கும் விடுக்கும் வேண்டுகோளாகும். உலக மக்கள் இத்தகைய சமுதாயத்தை நிலைநிறுத்த இரண்டு வருஷம் பாடுபட்டார்களானால், பயங்கரப் போர்க் கருவிகள் அற்ற சமுதாயத்தை நிலை நாட்டலாம்!"

இவ்விதம், சென்ற நான்கு ஆண்டுகளில் பூதான இயக்கம் வளர்ந்துள்ளது. சுமார் நான்கு லட்சம் பேர் 37 லட்சம் ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கி யிருக்கின்றார்கள். சுமார் 1500 தொண்டர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்யத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்திருக்கின்றார்கள்.

இவை யெல்லாவற்றையும்விட இவ்வியக்கத்தில் முக்கியமான விஷயம் என்ன வென்றால், வாழ்க்கையில் பல்வேறு துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் இவ்வியக்கத்தில் பங்கு கொண்டிருப்பதுதான். வெவ்வேறு அரசியல் கொள்கைகள் கொண்டிருப்பவர்கள் இதில் வந்து ஈடுபட்டு வேலை செய்கின்றனர். பெண்பாலர் எத்தனையோ பேர் புதிய பாரத சமுதாயத்தை உருவாக்க இவ்வியக்கத்தில் உற்சாகமாக ஈடுபடுகின்றனர்.

பூதான வேள்வி எவ்வளவு தூரம் வெற்றி படைத்திருக்கிறது என்பதை சர்வோதய சங்கத்தார் வெளியிடும் புத்தகங்கள் அபரிமிதமாக விற்பனையாவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பன்னிரண்டு பாஷைகளில் சர்வோதய சம்பந்தமான வாரப் பத்திரிகைகளும், மாதத்துக்கு இருமுறை வெளியாகும் பத்திரிகைகளும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. கலைத் துறையிலும் இவ்வியக்கம் நல்ல பணி புரிந்திருக்கிறது. நல்ல எழுத்தாளர்களும், கவிஞர்களும் தங்கள் கற்பனையைப் பயன்படுத்த நல்ல வாய்ப்பு அளித்திருக்கிறது. நாடோடிப் பாடல்களும் பஜனைகளும் சர்வ சகஜமாகி விட்டன! மேல் நாட்டினரும் இவ்வியக்கத்தின் வெற்றியைக் கண்டு அதிசயமும் ஆனந்தமும் அடைகின்றனர்!

'பூதானம் நிலப் பிச்சை இயக்கமல்ல. நமது வாழ்க்கையின் கஷ்ட சுகங்களைப் பிறருடன் பங்கிட்டு ஒரு குடும்பமாக வாழச் செய்யும் முயற்சி' என்று நமது உதவி ஜனாதிபதி ரொம்ப சரியாகக் கூறினார். மனித உள்ளத்தில் உள்ள உயர்ந்த பண்பை இறுகக் கட்டிப் பறக்க விடும் இயக்கம் இது. பரிணாம விதியின்படி, மனிதனை தேவனாக்கும் முயற்சியே பூதானம். சமுதாயத்தின் செல்வத்தையும் சுகத்தையும் அதிகரிக்கச் செய்வதற்குள்ள வழிகளில் எல்லாம் வைத்துக் குறுக்கு வழி இதுவே. இன்றைய மனிதனைப் பீடிப்பது அவநம்பிக்கை, ஆக்கிரமிப்பு, ரத்தவெறி. இந்தப் பேய்ப் பிடிப்புகளிலிருந்து மனிதனை விடுவிப்பது பூதானம். 'நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு' என்று பாரதியார் கூறியது முற்றும் உண்மை என்று மனிதனுக்கு வலியுறுத்துவது பூதானம். பிறருக்காகத் தான் துன்புறுவதில், தியாகத்தில் இன்பம் உண்டு என்று நிரூபிப்பது பூதானம். 'அன்பு' என்பது அழியாத் தத்துவம் என்று காண்பிப்பது பூதானம்! ஆம்! பூதானம் புது உலகைச் சிருஷ்டித்து, அதில் புது மனிதனையே குடியேற்ற முயல்கிறது! ஒவ்வொரு நாளும் படித்துக் கொள்ள வேண்டிய பாடம் பூதானத்திலிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது!

நவபாரதத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமானால் திட்டங்கள் வகுத்துப் புண்ணிய மில்லை. மேனாட்டு அறிஞர்களை வரவழைத்துப் பலனில்லை. மேனாட்டு டாலர்கள் வந்தாலும் பிரயோஜனம் இருக்காது.

நவ பாரதம் சிருஷ்டிக்க வேண்டுமானால் அடிதளத்திலிருந்து கட்டடம் எழுப்பியாக வேண்டும். அது எப்படிச் சாத்தியம்? இதற்குப் பதில், தார்பங்கா ஜில்லாவைச் சேர்ந்த 78 வயதுக் கிழவன் சொன்னதைத்தான் கூற வேண்டும்! அவரை, இன்றையச் சூழ்நிலையில் நம்மை முன்னேற வழி ஏதாகிலும் தட்டுப்படுகிறதா என்று கேட்டேன். அவர் முகத்தில் மலர்ச்சி துலங்க "பூதானம் ஒன்றினால்தான் உண்மை சுயராஜ்யம் நிலை நிறுத்த முடியும். அந்த உண்மை சுயராஜ்யம் நிலை நிறுத்தப்படும் வரை நான் இறக்கத் தயாராயில்லை என்பதை உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன்" என்றார்.

இதுதான் பாரதத்தின் குரல், உலக சமாதானத்தை நிலைநாட்டவும் இதுதான் வழி. அரசியல் சுதந்திரத்துக்கு நமக்கு வழிகாட்டிய காந்திமகானின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே செல்லுகிறது பூதான இயக்கமும். பொருளாதாரச் சுபிட்சம் என்னும் கந்தர்வ உலகின் கதவை பூதானம் திறந்து விடுகிறது. 'நாம் எல்லோரும் சமம்' என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆகவே பாரத நாட்டு இளைஞர்களாகிய நாம் இந்தப் புனிதப் பாதையிலே சென்று, ராம ராஜ்யத்தை—ஆண்டவன் ஆட்சியை இந் நிலவுலகில் நிலவச் செய்வோமாக!

** ** **

இந்தப் புதிய வழியைக் கண்டு பிடித்துப் பாரத மக்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும் புனித மகான் விநோபா அடிகளுக்கு இந்த செப்டம்பர் 11-ம் தேதியுடன் 60 ஆண்டுகள் பூர்த்தியாகிறது. ஓர் இளைஞரின் உற்சாகத்துடன் தேசசேவை புரியும் இந்த மகானுக்கு அறுபது ஆண்டுகளாகி விட்டனவா என்று வியக்கிறோம்! விநோபா அடிகள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பாரத மக்களுக்கு வழிகாட்ட அருள வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம். (முற்றும்)

இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது

பாமாலிவ்


டால்கம் டீ-லக்ஸ்



நீங்கள் எதிர்பார்த்துக்
காத்திருந்த டால்கம் பவுடர்!
உண்மையிலேயே நேர்த்தியான
டால்கின் சகலகுணங்களுடன், ஒரு
புதியரம்மிய வாசனையும்சேர்ந்தது!
வெறியூட்டும் 17 ஸெண்டுகளின்
அற்புதக்கலவைசேர்ந்த பாமாலிவ்
டால்கம் டீ-லக்ஸின் நறுமணம்
உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம்
அடையச் செய்யும் ... மணிக்
கணக்காக உங்களுக்குக் குளுமை
யும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!



அன்னையின் சுத்தமும்
சௌகர்யமும்



குழந்தைக்கு இதம்
அளிக்க அதைத்
தாராளமாகப் பூசுங்கள்



எரிச்சலைத்தடுக்க
மேலெங்கும் அதை
உபயோகியுங்கள்



சோர்ந்த பாதங்களுக்கு
இதமும் புத்துணர்ச்
சியும் அளிக்க

பாமாலிவ்

டால்கம் டீ—லக்ஸ்



நிரூபணம்!



சாதாரணமான எளிய
பரீக்ஷைகளிலும் கூட

புதிய

'ஆஸ்ப்ரோ' வலி, ஜுரம் இவற்றினின்று

துரிதமாயும், அபாயமின்றியும் நிவாரணம் அளிக்கின்றது

என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது

சிறந்தபாக்கிங்-நிறைந்தபாதுகாப்பு

புதிய 'ஆஸ்ப்ரோ'வுடன் கூடிய காகிதத் துண்டை ஜலத்திலிட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் வைத்திருங்கள். பிறகு அத்துண்டைப் பிரித்து வில்லைகளைப் பரிசோதியுங்கள்—அவைகள் கெடாமலும், சுத்தமாயும், ஈரமில்லாமலும் இருக்கக் காண்பீர்கள்.



ஒவ்வொரு புதிய 'ஆஸ்ப்ரோ'வும், காற்று மற்றும் ஈரம் படாமல் தனித்தனியே ஸீல் செய்யப்பட்டிருப்பதால், உதிரி வில்லைகளால் ஏற்படும் வயிற்றைப் பாதிக்கும் அமிலங்கள் சேர்வதினின்றும் பாதுகாக்கிறது.

துரிதமான வேலை - அதி சீக்கிர நிவாரணம்

இரண்டு புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை ஒரு கிளாஸ் ஜலத்திலிடவும். அவை நொடியில் ஜலத்தில் கரைந்து மென்மையான தூளாய் விடுகின்றன. இச்சிறந்த செய்முறை வழிக்கு எமது நன்றி. இதே மாதிரிதான் புதிய 'ஆஸ்ப்ரோ'வும் உங்கள் தேகத்திற்குள் க்ஷணத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது.



புதிய 'ஆஸ்ப்ரோ' அதைப்போலுள்ள மற்றெவ்விதமான வில்லைகளைக் காட்டிலும் வேகமாகக் கரைகிறது, என்பதை ரசாயனசாலைப் பரீக்ஷைகள் நிரூபித்துள்ளன. புதிய 'ஆஸ்ப்ரோ'வில் துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்துகள் எதுவும் சேர்க்கப்படவில்லை, அன்றியும் அது இருதயத்தையோ வயிற்றையோ பாதிக்காது.



கைக்கடக்கமான மூன்று வில்லைகளடங்கிய
பாக்கெட் விலை 2 அணா
30 வில்லைகள் கொண்ட குடும்ப சைஸ் ரூ. 1/2

279

விநியோகஸ்தர்கள்: மூல்லர் அண்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்,
பம்பாய், கல்கத்தா, மதராஸ், டில்லி.



35. திருவேங்கடம்

தமிழகத்தின் மணிமுடியெனத் திகழ்வது திருவேங்கடம். அம் மலை வடுகுக்கும் தமிழுக்கும் இடையே ஒரு வரம்பாக நின்று தமிழ் நாட்டின் வட எல்லை காட்டுதலால் வடமலை என்னும் பெயர் பெற்றது. அன்று இன்று எனாதபடி தமிழகத்தார் என்றும் வழிபடுகின்ற அரியும் சிவனும் ஒன்றே என்று காட்டி, சைவ வைணவ ஒற்றுமையை நிலை நாட்டுதலால் திருமலை என்று போற்றப் பெறுகின்றது. ஏழு முடிகளுடன் எழிலுற விளங்குதலால் ஏழுமலை என்றும் அழைக்கப் பெறுகின்றது.

இறைவனது கருணை வடிவாகிய பூம்புனல் வெள்ளம் பொங்கி எழுந்து, அருவியாக விழுந்து, நம்பி மூழ்கினோர் பாவத்தை யெல்லாம் நாசஞ் செய்யும். அப் பதியில் செஞ்சடைப் பெருமானாகிய சிவனும் அஞ்சன வண்ணனாகிய திருமாலும் ஒன்றாய்க் கலந்து நின்று காட்சி தருகின்றனர். முதல் ஆழ்வார்கள் அம்மாட்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

"தாழ்சடையும் நீள்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும்
தோன்றுமால் — சூழும்
திரண்டுஅருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுஉருவும் ஒன்றாய் இசைந்து"

என்று அழகாகப் பாடினார், முதல் ஆழ்வார்களுள் ஒருவர். திருமலைப் பெருமானுடைய திரு உருவத்தில் சிவனார்க்கு உரிய செஞ்சடையும் திருமாலுக்கு உரிய நெடு முடியும் இலங்கக் கண்டார் அவ் ஆழ்வார்; மேலும் மணி கண்டனுக்கு உரிய மழுப்படையும் அஞ்சன வண்ணனுக்கு உரிய ஆழிப் படையும் அமைந்து ஒளி வீசக் கண்டார்; இன்னும், அரனுக்கு உரிய நாகமும், அரியினுக்கு உரிய அரைநாணும் அழகுறத் திகழக் கண்டார். ஈர் உருவும் ஓர் உருவாய் நின்ற திருக் கோலத்தைக் கண்குளிரக் கண்டு மனம் குளிர்ந்து பாடினார்.

இத்தகைய செம்மை வாய்ந்த திருவேங்கட மலையில் ஐயறிவுடைய மும்மத வேழமும் அன்பு நெறி காட்டும் அழகினைக் கண்டார் மற்றொரு ஆழ்வார். ஓங்கி வளர்ந்த ஒரு மூங்கிற் பண்ணையின் அருகே தன் காதல் மடப் பிடியை அழைத்துச் சென்றது ஒரு பெருங் களிறு. தழைத்த மூங்கிற் கொழுந்தை வளைத்து இழுத்துப் பறித்தது; அடுத்திருந்த தேன் கூட்டில் அத் தழையைத் தோய்த்தது; தேன் அளாவிய இளங் கொழுந்தைக் காதலியிடம் தின்னக் கொடுத்து மகிழ்ந்தது. இக் காட்சியைக் கண்டு இன்புற்ற ஆழ்வார்,

"பெருகு மதவேழம்
மாப்பிடிக்கு முன்நின்று
இருகண் இளமூங்கில்
வாங்கி — அருகிருந்த
தேன்கலந்து நீட்டும்
திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை"

(வேழம் - ஆண் யானை ; பிடி - பெண் யானை ; வரை - மலை)

என்று பாடினார்.

தமிழ் நாட்டில் திருமால் கோயில் கொண்டுள்ள தலங்கள் திருப்பதிகள் என்று போற்றப்படும். ஆயினும் திருப்பதி என்னும் பொதுப்பெயரைத் தனக்கே உரியதாக்கிக் கொண்டது திருவேங்கடம். திருப்பதியைத் திசை நோக்கி வணங்குவர் தமிழகத்தில் வாழும் மன்னரும் மக்களும்.

பழங்காலத்தில் வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு செங்கோல் செலுத்தினன் ஒரு சேர மன்னன். அவன் சிறந்த வீரமும் சீலமும் வாய்ந்தவன். மூன்று தமிழ் நாட்டையும் ஒரு குடைக் கீழ் அமைத்து ஆண்டான் அவ் வேந்தன்; கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக்கோமான் என்று சிறப்பிக்கப் பெற்ற அம் மன்னர் மன்னனைக் குலசேகரப் பெருமான் என்று இன்றும் இந் நாடு போற்றுகின்றது. திருவேங்கட மலையில் "ஓங்கி உலகளந்த உத்தமன்" நின்று அருளும் திருக்கோலம் அவர் நெஞ்சத்தை உருக்கிற்று. வெற்றரசாளும் உரிமையை வெறுத்தது அவர் உள்ளம்; வீட்டரசு நல்கும் வேங்கடநாதன் திருவடியை நாடிற்று அவர் நெஞ்சம். "சீரும் வேண்டேன்; செல்வமும் வேண்டேன்; ஊரும் வேண்டேன், பேரும் வேண்டேன்."

" தேனார் பூஞ்சோலைத்
  திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
  விதியுடையேன் ஆவேனே"

என்று பாடிப் பாடி மனம் குழைந்தார். வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் திருமலையில் ஒரு செண்பக மரமாய் நிற்கவும், ஆறாக ஓடிப் பாயவும், படியாய்க் கிடந்து பரம்பொருளின் பவளவாய் காணவும் ஆசைப் படுகின்றார் குலசேகரப்பெருமான்.

" செடியாய வல்வினைகள்
  தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா
  நின்கோயில் வாசல்
அடியாரும் வானவரும்
  அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன்
  பவளவாய் காண்பேனே"

(செடி - பாவம்)

என்று திருவேங்கட நாதனிடம் முறையிடுகின்றார்.

மூவுலகும் ஈரடியால் அளந்த நெடுமாலின் கோலத்தைத் திருவேங்கடமலையிற் கண்டு வழிபட்டனர். ஆழ்வார்கள். அந்த முறையில் "நெடியானே! வேங்கடவா" என்று ஆதரித்து அழைத்தார் குலசேகரப் பெருமானும். "தாள் பரப்பி மண் தாவிய ஈசனை"த் திருவேங்கடத்தில் கண்டு கை தொழுவார் வினை அறுவார்; வீடு பெறுவார் என்று திருவாய் மொழி பாடிற்று.

" குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
  அன்று ஞாலம் அளந்த பிரான், பரன்
  சென்று சேர்திரு வேங்கட மாமலை
  ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே"

(ஞாலம் - உலகம்; ஓயும் - அழியும்)

என்பது நம்மாழ்வார் திருவாக்கு. நாவீறுடையார் என்று நற்றமிழுலகம் போற்றும் நம்மாழ்வார், தமிழ்ப் புலவர்களுக்கு ஒரு நல்லுரை பகர்கின்றார்.

" வம்மின் புலவீர் நும்
    மெய்வருந்திக் கைசெய்து உய்ம்மினோ
  இம்மன் உலகில் செல்வர்
    இப்போது இல்லை நோக்கினோம்
  நும்இன் கவிகொண்டு நும்நும்
    இட்டா தெய்வம் ஏத்தினால்
  செம்மின் சுடர்முடி
    என்திரு மாலுக்குச் சேருமே"

(வம்மின் - வாருங்கள்)

என்பது அவர் அருளிய திருவாய் மொழி.

"உள்ளதைச் சொன்னால் உடம்பு எரியும்" என்ற உண்மையையும் நன்றாகத் தெரிந்தவர் நம்மாழ்வார். "இம் மன்னுலகில் செல்வர் இப்போது இல்லை" என்று கூறினால் போலியர் புகைந்து சீறுவர். வஞ்சித்து ஒழுகும் புல்லியர் வெஞ்சினம் உறுவர். ஆயினும் என் உள்ளத்தில் உள்ளதை உரைத்தே தீர்வேன். ஈசன் அருளால் இன்கவி பாடும் திறம் பெற்றேன். திருவேங்கடநாதன் கருணையால் யான் பெற்ற கவிதை வளத்தைக் கசடருக்குக் கொடுக்க மாட்டேன்; நரனைப் பாட மாட்டேன்; என் நாதனையே பாடுவேன். அப்பனைத் தமிழால் அணிந்துரைப்பேன். என் அப்பனையே பணிந்துரைப்பேன்."

" சொன்னால் விரோதமிது
    ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
  என்நாவில் இன்கவியான்
    ஒருவர்க் கும்கொடுக் கிலேன்
  தென்னா தெனாவென்று
    வண்டு முரல்திரு வேங்கடத்து
  என்னானை என்அப்பன்
    எம்பெரு மான்உளன் ஆகவே"

என்ற திருவாய்மொழிப் பாட்டு நம்மாழ்வார் உள்ளத்தைச் செம்மையாக உணர்த்துகின்றது. தேவாரத் திருப்பாசுரமும் இக் கருத்தைத் தெரிவிக்கின்றது. "வீரம் இல்லாதவனை வீமனே என்றும், ஈரம் இல்லாதவனைப் பாரியே என்றும் பாடினாலும் பரிசு கொடுப்பவர் இப்பொழுது இல்லை; ஆதலால் இப் போலியரைப் பாடாது ஒழிமின்! பூம்புகலூர்ப் பெருமானைப் பாடுமின்! இம்மை மறுமை என்னும் இருமைப் பயனும் தருவான் எம் பெருமான்" என்று செந்தமிழ்ப் புலவரை நோக்கிப் பரிவோடு பாடினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். (தொடரும்)



கல்கியின் அமரதாரா

அத்தியாயம் 45

இந்துவின் உள்ளம்

நாம் ஆத்திரப்பட்டுச் சில சமயம் செய்யும் காரியங்கள், பின்னால் எவ்வளவோ விபரீதமான பலன்களைத் தந்து விடுகின்றன. ஒருவேளை நான் அன்று பத்மநாபனைப் போய்ப் பார்த்திருக்காவிட்டால் இந்தக் கதியை அடைந்திருக்க மாட்டேனோ என்னமோ? இறைவனுடைய லீலைகள் நமக்கு எப்படிப் புரிய முடியும்? நிரபராதியைக் குற்றவாளி யாக்கி அதை எப்படித் தாங்குகிறேன் என்று அவர் என்னைச் சோதித்து அறிய விரும்பினார் போலும்.

அன்று கவுண்டரிடம் ஒரு டாக்ஸி சீக்கிரம் கொண்டு வரச் சொல்லி விட்டு முகத்தை அலம்பிக் கொண்டு பத்மநாபன் வீட்டுக்குப் போகத் தயாரானேன். முகத்தைத் துடைத்துக் கொண்டே ரங்கதுரையுடன் நான் பேசிய இடத்துக்கு வந்தேன். கீழே தரையில் அந்த 'விஸிட்டிங் கார்டு' விழுந்து கிடந்தது.


வியப்புடன் அந்தக் கார்டைக் கையில் எடுத்தேன். அதில் 'ஆர். டி. ராய்' என்று கொட்டை எழுத்தில் அச்சிடப்பட் டிருந்தது. 'ரங்கதுரையின் பெயரா? இது எதற்காக இப்படி மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்? துரை என்றாலும் அர்த்தமுண்டு. வெறும் 'ரை' என்று பெயர் வைத்துக் கொள்வார்கள். ஆனால் சீமைக்குப் போய் வந்தவர்கள் என்று தெரிய ஏதேனும் வேண்டாமா? ஆனாலும் இதுதான் என்னை எப்படி ஏமாற்றி விட்டது. சிறிதும் எதிர்பாராத விதத்தில் அல்லவா வந்து விட்டார்? இருந்தாலும் நான் இன்னும் சற்று நிதானமாகப் பேசியிருக்கலாம். ஆனால் பத்மநாபனுக்கு ஒரு சூடு கொடுக்காமல் விடக் கூடாது' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே கவுண்டர் டாக்ஸியுடன் வந்தார். அவர் பாவம்! எனக்கு ஏதோ உடம்பு சரியில்லை, டாக்டரிடம் போகக் கார் கொண்டு வரச் சொன்னேன் என்று நினைத்துப் பயந்து கொண் டிருந்தார்.

"வாருங்கள், தாத்தா! துணைக்கு வாருங்கள்" என்று சொல்லி விட்டுக் காரில் ஏறிக் கொண்டேன். அவரும் பேசாமல் ஏறிக் கொண்டார். கார் பத்மநாபன் வீட்டை நோக்கிப் பறந்தது. காரை விட என் மனம் வெகு வேகமாகப் பறந்து சென்றது.

கார் பத்மநாபன் வீட்டில் நுழைந்த போதே எனக்கு உடலெல்லாம்


ஆனந்தி

நடுங்கிற்று. பழைய ஞாபகங்கள் குமுறிக்கொண்டு வந்தன. காரை விட்டு இறங்கினதும் உள்ளே சுலோசனு, ரமேஷ், கோமளவல்லி அம்மாள் இவர்கள் இருந்தால் என்ன செய்வது என்று தயக்கம் உண்டாயிற்று. இருந்தாலும் முன் வைத்து விட்ட காலைப்



பின் வைப்பதில்லை என்ற உறுதியுடன் கவுண்டரைக் காரில் இருக்கச்சொல்லி விட்டு உள்ளே சென்றேன். பத்மநாபன் அறைக்கு வேகமாகச் சென்றேன். ஒருவரும் என்னைத் தடுக்கவில்லை. வீடே சூனியமாக இருந்தது. நான் அவர் அறையில் நுழையும் தருணத்தில் யாரோ ஒரு ஆள், 'யாரது?' என்று அதட்டினுன். நான் திரும்பிப் பார்த்ததும் ஒரு குப்பிடுபோட்டு விட்டு உள்ளே போய் விட்டான். அந்த வீட்டில் எல்லோரையும் விட சமையல்காரன் முத்துவுக்குத்தான் என் மீது ரொம்ப மதிப்பும் மரியாதையும் உண்டு.

நான் பத்மநாபன் அறைக் கதவை மெதுவாகத் தட்டினேன். 'வரலாம்' என்று உள்ளே இருந்து குரல் கேட்டது. கதவைத் திறந்து கொண்டு என் தைரியம் அனைத்தையும் திரட்டிக் கொண்டு அந்த அறைக்குள் பிரவேசித்தேன். பத்மநாபன் என்னை நிமிர்ந்து பார்த்தார். உடனே



சடாரென்று எழுந்து நின்றார். நான் தயங்காமல் எதிரில் போய் நின்றேன். பத்மநாபன் ஒரு நிமிஷம் கழித்து, "இங்கு எதற்காக வந்தாய் இந்துமதி?" என்று கேட்டார்.

"எதற்காக வந்தேனென்று சொல்லாமல் இந்த இடத்தை விட்டு நான் நகர்வதாக உத்தேசமில்லை. சொல்லத்தான் போகிறேன்" என்று அழுத்தமாகக் கூறினேன்.

பத்மநாபன் மறுபடியும் உட்கார்ந்து கொண்டார். அவரால் ஒன்றும் பேச முடியவில்லை.

நான் கோபத்துடன், "ஒன்று தெரிந்துகொள்ளுங்கள். நான் பழைய அசட்டு, பட்டிக்காட்டு இந்துமதி இல்லை. இனிமேல் என்னை ஏமாற்ற முடியாது. இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றேன்.

பத்மநாபனுக்குக் கோபம் வந்ததென்று அவர் முகத்தைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன். "ஓகோ! அப்படியா சமாசாரம்?" என்றார்.

எனக்குக் கோபம் இப்போது பீறிட்டுக் கொண்டு வந்தது.

"நீங்கள் செய்த அக்கிரமங்களையெல்லாம் நான் பொறுத்துக் கொண்டேன். என் வீட்டை விற்றீர்கள். என் பணத்தை, என் அன்புத் தந்தை கஷ்டப்பட்டுச் சேகரித்த பணத்தை விழுங்கினீர்கள். நான் கேட்கவில்லை. என்னைக் கிழவனுக்கு விற்க நினைத்தீர்கள். சகித்துக்கொண்டேன். என்னை வீட்டை விட்டுத் துரத்தினீர்கள். பொருட்படுத்தவில்லை. ஆனால் என்னைப் பற்றி, என் நடத்தையைப்பற்றி இழிவாகப் பேசுவதை நான் சகித்துக் கொள்ள மாட்டேன்.

"உங்கள் பெண் ரங்கதுரையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நான் குறுக்கே நிற்கவில்லை. பேஷாகச் செய்துகொண்டு ஆனந்தமாக வாழட்டும். ஆனால் என்னைப் பற்றி ஏதேனும் மறுபடியும் சொன்னீர்களோ உங்களை என்னால் போலீஸில் காட்டிக் கொடுத்துவிட முடியுமென்று ஞாபகம் இருக்கட்டும். உங்கள் வியாபார விஷயம் ஊர் சிரிக்கும்படி செய்து விடுவேன். ஜாக்கிரதை" என்று கூறிவிட்டு அவருடைய பதிலுக்குக் கூட காத்திராமல் வேகமாகத் திரும்பிச் சென்றேன். நான் காரில் ஏறப்போன

சமயத்தில் 'கேட்' வழியாக இன்னொரு கார் வந்தது. அதில் ரங்கதுரையும், சுலோவும் உட்கார்ந்திருந்தார்கள். ரங்கதுரை என்னை நன்றாகப் பார்த்தார் என்று என் அந்தரங்கம் சொல்லிற்று. ஒரு கணத்துக்கெல்லாம் கார் சாலைக்கு வந்து வேகமாக ஓட ஆரம்பித்தது. எனக்கு என் உயிரை அந்த வீட்டிலேயே விட்டு விட்டு வந்து விட்டது போன்றதொரு உணர்ச்சி உண்டாயிற்று.



அன்று ரங்கதுரையைச் சுலோசனாவுடன் பார்த்ததிலிருந்து என் மனம் மிகவும் கசந்து போயிற்று. ரங்கதுரை மீது வெறுப்பாகக் கூட இருந்தது. 'சே! என்ன உலகம் இது? உண்மையான சலனமில்லாத அன்பை இந்த உலகத்தில் எதிர்பார்க்கவே கூடாதா? நான் என் இலட்சிய புருஷராக உருவகப்படுத்தி இதயத்தில் வைத்துப் பூசித்து வந்த மனிதர் இப்படி மாறிப் போய் விட்டாரே. என்னைத் தேடிப் பேசக் கூட வந்து விட்டார். ஐயோ! அந்தக் களங்கமற்ற முகம் 'நான் பரிசுத்தமானவன்' என்று கூறுவது போலவே இருந்ததே. அவரைப் பார்த்தால் இனிமையும், தெளிவான புத்தியும் கொண்ட வைராக்கிய புருஷராக அல்லவா தோன்றுகிறது? ஏன் அப்படித் தோன்றுகிறது? எல்லாம் பிரமையோ? காதல், அன்பு என்று சொல்லப்படும் கண்ணுக்குப் புலனாகாத விஷயங்கள் எல்லாம் வெறும் கற்பனைதானோ? உண்மையில் அப்படி ஒன்றும் கிடையாதோ?' இவையெல்லாம் மனத்தில் எழும் எண்ணங்கள்தானே? அவை உண்மை என்பதற்கு என்ன சான்று இருக்கிறது?

ஆனால் அவரைப் பற்றி நினைக்கும் போது என் நெஞ்சம் விம்மித் துடிக்கிறதே, அது பொய்யா? அவருடைய பெயரை எண்ணும் போதே இதயம் அப்படியே கனிந்து போகிறதே, அது கற்பனையா? அவருக்காக நான் ஏங்கி ஏங்கி உருகித் தவித்தேனே, அது வெறும் பிரமைதான் என்று சொல்லிவிட முடியுமா?

அவருடைய கரத்தின் ஸ்பரிசத்தை நினைக்கும் போதே உடல் சிலிர்க்கிறதே! அவர் பெயரை நினைக்கும் போது நினைவெல்லாம் இனிக்கிறதே. இவையெல்லாம் உண்மையாக இல்லாமல் இருக்குமா?

எப்படி இருந்தாலும் சரி. ரங்கதுரையிடம் என் அன்பு மாசில்லாததாக இருக்க வேண்டும். பிரதிபலனாக அவருடைய அன்பைக்கூட எதிர்பார்க்கக் கூடாது. அவர் சுலோசனாவை மணந்தால் கூட நான் அதற்காகத் துயரமடையக் கூடாது. எப்படியிருந்தாலும் நான் ஒரு குற்றவாளியின் மகள். 'பகத்சிங்' என்பவர் உண்மையிலேயே குற்றம் செய்தவரோ இல்லையோ, அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அவர் பிடிபட்டால் ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். தூக்குத் தண்டனைகூட விதிக்கப்படலாம். என்னைப்பற்றியோ சொல்லவே வேண்டாம். நான் ரங்கதுரையைச் சந்திக்க முயற்சித்தால்கூட ஈசுவரமூர்த்தி என்னைப் பற்றிப் போலீஸில் தகவல் சொல்லி விடப் போவதாகப் பயமுறுத்தியிருக்கிறார். என்னை மணந்து கொண்டால் மொத்தத்தில் ரங்கதுரைக்கு அவமானமே வந்து சேரும். என்னைக் காதலித்த குற்றத்துக்காக அவர் தம் மனைவி ஒரு கொலைகாரனின் பெண் என்ற அவச்சொல்லையும், ஒரு கொலைகாரி தம் மனைவி என்ற பழியையும் கேட்க வேண்டும். இவ்வளவு அவரை நேசிக்கும் நானே அவர் அந்தப் பழிகளை அடைவதைப் பார்த்துச் சந்தோஷப்பட முடியுமா? அப்படிப்பட்ட அவச்சொல் அவருக்கு ஏற்படாமலிருப்பதற்கு நான் என் சுயநலத்தைத் தியாகம் செய்யத்தான் வேண்டும்.


அவர் மீது என்னால் ஒரு களங்கம் ஏற்படுவதை நான் சகித்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே நான் அவரை மணக்கும் எண்ணத்தை அடியோடு மறந்து விட வேண்டும். அவர் சுலோவை மணந்துகொண்டு சௌக்கியமாக இருப்பதைப் பார்த்து நான் மகிழ வேண்டியது. அதுதான் என் கடமை. அதுதான் இறைவனுக்கு உகந்ததாக இருக்கிறது போலும்.

இவ்வாறெல்லாம் நினைத்தேன். மனித இயல்பு உன்னதமானதுதான். நாம் செய்ய வேண்டும் என்று நினைக்கும் விஷயங்கள் மிக உயர்வானவை. நாம் நினைப்பது போலவே நடக்க முடி

கால்கேட் குளோரோபில்*

ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனாமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரிய குளோரோபில் இல்லை

குழந்தைகள் விரும்பும் மதுரமான சுவை.
மதுரமான இனிய சுவையுள்ள கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை குழந்தைகள்கூட விரும்புவார்கள்.



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.


CTPA/6/5

கிறதா? மேலே கூறியபடி இருக்கத்தான் நான் மனப்பூர்வமாக விரும்பினேன். ஆனால் என்னுடைய விருப்பத்துக்கும் பின்னால் ஒரு சக்தி இருந்துகொண்டு வேலை செய்தது. அந்த சக்திக்கு எப்போது பார்த்தாலும் ரங்கதுரைமீது கோபம் வந்து கொண்டே இருந்தது. நான் 'இலட்சிய' இந்துமதியாக இருக்கத்தான் விரும்பினேன். ஆனால் உண்மையான இந்துமதிக்கு மனம் கசந்துகொண்டேதான் வந்தது. அவளிடம் தியாகபுத்தி இல்லை. நிஜ இந்துமதி அன்பு வேண்டும், அன்பு வேண்டும் என்று கதறினாள். ஆனால் கற்பனை இந்துமதியோ, 'அவருடைய நலத்துக்காக உன் சுயநலத்தைத் தியாகம் செய்' என்று கூறினாள். அப்பப்பா! அந்த நாட்களில் என் மனத்தில் நிகழ்ந்த போராட்டங்களை விவரிக்க ஒண்ணாது.

அத்தியாயம் 46

ராஜாராமின் கவலை

இந்தமாதிரி எண்ணங்கள் ரங்கதுரையைச் சந்தித்த பிறகுதான் ஏற்பட்டதென்று சொல்ல முடியாது. அதற்கு முன்னாலேயே எத்தனையோ தடவைகள் யோசித்துப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரு முடிவுக்கு வந்ததில்லை. மனோவேதனை பொறுக்க முடியாமல் அவதிப்படும் போதெல்லாம் எனக்கு எழுதுவது கொஞ்சம் ஆறுதலளித்து வந்தது. என்னைப் பற்றியும் அவரைப் பற்றியும் நாங்கள் சந்தித்ததைப் பற்றியும் எழுதி எழுதி மனத்துக்குக் கொஞ்சம் ஆறுதல் தேடிக் கொள்வேன். ஒருநாள் இதையே ஒரு கதைமாதிரி எழுதினால் என்ன என்று தோன்றவே, அவைகளையெல்லாம் தொகுத்து ஒரு கதையாக எழுதி வைத்திருந்தேன். ஒருநாள் அந்த ராஜாராமிடம் கொடுத்தேன். அவர் அதை மிக நன்றாக இருக்கிறதென்று பாராட்டினார். அந்தக் கதையைப் படமாக எடுத்தால் ரொம்ப நன்றாக இருக்குமென்றும், மனிதர்களின் ஆசாபாசங்களை நான் நன்றாகச் சித்திரித்திருப்பதால் எல்லோருக்கும் பிடிக்கும் என்றும் கூறினார்.



நான் பத்மநாபனைப் பார்த்துவிட்டு வந்தபிறகு மன அமைதியில்லாமல் என் அறையில் குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தேன். நான் எழுதிய இந்தக் கதை என் மேஜைமீது கிடந்தது. கதையில் கதாநாயகனும், கதாநாயகியும் மணந்து கொள்வதாக எழுதியிருந்தேன் நான். எனக்கு இப்போது அதைப் பார்த்தபோது மிகவும் துயரமாக இருந்தது. 'நான் சந்தோஷம் ஆனந்தம் என்னும் வார்த்தைகளையெல்லாம் எழுதித்தான் படிக்க வேண்டும் போலிருக்கிறது. வாழ்க்கையில் அனுபவித்துத் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பமே இல்லாமல் போய் விடுமோ?' என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ரங்கதுரை என்னைப் பற்றிப் பத்மநாபன் கூறிய அவதூறான விஷயங்களை நம்புகிறார் என்ற எண்ணம் என்னைச் சித்திரவதை செய்தது. மனம் முறிந்து போயிற்று. மறுபடியும் கோவைக்குச் சென்றுவிட்டால் என்ன? இங்கு எதற்காக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அப்போது ராஜாராம் கவலையுடன் வந்தார். "என்னம்மா, நீ இப்படியெல்லாம் அசட்டுக் காரியங்கள் செய்யலாமா? பத்மநாபன் வீட்டுக்குப் போனாயாமே! எதற்காகப் போனாய், அம்மா?" என்று கேட்டார்.


பிறகு நான் அவரிடம் நடந்தவற்றைச் சொன்னேன்.


"நீங்களே சொல்லுங்கள், ராஜாராம், என்னைப் பற்றிப் பத்மநாபன் அவதூறாகப் பேசுவதை, அதிலும் ரங்கதுரையிடம் பேசுவதை, நான் தெரிந்து கொண்டு சும்மா இருக்க முடியுமா? நான் செய்தது எப்படித் தவறாகும்?" என்று வினவினேன்.


"தவறுதான், இந்து! நீ இப்போது அவரை மிரட்டியதால் ஒரு பலனும் இல்லை. இது உன்னை மிகவும் பாதிக்கும். இனிமேல் பத்மநாபன் உன்னைக் காட்டிக் கொடுப்பதற்குச் சிறிதும் தயங்கவே மாட்டார்."

"அவர் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். எனக்குக் கவலையில்லை" என்றேன்.

ஹாஸ்யக் களஞ்சியம்







"இப்படிச் சொல்வது ஒரு அளவுக்குச் சரிதான், இந்து. ஆனால் புத்திசாலித்தனம் இல்லை. உன்னை அவர் போலீஸில் காட்டிக் கொடுத்தால் யாருக்கு என்ன பயன்?"

'ஓகோ! இவர் தனக்காகப் பயப்படுகிறார். பத்மநாபன் என்னைப் பற்றித் தகவல் கொடுத்தால், தன்னைப் பற்றி வெளி வந்து விட்டால் என்ன செய்வது என்று பயப்படுகிறார்' என எண்ணினேன்.


"இதனால் உங்களுக்கு ஒரு கஷ்டமும் ஏற்படாதென்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன்" என்றேன்.

"ஐயோ, இந்து! நான் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டே பேசவில்லை. ஏன் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளுகிறாய்? எப்படி இருந்தாலும் நீ செய்தது சரியில்லை என்பது என் அபிப்பிராயம். நீ ரங்கதுரையுடன் பேசியதும் சரியில்லை. பத்மநாபன் வீட்டுக்குப் போனதும் சரியில்லை. நீ ரங்கதுரையுடன் நிதானமாகப் பேசியிருந்தாயானால் சரியாக இருந்திருக்கும். ஈசுவரமூர்த்தி கூறியதை நீ அவரிடம் கூறியிருந்தாயானால் அவர் தகுந்த யோசனை உனக்குக் கூறியிருப்பார். அவர் மகா அறிவாளியல்லவா?"

"ஆமாம்! நான் நிதானமாகப் பேசியிருந்தால் அவர் என்னைப் பற்றிப் பத்மநாபன் கூறியதை நம்புகிறார் என்பதே தெரியாமல் போயிருந்திருக்கும். உங்களுக்கு என் வேதனையும், கஷ்டமும் தெரியாது, ராஜாராம்!" என்று விம்மினேன்.

"இந்து! நீ அழாதே அம்மா! நான் இன்று ஒரு நல்ல செய்தி கொண்டு வந்தேன். ஆனால் நீ அதைக் கேட்டு மகிழும் நிலையில் இல்லை" என்றார்.

"பரவாயில்லை, சொல்லுங்கள். எந்த விஷயமாக இருந்தாலும், எப்போது சொன்னாலும் இதே மாதிரிதான் என்னால் கேட்க முடியும். இதை



விட இனி என்றுமே நான் சந்தோஷமாக இருக்கப் போவதில்லை."

"அப்படியெல்லாம் சொல்லாதே, இந்து! நீ என்ன வாழ்க்கையை அனுபவித்து விட்டாய், இப்படிச் சொல்ல? உன் வாழ்க்கை இனிமேல் தான் ஆரம்பமாகப் போகிறது. அது ஆரம்பமாவதற்கு ஏற்பாடு செய்யப் போகிறவன் நான். அதை எனக்கு விட்டு விடு. ரங்கதுரையுடன் உன்னைச் சேர்த்து வைப்பது என் பொறுப்பு. நீ எனக்கு உதவி செய்ய வேண்டாம். ஆனால் தயவு செய்து இந்தமாதிரி ஏதாவது அசட்டுத் தனம் செய்து கெடுக்காமலிருந்தால் போதும். நான் சொல்வதைக் கேள்."

"ராஜாராம்! நான் இன்னும் பச்சைக் குழந்தையில்லை, மிட்டாயைக் காட்டி ஏமாற்ற! இனிமேலும் நான் ரங்கதுரையை அடைவேனென்பதை நம்ப முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள். என்னால் அவருக்கு ஒரு சுகமும் ஏற்பட முடியாது. ஒரு நீதிபதி ஒரு கொலைக்காரனின் மகளை, அதிலும் கொலைக் குற்றம் சாட்டப் பட்டவளை மணந்து கொள்ள விரும்ப முடியுமா? அவர் விரும்பினால்தான் என்னால் சம்மதிக்க முடியுமா? அதனால் நான் நீங்கள் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்று சொல்லவில்லை. இன்னொரு படத்தில் நடிக்கச் சொல்லப் போகிறீர்கள். ஆட்சேபனை இல்லை" என்றேன்.

"அட! உனக்கு ஜோஸ்யம்கூடத் தெரியுமா? ஆனால் இந்தத் தடவை நானே டைரக்ட் செய்யப் போகிறேன். உன்னை வைத்து ஒரு படம் எடுத்து நான் வெளியிட்டு வெற்றியும் பெற்று விட்டால் எனக்குப் பிறகு வாழ்நாள் முழுதும் கவலை இல்லை."

"ஆகட்டும், அப்படியே செய்வோம்" என்றேன்.

"உன்னுடைய கதையையே எடுக்கப் போகிறேன். அது நிச்சயம் வெற்றியுடன் ஓடப் போகிறது பார். மேலும் நாம் இப்போது இங்கு இல்லாமலிருப்பதே நல்லது. இங்கு இருந்தால் பத்மநாபன் உடனே ஏதாவது

சரஸ்வதியும் இலக்கியமும்

எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரஸ்வதி கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம் திரிபு முதலிய சித்திரக் கட்டுக்களை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கவிஞ பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கிறான். அவசியமில்லாத அடைமொழிகள் சேர்ப்போன் அந்தத் தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித் துணியாலே மூடுகின்றான்; வெள்ளைக் கலை உடுத்துவதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக்காரனும் பாட்டுக்காரனும் சரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வியல்புடைய வாக்கே அருள் வாக்கென்று சொல்லப்படும். — பாரதியார்

ஆத்திரத்தில் செய்யக் கூடும். நாம் கோவைக்குப் போய் விட்டால், அவர் அதை ரொம்பப் பொருட்படுத்த மாட்டார் என்று நினைக்கிறேன்" என்று கூறினார்.

அதன்பிறகு அந்தக் கதையைப் படமாக எடுக்க ஏற்பாடுகள் துரிதமாகச் செய்தார் ராஜாராம். கோவை ஸ்டுடியோவில் தயாரித்து, வெற்றிவேல் புரொடக்ஷன்ஸ் வெளியீடாகவே, வெளியிட ஏற்பாடு செய்தார். ஆகவே நாங்கள் மறுபடியும் கோவைக்குச் சென்று விட்டோம்.

இந்தப் படத்தில் கதாநாயகராக நடித்தவர் மிகக் கண்ணியமான மனிதர். படித்தவர். என்னிடம் ரொம்ப மதிப்பு வைத்திருந்தார். நடிப்புக் கலைக்குப் புதியவரான படியால் நான் பல விஷயங்கள் அவருக்குச் சொல்லிக் கொடுத்தேன். அதையெல்லாம் பாராட்டிச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்.

இந்தப் படத்தின் ஆரம்பத்தில் இந்தக் காதலர்கள் சந்திப்பது, பேசுவது முதலிய காட்சிகளை எடுக்க எந்த இடம் தேவலை என்று யோசித்தோம். நான் குங்குமத்துறையில் எடுக்கலாம் என்று கூறினேன்.

ராஜாராம் சந்தோஷமாக ஒப்புக் கொண்டார். ஆகவே குங்குமத்துறைக்குச் சென்றோம். அனைவருக்கும் ஜாகை வசதிகள் நன்றாகச் செய்யப் பட்டிருந்தன.

ரங்கதுரையும் நானும் பாதிரித் தோட்டத்தில் சந்தித்ததெல்லாம் எனக்கு அப்படி அப்படியே உள்ளத்தில் அழுந்திப் போயிருந்தது. பல காட்சிகளை நிஜமாகவே நடந்தது போலவே எடுக்கச் செய்தேன். ராஜாராம் என் யோசனைகளை உற்சாகமாக ஏற்றுக் கொண்டார்.

இதற்காகவெல்லாம் நான் பாதிரித் தோட்டத்துக்கு அவசியம் போக வேண்டியதாயிற்று. ப்ரொட்யூஸர் கதிர்வேலுவுக்கு அதற்கெல்லாம் அனுமதி வாங்கச் சிரமமிருக்கவில்லை. ஜமீன் காரியஸ்தரே நன்றாகக் கவனித்துக் கொண்டு உதவிகள் செய்தார்.

பாதிரித் தோட்டத்துக்கு நான் சென்ற போதெல்லாம் பழைய ஞாபகங்கள் குமுறிக் கொண்டு வந்தாலும், பயம் மாத்திரம் ஏற்படவே இல்லை. ரங்கதுரையுடன் நான் பேசிய இடமும், அவர் மரக் கிளையைத் தழுவிக் கொண்டு மரத்தில் உட்கார்ந்திருந்ததும் என் கண் முன்னால் வந்து நின்று மெய்ம் மறக்கச் செய்தன. அந்தக் காட்சிகளையெல்லாம் தத்ரூபமாகப் படம் பிடிக்கச் செய்தேன்.

ஜமீன் மானேஜர் மூலம் தங்கபாண்டியனைப் பற்றிய விவரங்கள் சில தெரிந்தன. தங்கபாண்டியன் பம்பாய் நகரத்தில் ஏதோ ஒரு பெரிய கம்பெனியில் வேலை செய்து வருகிறார். தங்கையை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார். கல்யாணம் பம்பாயிலேயேதான் நடந்தது. அவர் இங்கே வரவே இல்லை என்பன போன்ற விவரங்கள் தெரிந்தன.

குங்குமத்துறையில் படப் பிடிப்புகள் முடிந்து மறுபடியும் கோவை சென்றோம். படம் சீக்கிரமாக முடிந்தது. இந்தப் படம் திரையிட்ட பிறகு மற்றப் படங்களைவிட அதிக வெற்றியுடன் ஓடிற்று. மறுபடியும் மறுபடியும் இதைப் பற்றியே சொல்ல வேண்டியிருப்பதால் இதை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். இப்படத்தின் வெற்றி என் கதைக்கு முக்கியம் அல்ல. ஆனால் இதன் பயனாக என் வாழ்க்கையில் ஏற்பட்டதல்லவா முக்கியமானது? (தொடரும்)


Apothecary
E.Taeschner's
TRADE-
MARK
Pertussin
Name reg'd.
chial catarrh
Formula:
100 c.c.
Infa


கேச விருத்திக்கும் முக
மலர்ச்சிக்கும்
ஸ்வஸ்திக்
வாஸலீன் கேஸ்டர் ஆயில்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் தயாரிப்பு.


அட கடவுளே,
பேயா?
எஸ்ட்ரேலா பாட்டரீஸ்
YOUR GUIDE
IN DARKNESS
எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிட்.,

உடலும் உள்ளமும்

விஷ்ணு பிரபாகர்

ஹிந்திக் கதை : மொழிபெயர்ப்பு : ஜெயமணி

பிரதீப் சொல்லுகிறன் :

நான் ராஷ்மியை முதன் முதலாக எந்த இடத்தில் எப்பொழுது சந்தித்தேன் என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை. ஒரு வேளை முன்பு நதிக்கரையில் ஒரு வன விருந்து நடந்தது அல்லவா? அப்போது முதன் முதலாக நான் அவளைச் சந்தித்திருக்கலாம்.

அப்போது அவளுடன் அவளது இளைய மகன் இருந்தான். அவன் விவரம் அறியாத சிறு குழந்தை.

அப்படியிருந்தும் அவள் என்னைச் சுட்டிக் காட்டிக்கொண்டே, அந்தக் குழந்தையிடம் ஏதோ சொன்னுள்.

"ஒரு வேளை அவர் காதலிக்கவில்லையோ, என்னவோ!"

இந்த வார்த்தைகள் என்னுடைய காதில் விழுந்ததும், நான் அவளைத் திரும்பிப் பார்த்தேன். அந்தக் குழந்தைக்கு அவள் கூறியது எதுவுமே புரிந்திருக்க இடமில்லை. ஒருவேளை என் கவனத்தை இழுக்க வேண்டும் என்றுதான் அவள் அப்படிச் சொன்னுளோ, என்னவோ!

அவள் சிறந்த அழகி என்பதில் சந்தேகமில்லை. அவளது கரிய கண்களில் கவர்ச்சியும், மெல்லிய செவ்விதழ்களில் புன்முறுவலும் தாண்டவமாடின. அவளது முகத்தில் தெய்விக ஒளி பிரகாசிப்பது போல் தோன்றியது. இவை யெல்லாம் அவளுடைய அழகிய வதனத்தில் இயற்கையாக அமைந்திருந்தன.

அவளது சேலை தோளிலிருந்து அடிக்கடி நழுவி விழுவதும், அதை அவள் அடிக்கடி மேலே எடுத்துப் போட்டுக் கொள்வதும்கூட அழகாகத் தோன்றியது. அதில் செயற்கையான சேஷ்டை எதுவும் இல்லை. இச்செய்கைகூட எனக்கு முற்றிலும் இயற்கையாகவே இருந்தது.

பிறகு நான் அவளை எத்தனை தடவை சந்தித்தேன் என்பதைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

ஒரு நாள் நாங்கள் சில நிமிஷநேரம் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ராஷ்மி மட்டும் தனியாக வந்திருந்தாள்.

அன்று அவள்தான் அதிகமாகப் பேசினுள். நான் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"உங்களை எனக்கு வெகு காலமாகத் தெரியும்; பல யுகங்களாகத் தெரியும்!" என்ருள் ராஷ்மி உற்சாகத்துடன்.

"உன்னை நான் இதற்கு முன் எந்த இடத்தில் எப்போது சந்தித்தேன் என்பது ஞாபகமில்லையே?" என்று தடுமாறிக் கொண்டே பதில் சொன்னேன்.

"ஒருவரைத் தெரிந்து கொள்ளவேண்டுமாயின், அவரைச் சந்தித்துத்தான் தீரவேண்டுமா, என்ன?" என்று ஒரு கேள்வியைப் போட்டாள் அவள்.

"சந்தித்துத்தான் தீரவேண்டும் என்பதில்லை" என்று இழுத்தேன்.

இவ்விதம் நான் கூறியதும் அவள் சிரித்தாள்.

"நீங்கள் எழுதியுள்ள நூல்களில் ஒவ்வொரு வரியையும் நான் வாசித்திருக்கிறேன். நீங்கள் புத்தகம் எழுத ஆரம்பித்ததிலிருந்து, உங்கள் கருத்துக்கள் என் உள்ளத்தை முற்றிலும் கவர்ந்து விட்டன" என்ருள் உணர்ச்சி ததும்ப.

"உனக்கு நன்றி!"

"இந்த மரியாதைப் பேச்சு எனக்குப் பிடிப்பதில்லை. இத்தகைய பேச்சு உள்ளத்திலிருந்து வருவதல்ல; உதட்டிலிருந்து வருவதாகும்."

ராஷ்மி இவ்விதம் கூறியது, சவுக்கால் என்னை அடிப்பதுபோல் இருந்தது. நான் பிரமித்து விட்டேன். எனினும் நான் அதற்குப் பதில் எதுவும் சொல்லாமல் பேச்சை மாற்றினேன்.

"நீ ரொம்பவும் அதிகமாக வாசிக்கிருய் போலிருக்கிறது!" என்றேன்.

"அதிகமாக வாசிப்பதற்கு என்ன இருக்கிறது? அதிகமாக வாசிப்பது என்பது பொங்கும் பாலையில் உள்ள நுரை போலத்தான்."

இவ்விதம் கூறிய ராஷ்மி திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவள்போல் பரபரப்பு அடைந்தாள்.

"நேரம் ஆகிவிட்டது. அவர் காத்துக் கொண்டிருப்பார்" என்று கூறிச் சிரித்துக் கொண்டே சென்று விட்டாள்.

*   *   *

அதற்குப் பிறகு நாங்கள் அடிக்கடி சந்திக்கலானேம். எப்போதாவது நான் அவளுடைய வீட்டுக்குக் கூடச் செல்லுவது உண்டு. அங்கு சென்ருல், அவளுடைய இரண்டு குழந்தைகளும் என்னை விட மாட்டார்கள்.

வெகு காலத்துக்குப் பிறகுதான் நான் அவளுடைய கணவரைச் சந்தித்தேன்.

அவர் ஒரு சர்க்கார் அதிகாரி என்பதை ராஷ்மியிடமிருந்துதான் தெரிந்துகொண்டேன். அவர் அதிகாலையில் வீட்டிலிருந்து

புறப்பட்டு விடுவார். இரவு நேரம் கழித்துத்தான் வருவார். மத்தியானச் சாப்பாடு கூட அவருக்கு ஆபீசில்தான். ஆபீசில் அவருக்கு அவ்வளவு வேலையாம். அப்படி என்ன வேலையோ!

நான் ஒரு நாள் ராஷ்மியின் வீட்டில் அவளுடனும் அவளது குழந்தைகளுடனும் கூட சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, ராஷ்மியின் கணவர் திடீரென்று உள்ளே வந்தார். அவரைக் கண்டதும் ராஷ்மியின் நிலைமை மிகவும் சங்கடமாகி விட்டது. எனினும் உடனே அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"ஓஹோ! நீங்கள் இன்று இவ்வளவு சீக்கிரமாக ஆபீசிலிருந்து வந்து விட்டீர்களே!"

"ஆமாம். இன்று சீக்கிரமாகத்தான் வந்து விட்டேன்."

இவ்விதம் ராஷ்மியின் கணவர் கூறி விட்டு எங்களை யெல்லாம் பார்த்தார். அவரது கண்ணோட்டம் என்மீது விழுந்தது.

அப்போது ராஷ்மி, "இவர் தான் பிரதீப்" என்று என்னை அறிமுகம் செய்து வைத்தாள்.

இதைக் கேட்டதும் ராஷ்மியின் கணவருடைய முகத்தில் மாறுதல் ஏற்பட்டது.

"அப்படியா! நீங்கள்தானா பிரதீப்! உங்களைப் பார்க்க மிகவும் சந்தோஷம். நீங்கள் மிக்க அதிர்ஷ்டசாலி. உண்மையாக வாழ்க்கையை நன்கு அனுபவிப்பவர் நீங்கள்தான். நான் என்ன, இடைவிடாது உழைப்பதைத் தவிர வேறு எவ்வித இன்பத்தையும் அநுபவிக்க முடியாதவன்" என்றார் ராஷ்மியின் கணவர்.

அவர் அவ்விதம் கூறியதன் கருத்து என்ன என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

அவர் என் பதிலை எதிர்பார்க்காமலேயே திரும்பிச் செல்ல முற்பட்டார்.

அதைப் பார்த்த ராஷ்மி, "ஏன், கூட சாப்பிடாமல் புறப்பட்டு விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

"எனக்கு வேண்டாம்."

"நீங்கள் வீட்டுக்கு வந்துவிட்டு கூட சாப்பிடாமல் சென்றால், பிரதீப் என்ன நினைப்பார்? இப்போது என்ன அவசரம்? எங்கு செல்லுகிறீர்கள்?"

"பிரதீப் எதுவும் வித்தியாசமாக நினைக்க மாட்டார். அவர் ஒரு கலைஞர் அல்லவா? எனவே, அற்ப சம்பிரதாயங்களுக்கெல்லாம் அவர் அடிமையாகி விட மாட்டார்."

இவ்விதம் ராஷ்மியின் கணவர் கூறி விட்டு, புகை மேகம் திடீரென்று தோன்றி மறைவது போல, திடும் பிரவேசமாக உள்ளே நுழைந்த அதே அவசரத்துடன் திரும்பிச் சென்று விட்டார்.

அவரது போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. எனினும் தன் கணவர் கூட சாப்பிடாமல் திடீரென்று போய் விட்டதைக் கண்டு ராஷ்மி கலங்கவில்லை. அதற்கு மாறாக, அவள் குழந்தையைப் போல் சிரித்தாள்.

"அவர் சர்க்கார் அதிகாரி அல்லவா? அவர் தமது குணத்தை எப்படி மாற்றிக் கொள்ள முடியும்?" என்றாள்.

ராஷ்மியின் கணவர் வெளியே சென்றவுடனே நானும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டேன்.

அதற்குப் பின் பல நாட்கள் வரையில் நாங்கள் சந்திக்கவில்லை. உண்மையில், அவளைச் சந்திக்க நான் விரும்பவும் இல்லை.



எனினும் அவன் ஒரு நாள் திடீரென்று என் ஜாகையில் வந்து நின்றான்.

"'இது என்ன, இவன் இப்படித் தொல்லைப் படுத்துகிறானே' என்று நினைக்கிறீர்களோ?" என்று என்னைக் கேட்டாள்.

"இல்லையே" என்றேன்.

வந்ததும் வராததுமாக ராஷ்மி என்னைச் சரமாரியாகக் கேள்விகள் கேட்கத் தொடங்கினாள்:

"ஒருவருக்கு மற்றொருவர்மீது ஏன் எல்லையற்ற காதல் ஏற்பட வேண்டும்?"

இவ்விதம் கேட்ட ராஷ்மியை நான் உற்றுப் பார்த்தேன். அவளது முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அதே சமயம் அவளது கண்களில் நீர் ததும்பியது.

"எல்லையற்ற காதல் ஏன் உண்டாகிறது என்பது, யார் காதலிக்கிறாரோ அவருக்கு அல்லவா தெரியும்?" என்றேன்.

"அவருக்குத் தெரியாது."

"அப்படியானால் அவர் காதலிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்."

"ஒரு காதலருக்குத் தான் ஏன் காதலிக்கிறோம் என்பது தெரிந்திருக்க வேண்டியது அவசியமில்லை."

என் மனம் குழம்பியது. ராஷ்மிக்குச் சரியான பதில் கூற என்னால் முடியவில்லை.


"எதற்கும் ஒரு காரணம் உண்டு அல்லவா? காதலர் தன் காதலுக்குக் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்பாமல் இருக்கலாம். அதற்காக, காதலுக்குக் காரணமே இல்லை என்று சொல்ல முடியுமா?" என்றேன்.

என் பதில் அவளுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. அவள் சட்டென்று, "நாம் சிறிது நேரம் வெளியே சென்று உலாவி விட்டு வருவோமா?" என்று கூறிப் பேச்சை மாற்றினாள்.

அவளது கோரிக்கைக்கு நான் இசைந்தேன். ஏன் இசைந்தேன் என்பது எனக்கே தெரியாது. நாங்கள் பேசிக் கொண்டே நதிப் பக்கமாகச் சென்றோம். பகலும் இரவும் சந்திக்கும் அந்த அந்தி வேளையில் என் பக்கத்தில் அவள் நடந்து வந்தது என் மனத்துக்கு மிகவும் இன்பமாக இருந்தது.

பிறகு நாங்கள் உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினோம். இவ்விதம் நாங்கள் எங்களை மறந்து பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதைக் கூடக் கவனிக்கவில்லை.





பாடும் பணியே பணியாகக் கொண்டு, சந்தத் திருப்புகழ்ப் பாடல்களினால் கந்தசுவாமியை வந்தித்து வாழ்ந்த ஸ்ரீ அருணகிரிநாதரை அறியாத தமிழரே இல்லை யென்று கூறலாம். அந்த பக்தமணியின் நினைவுநாள் திருவண்ணாமலையில் ஆகஸ்டு 15ல சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேற்படி நினைவுநாள் திருவிழாவில் பல தமிழறிஞர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் இளவழகனார் பேசுவதைப் படத்தில் காணலாம்.

இருவரும் போதையிலிருந்து தெளிந்தவர்கள் போல் திடுக்கிட்டோம். ராஷ்மியின் தேகம் தலையிலிருந்து கால் வரையில் நடுங்கியது. அவளது முகம் களையிழந்து கண்களில் நீர் ததும்பியது. அவளால் எழுந்து நிற்கக்கூட முடியவில்லை.

எனினும் சிறிது நேரத்தில் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"நான் உன்னை விட்டுப் பிரிய முடியாது போல் இருக்கிறது" என்றேன்.

"என்னை விட்டுப் பிரிவதாக நீங்கள் ஏன் நினைக்க வேண்டும்? நான் எப்போதும் தங்கள் அருகிலேயே இருக்கிறேனே. பிரதீப்! நான் உங்களைக் காதலிக்கிறேன்."

இவ்விதம் ராஷ்மி கூறியது ஏக காலத்தில் என்னைப் பல தேள்கள் கொட்டுவது போல் இருந்தது.

"நீ உன் கணவனைக் காதலிக்கவில்லையா?" என்று அவளைப் பட்டவர்த்தனமாகக் கேட்டு விட்டேன்.

"நான் என் கணவனைக் காதலிக்கிறேன். நான் அவரைக் கல்யாணம் செய்துகொண்டபோது அவரையே காதலிப்பதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிறேன் அல்லவா? கடமை என்ற முறையில்தான் நான் அவரைக் காதலிக்கிறேன். உங்கள் மீது நான் கொண்டுள்ள காதல் வேறு விதமானது. உங்கள் உடலை நான் காதலிக்கவில்லை. உங்கள் உள்ளத்தை, உங்கள் மேதையைக் காதலிக்கிறேன்."

"உன் போக்கும் பேச்சும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் எனக்குப் புரியாத பெரும் மர்மமாகத் தோன்றுகிறது."

ராஷ்மி என்னையே உற்றுப் பார்த்தாள். நான் மேலும் அவளிடம் கூறினேன்:

"உன்னைக் காதலிக்க எனக்கு உரிமை இல்லை. உன்னிடம் நான் எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது. ஏனெனில், உனக்குக் கணவன் இருக்கிறான். நீ இங்கு வந்து இந்த இருளில் என்னுடன் பேசிக் கொண்டிருப்பதை அறிந்தால், அவன் என்ன நினைப்பான்?"

"உங்களைப் பார்க்க வருவது அவருக்குத் தெரியும். அவர் எதையும் நுட்பமாகக் கவனிப்பவர். தவிர, நான் அவரிடமிருந்து எதையும் மறைப்பதில்லை."

"இதை யெல்லாம் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!"

"எனக்கும் அவருக்கும் வீட்டில் அடிக்கடி சச்சரவு ஏற்படுவது உண்டு. என் பேரில் கோபித்துக் கொண்டு அவர் நான் கணக்கில் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினி கிடப்பார். பிறகு எங்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு விடும்."

"இவ்விதம் உங்களுக்குள் அடிக்கடி சச்சரவு ஏற்படுவது உண்டா?"

"ஆமாம், அடிக்கடி சச்சரவும் மனஸ்தாபமும் ஏற்படுவது உண்டு."

"அப்படியிருக்க நீ ஏன் என்னைப் பார்க்க வருகிறாய்?"

"நான் ஏன் வருகிறேன் என்று எனக்கே தெரியவில்லை."

"இது உடலைக் காதலிப்பதாகாதா?"


இவ்விதம் நான் கேட்டதும் ராஷ்மி சில நிமிஷ நேரம் வரையில் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியாக, "நாழியாகி விட்டது. நான் திரும்பிச் செல்ல வேண்டும். அவர் ஆபீஸிலிருந்து வரும் நேரம் ஆகிவிட்டது" என்ற வழக்கமான பல்லவியுடன் அவள் புறப்பட்டுச் சென்று விட்டாள்.

ஒருநாளும் இராதவாறு அவளை விட்டுப் பிரிய அன்று எனக்கு மனமே இல்லை. நான் வெகுநேரம் அவள் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

(இந்தக் கதையின் இரண்டாவது பகுதி அடுத்த இதழில் வெளியாகும்.)

'வெயிற்காலத்து வயிற்றுக் கோளாறுகளை' தளதளக்கும் பானம் நிறுத்துகிறது



வெயில் காலத்தில் உங்கள் வயிறு மிகச் சுலபமாகக் கெட்டுவிடுகின்றது. உங்கள் வாயில் ஒருவித துர்க்கந்தம் ஏற்படுகிறது. தவிர நீங்கள் தளர்ச்சியாயும், சோம்பலுடனும் இருக்கின்றீர்கள். ஈனோ உங்கள் வயிற்றை சீராக்கி உங்கள் தேகநிலையை நேர்செய்து அதை ஆரோக்கியமாயும், சுறுசுறுப்பாயுமாக்குகின்றது.

ஈனோ எளிமையானது எனினும் வயிற்றின் புளிப்பை நீக்குவதில் அற்புத சக்தி வாய்ந்தது. எவ்வித கெடுதியும் செய்யாமல் அது புளிப்பு மிகுதியாலுண்டான அஜீர்ணம், நெஞ்செரிச்சல், வாயுப்பொருமல் முதலிய உபாதைகளை துரிதமாயும், நிச்சயமாகவும் நிவர்த்திக்கிறது. எட்டே செகண்டுகளில் நீங்கள் சுகம் பெறுகிறீர்கள்— வயிற்றுக்கு மட்டுமல்ல, வாய்க்குக்கூட!

மிதம் மீறி புசிப்பதாலோ அல்லது உண்பது உங்கள் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமலிருந்தாலோ ஈனோவின் விசேஷசக்தி, ஜீரண உறுப்புகளை மீண்டும் ஒழுங்குபடுத்த உதவுகிறது. உங்களுக்கு லேசாய் பேதியாக விரும்பினால் காலி வயிற்றில் கொஞ்சம் பெரிய 'டோஸ்' உட்கொள்ளவும். எப்பொழுதும் ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'டை கைவிருப்பில் வைத்துக் கொள்ளவும்.

அது உங்களுக்கு குணம் செய்வதுடன் குளுமையையும் புத்துணர்ச்சியையும் தருகிறது

ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'



பெரிய புட்டி ரூ. [illegible]
சிறிய புட்டி ரூ. [illegible]
உள்ளூர் வரிகள் பிரத்யேகம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகளாகும்

ENO. [illegible] (Tam.)

வட்ட மேஜை

கொடிக்கால் விவசாயிகள் கோரிக்கை

சென்னை சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வர உத்தேசித்துள்ள நிலச்சீர்திருத்தம் முக்கியமானதுதான். எனினும் அந்தந்தப் பிராந்தியத்தின் நிலைமைக்குத் தகுந்தவாறு சீர்திருத்த முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக வெற்றிலைக் கொடிக்காலைப் பற்றிச் சர்க்கார் நன்கு கவனிக்க வேண்டும். வெற்றிலைக் கொடிக்கால் எல்லாப் பிராந்தியங்களிலும் பயிரிட முடியாது. தகுந்த நீர்வளமும், வடிகால்களும் உள்ள பகுதிகளில் மாத்திரமே பயிரிட முடியும். இந்தத் தொழில் மூலம் சுமார் பதினையாயிரம் ஏக்கரில் ஒன்றரை லட்சம் பேர்கள் ஜீவனம் நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் சாகுபடியான நிலத்தில் தான் கொடிக்கால் பயிரிட முடியும். ஒவ்வொரு கொடிக்காலும் மூன்று வருஷம் வரை இருக்கும். பின் அதை அழித்துவிட்டு வாழை போட வேண்டும். இரண்டு வருஷ காலத்துக்குப் பிறகு வாழையை அழித்து விட்டு ஒரு வருஷம் சாகுபடி செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் மீண்டும் அது கொடிக்கால் போடத் தகுதியான நிலமாகிறது. ஒரு நிலத்தில் தொடர்ச்சியாகக் கொடிக்கால் பயிரிட முடியாது.

ஆகவே, ஒவ்வொரு வருஷமும் சாகுபடியான நிலம் தேவையாகிறது. இப்போது வரும் சட்டப்படி குடியானவரை நிலத்தில் இருந்து வெளியேற்றக் கூடாது என்றால் கொடிக்கால் போடத் தரிசு நிலம் கிடைக்காது. அப்படியானால் ஒன்றரை லட்சம் பேர் வரை வேலை இல்லாமல் போக நேரிடுகிறது. பதினையாயிரம் ஏக்கரில் சுமார் ஐயாயிரம் விவசாயிகள்தான் சாகுபடி செய்து வருகிறார்கள். இவர்களுக்குத் தற்சமயம் அதிகப்படியான நிலம் வைத்திருப்பவர்களிடம் இருந்து வசதி செய்து கொடுக்கலாம். ஆகவே ஐயாயிரம் பேர்களுக்கு ஏற்படும் சிறிது கஷ்டத்தால் ஒன்றரை லட்சம் பேர் வசதி யடைகிறார்கள்.

ஆகவே இந்த வெற்றிலைக் கொடிக்கால் தொழிலுக்கு நிலம் ஒதுக்கி, அதற்கு மேற்படி சட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்கச் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தொட்டியம் எஸ். சதாசிவம்
19—8—55 கொடிக்கால் விவசாயசங்கக் காரியதரிசி

★

பி. ஸி. ஜி

என் கணவர் மத்திய சர்க்காரில் வேலை பார்ப்பவர். வயது 29. நல்ல ஆரோக்கியமான பழக்க வழக்கங்களுங்கூட. நல்ல உடல் வலிமையும் பெற்றிருப்பவர். அவருக்குப் பதினோராம் வயதில் 'நிமோனியா'வால் சுமார் ஒரு மாத காலமே வருந்தினர். அதைத் தவிர கடந்த இருபத்தொன்பது வருஷங்களில் வேறு குறிப்பிடத்தக்க பிணி ஒன்றுமே ஏற்பட்டது கிடையாது.

இவ்வருஷம் சென்ற மே மாதத்தில் திருச்சி நகரில் பி. ஸி. ஜி போட்டார்கள். அப்பொழுது அவரும் பி.ஸி.ஜி பரீட்சார்த்த ஊசி போட்டுக் கொண்டார். பி. ஸி. ஜி தேவையில்லை என்று சொல்லி விட்டார்கள். ஆனால் ஊசி போடப் பட்ட ஒரு வாரத்துக்குள் இருமல் ஆரம்பமாகியது. அதைத் தொடர்ந்து ஜுரமும் ஆரம்பமாயிற்று. டாக்டரிடம் காண்பித்துச் சிகிச்சை செய்து கொண்டதில் ஜுரம் இறங்கவில்லை. இருமலும், மார்பு வலியும் கோரமாகவும் அதிகமாகவும் ஆகிவிட்டது. ரத்தப் பரீட்சை செய்ததில் இவ்வியாதி "இயோஸினோபாலியா" என்று அறிந்து மருந்துகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது அவர் ரொம்பவும் மெலிந்து, பலஹீனராகி விட்டார். இரண்டு மாத காலமாய் வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

அவரை இக் கதிக்கு ஆளாக்கியது அந்த பி. ஸி. ஜி பரீட்சார்த்த ஊசியே என்று நிச்சயமாக நம்புகிறேன். இதைப்போல் எவ்வளவு பேர்கள் அவதிப்படுகிறார்களோ! யார் கண்டார்கள்! இதற்கு விமோசனம் உண்டா!

மதுரை
19—8—55 * * * *

●

நெம்பும் முயற்சி!

சென்ற வாரக் (28ந் தேதி) 'கல்கி'யில் "நெம்பும் முயற்சி" என்னும் கார்ட்டூனைக் கண்டவருக்குப் பல விஷயங்கள் புரிந்திருக்கும். இந்த பி. ஸி. ஜி பிரச்னை சமயத்துக்கேற்றவாறு கல்கி கார்ட்டூனை எழுதி நம்மைப் பல விஷயங்களை எளிதில் புரிந்து கொள்ளச் செய்கிறது. பாறையை நெம்ப ஊசி எவ்வளவு உபயோகமானதாக இருக்குமோ அவ்வளவு உபயோகமானது க்ஷய வியாதியைத் தடுக்கப் போடும் பி. ஸி. ஜி என்று கார்ட்டூனிலே மிக எளிதிலே விளங்க வைத்திருக்கிறீர்கள். அன்றியும் க்ஷயமாகிய பாறையை ஊசி கொண்டு நெம்பப் புகும் நேரம் கடப்பாரையாகிய நல்ல குடிதண்ணீர், நல்ல உணவினுல் தள்ளிவிட்டு நம் சுகாதாரமாகிய முன்னேற்றப் பாதையை எளிதில் கடக்கலாம் என்பதைச் சித்திரத்தின் மூலம் கண்டு வியக்காமலிருக்க முடியவில்லை.

செங்காணிபாளையம்
27—8—55 எஸ். கே. துரைசாமி

தர்மமும் அதர்மமும்

அதர்மம் தர்மத்துக்கு உணவு. ஆதலால் தர்மம் இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். இது நியாயமே. அதர்மம் முற்றிலும் இறந்து சூன்யமாய்ப் போய் விடுமானுல் பின்பு தர்மம் உண்ண உணவில்லாமல் தானும் மடிந்து விடும். —பாரதியார்



'டேபிள் டென்னிஸ்' பந்தின் மென்மையைக் கண்டு, 'இந்த விளையாட்டு காரசாரமாக இருக்காது' என்று ஒருவர் கூற நான் கேட்டிருக்கிறேன். சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு போட்டிக்கு நான் அவரை அழைத்துக் கொண்டு போனேன். போட்டி முடிந்தவுடன் "இந்த விளையாட்டு இவ்வளவு அழகாக இருக்குமென்று நான் கனவில்கூட நினைக்கவில்லை" என்று அழுத்தத் திருத்தமாகச் சொன்னார்.

இந்த விளையாட்டின் கருவிகள் அனைத்தும் அழகாக அமைந்துள்ளன. கண்கள் குளிரும் பச்சை வர்ணம் பூசப்பட்ட மேஜை. குறுக்கே அழகாகப் பின்னப்பட்ட வலை. கற்பூர வாசனை மிளிரும் மென்மையான பந்து. விளையாடும் மட்டை (Bat) கனமில்லாதது. மழை வெயில் காலங்களால் இந்த விளையாட்டுக்குத் தடை ஒன்றுமில்லை. ஒரு நல்ல பந்தயத்தைப் பார்த்தால் மனச்சாந்தி ஏற்படுகிறது. மொத்தத்தில் ஜாருக்கான விளையாட்டு.

சென்னை ராஜ்யத்தில் இந்த விளையாட்டுக்கு நல்ல மதிப்பும் ஊக்கமும் உண்டு. காலஞ்சென்ற பி. என். விஸ்வநாத ஐயர் அவர்களும், ஸ்ரீமதி பாலாம்பாள் கிருஷ்ணசாமி அவர்களும் இந்த விளையாட்டுக்குச் சென்னையில் சலுகை தேடி வைத்தார்கள். பி. என். விஸ்வநாதய்யர் அவர்களால் பல இளைஞர்கள் இந்த விளையாட்டில் முன்னணிக்கு வந்திருக்கிறார்கள். ஸ்ரீமதி பாலம்பாள் கிருஷ்ணசாமி அவர்களின் முயற்சியில் பல பெண்கள் தற்போது இந்த விளையாட்டில் நல்ல பெயர் பெற்றிருக்கிறார்கள்.

முதன் முதலாக 1938-ம் வருஷத்தில் அகில இந்தியப் போட்டி நடந்தது. கடந்த 17 வருஷங்களில் இந்த விளையாட்டின் முன்னேற்றம் எவருக்கும் மகிழ்ச்சி விளைவிக்கும். சென்னையிலிருந்து வி. வெஙராமனும், டி. திருவேங்கடமும் அகில இந்தியப் போட்டியில் முதல் ஸ்தானம் வகித்திருக்கின்றனர். ஸ்ரீமதி விஜயா ராஜகோபாலன், ஸ்ரீமதி வி. கே. கே.பிள்ளை, ஸ்ரீமதி ஏ. ருக்மணி இவர்கள் பெண்கள் போட்டியில் திறமையுடன் விளையாடி யிருக்கின்றனர். அகில இந்தியப் போட்டியில் சென்னைக்கு வெற்றிகள் கிடைத்ததால் தற்போது எல்லா இடங்களிலும் இந்த விளையாட்டுக்குச் செல்வாக்கு உண்டு.



ராகேல் ஜான்


பெண்கள் பகுதியில் முதன் முதலில் இந்த விளையாட்டுக்கு ஊக்கம் குறைவாகவே இருந்தது. பம்பாயிலுள்ள பார்ஸிகள் இந்தவிளையாட்டில் கலந்து கொண்டு முதல் ஸ்தானங்களைப் பெற்றனர். பிறகு சென்னையிலும் மதிப்பு உண்டாயிற்று. சயீத் கல்தானு என்ற ஹைதராபாத் விளையாட்டுக்காரர் பல வருஷங்களாகத் தோற்கடிக்கப்படாமல் முதல் ஸ்தானத்தை வகித்து வந்தார். ஆனால் மஹாராஷ்டிரத்தில் மீனு பராண்டே அவர்கள் சயித் கல்தானுவைத் தோற்கடித்து அகில இந்தியப் புகழ் பெற்றார். சமீபத்தில் பம்பாயில் நடந்த போட்டியில் மீனு பராண்டே தோல்வி யுற்றார். அந்த கௌரவம் சென்னைக்குத்தான். ராகேல் ஜான், மீனு பராண்டேயைத் தோற்கடித்து இந்தியாவில் ஒரு அதிர்ச்சி ஏற்படுத்தி யிருக்கிறார்.

இந்த விளையாட்டுக்கு ஊக்கம் கொடுக்க மேனாட்டிலிருந்து உலகப்பிரசித்திபெற்ற விக்டர் பார்னா அவர்கள் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து இளைஞர்களுக்கு இந்த விளையாட்டின் நுட்பங்களை எடுத்துரைத்தார். அவர் மேனாடு திரும்பும்போது சொன்னதாவது: "இந்த விளையாட்டில் மூன்று பெண்கள் இந்தியாவுக்குப் புகழ் கொண்டுவரப் போகிறார்கள்.—சயீத் கல்தானு, மீனு பராண்டே, ராகேல் ஜான்."

ராகேலுக்குப் பதினைந்து வயதுதான். தற்போது தியாகராய நகரிலுள்ள வித்யோதயா பள்ளியில் படிக்கிறார். அவருடைய தகப்பனார் பல வருஷங்கள் வட இந்தியாவில் வேலை பார்த்து வந்து தற்போது சென்னையில் இருக்கிறார். அவரும் நன்றாக 'டேபிள் டென்னிஸ்' விளையாடுவார். பத்து வயதானபோதே ராகேல் கராச்சியில் இந்த விளையாட்டைக் கற்றுக் கொண்டார். பல போட்டிகளில் கலந்து கொண்டு பாகிஸ்தானில் முதல் ஸ்தானம் பெற்றார். அவருடைய தகப்பனார் 1951-ம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பினார். பி.என். விஸ்வநாத அய்யர் அவர்கள் ராகேலின் விளையாட்டைப் பார்த்து விட்டு. பம்பாயில் நடந்த உலகப்போட்டிக்குத் தேர்ந்தெடுத்தார்.


சென்னையில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றுச் சென்னை ராஜ்யத்தின் முதல் ஸ்தானம் ராகேலுக்குக் கிடைத்தது. போன வருஷம் பரோடாவில் நடந்த அகில இந்தியப் போட்டியில் ஆசியாவின் முதல் விளையாட்டுக்காரரான ஸ்ரீமதி கூல் காளிக்வாலாவைத் தோற்கடித்து, இந்தியாவின் மூன்றாவது ஸ்தானத்தைப் பெற்றார். சமீபத்தில் பம்பாய் ராஜ்யப் போட்டியில் ராகேல், மீனு பராண்டேயைத் தோற்கடித்தார். ராகேல் மேலும் இந்த விளையாட்டில் தேர்ச்சி அடைந்து சென்னைக்குப் புகழ் தேடிவைப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இதுவே உங்களுக்கு உத்தரவாதம்.



சமையலுக்குத் துஷார் உபயோகிக்கும் போது முதல் தர வனஸ்பதி-யை உபயோகிப்பதாக நீங்கள் நிச்சியமாகக் கருதலாம். ஏனெனில் அரசாங்கம் நிர்ணயித்த தரத் தில் அணுப்பிசகாமல், நவீன பாக்டரி-யில் சுகாதார முறையில் துஷார் தயாரிக் கப்படுகிறது.


தென் இந்தியாவின் மிகப்பெரிய வனஸ்பதி பாக் டரியில், இந்திய மூலதனம், இந்திய உழைப்புமூலம் தயாரிக்கப்படுகிறது



வைட்டமின் 'ஏ' பொதுவாக வளர்ச்சிக்கு உதவுகிறது. நகைசுரக்களின் ஆரோக்கியத்துக்கு அது அத்யாவசியமானது; தொத்துநோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் வைட்டமின் 'டி' உருவாக்குகிறது.

துங்கபத்ரா இன்டஸ்ட்ரீஸ், கர்நூல்

பற்களைப் பரிசுத்தமாக்கும் மக்ளீன்ஸ்!



இம் மூன்று கோப்பைகளைப் பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம்.

மக்ளீன்ஸ் பற்களுக்கு இடையிலுள்ள சந்துகளை துப்புரவாக சுத்தம் செய்து

ஊத்தையை அகற்ற சிறந்த சாதனம்

பற்களின் மேல் படிந்திருக்கும் பசியில் விப்பாயிட்ஸ் என்று சொல்லப்படும் அசுத்தம் கலந்துள்ளது. விப்பாயிட்டை எளிதில் சுத்தம் செய்யமுடியாது. இவை தவறாமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச்சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய விப்பாயிட்ஸை அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்யவேண்டும். விப்பாயிட்ஸை கரைக்கக்கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் விப்பாயிட்ஸை லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச்செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பற்பசையை தினந்தோறும் இரு முறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.

க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்



MTY-41 TAM



"அத்தான்......! ஓ அத்தான்......! உன்னைத்தானே! இன்னிக்குச் சாயந்திரம் காலேஜிலிருந்து வரும்போதாவது முகப் பவுடர் வாங்கி வருகிறாயா?"

'உன் அழகுக்கு முகப்பவுடர் இல்லாததுதான்குறை!' என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால், "சரி, வாங்கி வருகிறேன்..." என்று பதிலளித்தேன்.

"வாங்கிண்டு வந்துடு......" என்றாள்.

"சரி, அப்புறம்...?"

"பிளாஸ்டிக் சீப்பு, வாசனைத் தைலம்..."

"ஜானகி! ஒரு ஜாபிதாவே எழுதிக்கொடுத்துவிடு. மறக்காமல் இருக்கும்!"

"கேலி செய்யாதே, அத்தான்......! பெரிய பெரிய இங்கிலீஷ் புத்தகங்களையெல்லாம் படிச்சு ஒப்பிக்கறே...நான் கேட்ட சாமான் மட்டும் மறந்து விடுவாயா...?"

"சரி, மறக்காமல் வாங்கி வருகிறேன்... பரீக்ஷைக்குப் படிக்கும்போது தொந்தரவு செய்யாதே! மாமிக்குப் போய் ஏதாவது ஒத்தாசை பண்ணு......"

"சரி, அத்தான்! நீ படி!" என்று 'ஹி...ஹி' என்ற அசட்டுச் சிரிப்புடன் கூறி ஜானகி என் அறையை விட்டு மெள்ள அகன்றாள்.

ஜானகி என் மாமாவின் ஒரே பெண். வெகு நாட்களாகக் குழந்தை யில்லாததால், காசி, ராமேசுவரம் என்று ஸ்தல யாத்திரை செய்த பயன்—ஜானகி! குழந்தையை அளித்த பகவான் அந்தக் குழந்தைக்கு அறிவையும், அழகையும் அளிக்க ஏனோ மறந்து விட்டானே!

எப்படியோ அவளும் வளர்ந்து விட்டாள். இப்போது அவளுக்குப் பத்தொன்பது வயது. வயதுதான் அதிகமே தவிர, வயதுக்குத் தகுந்த விவேகம், பெண்மையின் பூஷணமான நாணம், அடக்கம் ஒன்றுமே அவளிடம் இருக்கவில்லை. வஞ்சனையின்றி மத மத வென்று அவள் வளர்ந்திருந்தாள்.

ஜானகிக்கு ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிப்பு ஏறவில்லை. மந்த புத்தி, பாவம்! சுபாவத்தைத் திருத்த முடியுமா? சுறுசுறுப்பு என்பது அவளிடம் துளிக் கூட இருக்கவில்லை.

நான் என் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. என் தந்தை நிலபுலன்களைப் பார்த்துக் கொண்டு கிராமத்திலேயே தங்கி விட்டார். பள்ளிப் படிப்பு முடிந்த பின், இண்டர்மீடியட் வகுப்பும் தேறிய பிறகு, திருச்சியில் பி. எஸ்ஸி. வகுப்பில் சேர்ந்தேன். என் மாமா சிவராம அய்யர் திருச்சியில் இருந்தது ஒரு விதத்தில் சௌகரியமாகி விட்டது. அவருக்கு பாங்கியில் குமாஸ்தா வேலை. ஆகவே என் காலேஜ் படிப்பு முடியும் வரை நான் மாமா வீட்டில் இருக்க வேண்டியதாயிற்று. என்றால் அவருக்குச் சிரமம் இல்லை. ஏனெனில் மாதா மாதம் தேவைக்கு அதிகமான பணம் என் தந்தையிடமிருந்து வந்து விடும்.

எனக்கு ஜானகியை மணமுடித்து விட வேண்டும் என்பது மாமா, மாமியினுடைய ஆசை. ஆனால் அந்த அசட்டுப் பித்துக்குளிப் பெண்ணை மணக்க எனக்கு என்ன பைத்தியமா?

வாசலோடு சினிமா, டிராமா விளம்பரம் பாண்டு வாத்தியக் கோஷ்டியோடு போனால், அவ்வளவுதான்......குளித்துக் கொண்டிருந்தாலும் கூட குடுகுடு வென்று வாசலுக்கு ஓடிப்போய் விடுவாள் ஜானகி. சாப்பிட்டுக் கொண்டிருந்தால், எச்சில் கையோடு கூட வாசலுக்கு ஓடுவாள்! நான்கைந்து நோட்டீஸ்களாவது வாங்காமல் அவள் திரும்ப மாட்டாள்!

"ஏண்டி பெண்ணே! இப்படி வெட்கமில்லாமல் குடு குடுன்னு எச்சிற் கையோடு வாசலுக்கு ஓடறயே! வீட்டிலே வயசு வந்த பிள்ளை...(அது நான்தான்!) ஒருத்தன் இருக்கிறானே என்று கொஞ்சம் அடக்கம் ஒடுக்கம் வேண்டாம்......... மானம் போறதேடீ......!" என்று மாமி தன் தலையில் அடித்துக் கொள்வாள்.

"சரி, அம்மா! இனிமேல் சமர்த்தா இருக்கேன்" என்று சிறு குழந்தையைப் போலச் சொல்லுவாள்.

ஆனால் இந்தப் பேச்செல்லாம் அடுத்த சினிமா வண்டி வரும் வரையில்தான்!

இப்படிப்பட்டவளை மணந்து வாழ்க்கை நடத்த எவன் பிறந்திருக்கிறானோ என்று நான் சில சமயங்களில் எண்ணி அங்கலாய்ப்பதும் உண்டு.

ஜானகியிடம் எனக்கு ஆசையும் இல்லை; வெறுப்பும் இல்லை! ஆனால் அநுதாபம் இருந்தது. இவ்வளவு வயசாகியும் விவேகமின்றி, அசடாயிருக்கிறாளே என்ற பச்சாத்தாபம் இருந்தது!

ஆனால் அவளுக்கு என்மீது பிரியம் இருந்தது. அது காதலாக இருக்கக் கூடும் என்று நான் கருதவில்லை. அசட்டுப் பெண்ணுக்குக் காதலுணர்ச்சி வேறா?

காலையில் நான் எழுந்திருக்கையில் பிரஷ்ஷையும், பற்பசையையும் தயாராக வைத்திருப்பாள். குளிப்பதற்குத் தேவையான சுட்டில் வெந்நீர் விளாவி எடுத்து வைப்பாள். நான் வேண்டாம் என்று சொன்னால் கூட, "என்ன அத்தான்! இப்படி வெட்கப்படுகிறாயே! நான் வேற்று மனுஷியா, என்ன?" என்று சுதந்திரம் கொண்டாடுவாள்.

குளித்து விட்டு வந்தவுடன் சீப்பு, கண்ணாடி, தலைக்குத் தைலம் எல்லாம் தயாராக எடுத்துத் தருவாள். என் அறையை நன்றாகப் பெருக்கிக்கோலமிட்டு வைத்திருப்பாள். இரவில் படித்து விட்டுத் தாறுமாறாகப் போட்டு விட்டுச் சென்ற புத்தகங்களை ஒழுங்காக எடுத்து அடுக்கி வைப்பாள். இந்த அசட்டுப் பெண்ணுக்கு எப்படி இவ்வளவு தூரம் செய்ய முடிகிறது என்று நான் வியப்பதுண்டு!

கடவுள் எங்கேயிருக்கிறார்?

எங்ஙனமேனும் கடவுளை நேரில் பார்க்க வேண்டுமென்ற பேராவலுடன், சுகப் பிரம்மரிஷி காட்டு வழியே, 'கடவுளே, கடவுளேயோ!' என்று கதறிக் கொண்டு போயினராம். அப்போது அங்கிருந்த மலை, கனை, மேகம், நதி, ஓடை, மரம், செடி, கொடி, இலை, மலர், பறவை, விலங்கு எல்லாப் பொருள்களும் 'ஏன், ஏன்?' என்று கேட்டனவாம்.

எங்கும் கடவுள் நிறைந்திருக்கிறார். உலகமெல்லாம் கடவுள் மயம் என்று வேதம் சொல்லும் கொள்கையையே மேற்படி கதை விளக்குகிறது. —பாரதியார்

"ஜானகி, நீ ஏன் இதெல்லாம் செய்கிறாய்......? இவற்றைச் செய்ய வேலைக்காரி இல்லையா, என்ன?" என்பேன்.

"......என்ன அத்தான்! உன் அறையைப் பெருக்கிச் சுத்தமாக வைப்பதற்குக் கூடவா எனக்கு உரிமை இல்லை......?" என்று கேட்டுவிட்டுச் சிரிப்பாள்.

'இவ்வளவு அநுசரணையாக, அழகாகப் பேசுகிறாளே! பாவம்! அந்தக் கடவுள் சிறிது அழகையும், அறிவையும் கொடுத்திருக்கக் கூடாதா?' என்று அங்கலாய்த்துக் கொள்வதை விட வேறு என்ன செய்ய முடியும்?

நான் அவளிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை என்பது என் மாமா மாமி இவர்களது அபிப்பிராயம். ஜானகிக்கு வெவ்வேறு வர்ணச் சேலைகள் உடுத்தி, அலங்காரம் செய்து, "அத்தானுக்குக் காப்பி கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வா!" என்று அனுப்புவார்கள்.

"தாழம்பூ வைத்துப் பின்னிக் கொண்டிருக்கிறேனே! அழகாக இல்லையா?" என்று தன் தலைப் பின்னலை முன்னுக்கு இழுத்துவிட்டு, என் கண்களுக்கு எதிரில் பிடித்தபடி கேட்பாள் ஜானகி.

"தாழம்பூ தானே? பிரமாதமாக இருக்கு!" என்பேன்.

"இந்த ரோஸ் ரிப்பன் நேற்றுத்தான் வாங்கினது. உன்னிடம் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டது. நேற்று நானே போய் வாங்கினேன்!"

"ஓஹோ! சரி, நீ கொஞ்சம் வெளியே போ! பரீட்சைக்குப் படிக்கும்போது தொந்தரவு செய்யாதே!"


"சரி, அத்தான்! நீ படி. இதோ நான் போகிறேன்" என்று கூறிவிட்டு ஹி, ஹி என்ற அசட்டுச் சிரிப்புடன் போவாள்.

சாப்பிடும்போது அறுபது வயசான கிழவியைப் போல், "நன்றாய் வயிறு நிறையச் சாப்பிடு, அத்தான்! நாளைக்கு அத்தை வந்து 'என்னடி, குழந்தை துரும்பா இளைச்சுப் போயிட்டானே!' என்று குறை சொல்லும்படி வைத்துக் கொள்ளாதே. உனக்கு ரொம்பப் பிடிக்குமே யென்று வெண்டைக்காய்க் கறி செய்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம் போட்டுக்கோ......!" என்று இலையில் தள்ளுவாள் ஜானகி.

ஆத்திரமாக வந்தாலும், பிறகு அநுதாபமாக மாறிவிடும். அவளைக் கோபிக்கவும் முடியாது; கெஞ்சவும் முடியாது.

* * *

ஒரு நாள் மேஜை மீதிருந்த புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கிறாள் போலிருக்கிறது. என்னுடன் கல்லூரியில் படிக்கும் ஒரு பெண்ணின் புகைப்படம் அவள் கண்ணில் பட்டுவிட்டது.



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குத் 'தமிழ் இன்பம்' என்னும் நூலுக்கு இந்திய அரசாங்கத்தார் பரிசு வழங்கியது குறித்து ஆகஸ்டு மாதம் 19-ந்தேதி பாராட்டு விழா நடத்தினர். இந்த விழாவுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தலைவர் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமை வகித்துப் பேராசிரியருக்கு வாழ்த்துப்பா அடங்கிய வெள்ளிப் பேழையை வழங்கினார். பேராசிரியர் பாராட்டுக்கு நன்றியுரை கூறுவதையும், திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் அமர்ந்திருப்பதையும், விழாவுக்கு வந்திருந்த கூட்டத்தில் ஒரு பகுதியையும் மேலே படத்தில் காணலாம்.

"அத்தான்! இந்தப் பெண் யார்? இவள் உன் சிநேகிதியா?" என்று கேட்டாள். அவள் முகத்தில் இதுவரை நான் கண்டேயிராத துக்கத்தின் சிறு சாயல் படிந்திருந்தது.

"கலாசாலையில் என்னுடன் படிக்கிறாள். என் சிநேகிதி. நீ ஏன் அதை எடுத்தாய்? காணவில்லையே என்று வெகு நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேனே, கொடு இப்படி!" என்று அளவற்ற கோபத்துடன் கேட்டேன்.

"நான்தான் எடுத்தேன். இந்தப் புகைப் படத்துக்கு உன் மேஜையின் மேல் என்ன வேலை?" என்று கேட்டாள்.

"சீ! அதிகப்பிரசங்கி! கொடு இப்படி, அதை!" என்று முரட்டுத்தனமாக அவள் கையைப் பிடித்து இழுத்தேன்.

"கொடுக்க முடியாது" என்று சட்டென்று அந்தப் படத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்து விட்டாள் ஜானகி.

எனக்குக் கோபம் தலைக்கேறியது. அவளுடைய கன்னத்தில் 'பளார்' என்று இரண்டு அறை வைத்தேன்.

"சீ, கழுதை! போ, வெளியே! இனிமேல் என் அறைக்குள் வந்தால் காலை முறித்து விடுவேன்!" என்று கத்தினேன்.

அறைந்ததால் என் கை வலித்தது. அவளுக்கு உறைத்ததாகவே தெரியவில்லை. வேறு ஒரு பெண்ணாக இருந்தால் நான் அடித்திருப்பேனா? அல்லது அவள் அந்த அடியைத் தாங்கிக் கொண்டிருப்பாளா என்பது வேறு விஷயம்!

ஜானகியின் கண்களில் ஒரு பொட்டுக் கண்ணீரோ, முகத்தில் ஒருவித களிப்போ ஒன்றுமே யில்லை!

"மன்னிச்சுக்கோ அத்தான்! தெரியாமல் செய்து விட்டேன். இனிமேல் உன் அறைக்குள் நான் வரமாட்டேன்!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

"என்னடி ஜானகி! அத்தான் உன்னை அடித்தானா என்ன?" என்றாள் மாமி.

"இல்லையே! அத்தான் என்னை அடிப்பாரா, என்ன?" என்ற அவள் கூறிய பதிலும் எனக்குக் கேட்டது.

ஒன்றையுமே ஒளித்துப் பேசிப் பழக்கமில்லாத அவள் அன்று அப்படி மறைத்துப் பேசியது ஏன்?

எனக்குக் கல்லூரிப் படிப்பு ஒரு வழியாக முடிந்தது. அன்று ஊருக்குப் புறப்படலாம் என்றிருந்தேன்.

"சந்தானம்! உன் அப்பாவுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அவருக்கு ஆட்சேபனை இல்லை; உன் சம்மதந்தான் தேவை. என்ன சொல்லறே!" என்றார் மாமா.

"என்ன விஷயம், மாமா? புரியும்படி சொல்லுங்கள்" என்று ஒன்றும் அறியாதவன் போலக் கேட்டேன்.

"ஜானகி கல்யாண விஷயமாகத்தான். அவளுக்கு வயதாகி விட்டது. இனியும் தள்ளிப் போடுவது உசிதமில்லை!"

"வாஸ்தவம்தான்! நடத்திவிட வேண்டியதுதானே!"

"உன் சௌகரியம் எப்படியோ? நீ 'சரி' என்று சொல்ல வேண்டியதுதான்!"

"மாமா! தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள்! கல்யாணத்துக்கு இப்போது

பணம்

மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம். இறங்காத விஷம். இதன் பெயர் பணம்! —பாரதியார்

எனக்கு இஷ்டமில்லை! பரீட்சை முடிவு தெரிந்து வேலை கிடைக்கட்டும்......!"

"ஜானகி உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று சொல்லுகிறாள்!" என்றாள் மாமி நடுவில்.

"அந்தப் பேச்சை விடுங்கள், மாமி! அவள் என் தங்கை மாதிரி...வேறு நல்ல இடமாகப் பார்த்து நானே முடித்து வைக்கிறேன்......"

பேச்சு இங்கே அறுந்தது.

அன்று இரவு புறப்படுவதற்கு முன்னால், ஜானகி என்னைச் சந்தித்தாள். அன்று என்னிடம் அறை வாங்கிக் கொண்டாளே, அதன் பின் இப்போதுதான் நான் அவளைப் பார்க்கிறேன்.

"என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாதுன்னு சொல்லி விட்டாயாமே, அத்தான்!" அவள் கண்களில் நீர் தேங்கி அன்றுதான் பார்த்தேன். நான் பதில் சொல்லவில்லை.

"என் அத்தான்! என்னைக் கண்டால் பிடிக்க வில்லையா...? போட்டோவில் இருந்த பெண் போல நான் அழகாக இல்லையா......?"

என்ன பதில் சொல்வது என்று தெரிய வில்லை எனக்கு.

"சரி, அத்தான்! ஊருக்குப் போய்க் கடிதம் போடு! உடம்பைப் பார்த்துக் கொள்......! எனக்கு நீயே மாப்பிள்ளை தேடிக் கண்டு பிடிக்கப் போவதாக அப்பாவிடம் சொன்னாயாமே......அந்தச் சிரமம் உனக்கு வேண்டாம், அத்தான்! நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை!" என்று கூறி 'விர்' ரென்று போய் விட்டாள்.

கிராமத்துக்குப் பெற்றோரிடம் சென்றேன். பரீக்ஷை பாஸாகி, மதுரையில் வேலையும் ஆயிற்று. கல்லூரியில் என்னுடன் படித்த பெண்—சுலோசனாவை—என் பெற்றோருக்கும் பிடித்து விட்டது. என் மண விஷயத்தில் எனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தார் என் தந்தை. ஆகவே ஒருவித தகராறுமின்றி விவாக காரியங்கள் நடந்தன.

ஜானகிதான் ஓடி ஓடிக் காரியம் செய்தாள். மணக்கோலத்தில் இருந்த என் வேஷ்டியுடன், என் மனைவி சுலோசனாவின் புடவையை முடிந்து விட்டு 'கொல்' லென்று சிரித்தாள்.

மதுரையில் புதுக் குடித்தனம் வைத்தேன். ஒத்தாசைக்கு ஜானகியையும் அழைத்து வந்திருந்தாள் என் தாயார்.

ஜானகிக்கு வரன் தேடும் முயற்சியில் இறங்கினேன். இவளை மணக்க எவன் முன் வருவான்?

ஒருநாள் காலை. பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். "ஐயோ, அத்தான் உங்கள் காலடியில் பாம்பு!" என்ற கூக்குரல் கேட்டு, உதறிப்படித்துக் கொண்டு எழுந்தேன். ஒரே தாவாகத் தாவி அருகிலிருந்த மேஜைமீது ஏறிச் சுவரோடு சுவராக நின்றேன்.

என் மனைவி "பாம்பு" என்ற கூக்குரல் கேட்டவுடன், நடுநடுங்கிப் போய் வாசலுக்கு ஓடிப்போய் விட்டாள்! என் தாயார் மாடிப் படியின் உச்சியில் ஏறிக் கொண்டு "தண்டாயுதபாணி, முருகா, உனக்குப் பாலாபிஷேகம் செய்கிறேன்! குழந்தையை ஒன்றும் செய்து விடாதே!" என்று பழனி ஆண்டவனைத் துணைக்கு அழைத்தாள்.

பாம்பு படமெடுத்தாடிக் கொண்டிருந்தது. மேஜையின் மேலிருந்து கீழே குதித்து விடலாம் என்றால், உள்ளத்தில் துணிவு இல்லை.

ஆனால் ஜானகிக்கு அந்தத் துணிச்சலும் சுறுசுறுப்பும் எங்கேயிருந்துதான் வந்து விட்டதோ! கையில் விறகுக் கட்டையுடன் ஓடி வந்தாள்.


"அத்தான்! மேஜைமேலிருந்து கீழே குதித்து விடாதே! ஜாக்கிரதை!" என்று எச்சரித்தாள் என்னை.

விறகுக் கட்டையைத் தலைக்குமேல் சுழற்றி, பாம்பின் தலையில் ஒரு அடி கொடுத்தாள்! அடிபட்ட பாம்பு சீற்றம் கொண்டு ஜானகி இருந்த பக்கம் திரும்பியது. மின்வெட்டும் நேரத்தில் ஜானகியின் காலில் ஒரு போடு போட்டது! விறு விறுவென்று நெளிந்து ஓடி, தோட்டத்துக்குள் சென்று மறைந்து விட்டது.

சுருண்டு விழுந்த ஜானகியைத் தாங்கிக் கொண்டு, கீழே மெல்லக் கிடத்தினேன். அவள் தலையை என் மடிமீது வைத்துக் கொண்டேன்.

"எனக்கு மாப்பிள்ளை தேட வேண்டிய அவசியம் இல்லை, அத்தான்; நான் இனி பிழைக்க மாட்டேன்!" என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

ஜானகி போய் விட்டாள்! என் மடி மீது தலை வைத்துப் படுத்தபடியே உயிரை விட்டு விட்டாள்! எனக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்து விட்டாள்!



'அனாஸின்'

வில்லைகளில் கலந்துள்ள நான்கு மருந்துகளால் உங்கள் வலியை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்



'அனாஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைநார்களில் நோவு இவற்றை நீக்கும்.

அனாஸினில் அடங்கிய மருந்துகள் :—

1. கொயினா : ஜுரத்தடுப்புகுணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் பிரதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அஸிடில்ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் நிறுத்துவதற்கு உபயோகமுள்ளது.

அனாஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனாஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல் வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம்பெற எப்பொழுதும் அனாஸினையே கேட்டு வாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 44

பாப்பா மலர் தொடர் கதை

பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

9. ஆ! நீயா!

'யாரது உள்ளே வருவது?' என்று சப்-இன்ஸ்பெக்டர் கேட்டதும், மதுரநாயகம் வாசல் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார். முதலாளி மோகனரங்கத்தைக் கண்டதும், "அடடே, உள்ளே வாருங்கள். அவசரத்தில் நீங்களும் கூட வருகிறீர்கள் என்பதை மறந்தே போய் விட்டேன்!" என்று கூறிப் பக்கத்திலிருந்த நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னார் மதுரநாயகம்.

மோகனரங்கம் நாற்காலியில் உட்கார்ந்ததும், "இவர்தான் எங்கள் சபா முதலாளி. கடிகாரம் இவருடையது தான். நாலைந்து மாதங்களுக்கு முன்பு தொலைந்து விட்டது" என்று சப்-இன்ஸ்பெக்டரிடம் கூறினார் மதுரநாயகம்.

"நாலைந்து மாதங்களாகி விட்டதா! ஆமாம், எப்படி அது தொலைந்தது?" என்று கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

உடனே மோகனரங்கம், "நாங்கள் ஆறு மாதத்துக்கு ஒரு முறை கணக்கு முடிப்பது வழக்கம். அன்றைக்குக் கணக்கு முடிக்கும் நாளாதலால், இரவு நாடகக் கொட்டகையிலே நானும் மதுரநாயகமும் தங்க வேண்டியதாகி விட்டது. இந்த ரமணிப் பயலை வீட்டுக்கு அனுப்பிச் சாப்பாடு எடுத்துவரச் சொன்னோம். சாப்பிட்டுவிட்டுக் கணக்கையெல்லாம் பார்த்து முடிக்கும் போது நடு இரவாகி விட்டது. பிறகு, என் கைக் கடிகாரத்தைக் கழற்றி மேஜை மேல் வைத்து விட்டுத் தூங்கினேன். இந்தப் பயலும் அன்றைக்கு அங்குதான் படுத்திருந்தான். விடிந்து எழுந்து பார்த்தால், கடிகாரத்தைக் காணோம்! உடனே, எல்லோரையும் கேட்டுப் பார்த்தோம். எவருமே எடுக்கவில்லை என்று சொல்லி விட்டார்கள். கால் சட்டை, மேல் சட்டைப் பைகளையெல்லாம் சோதனை செய்தோம். எடுத்தவுடனேயே எங்கேயோ கொண்டு போய் இவன் ஒளித்து வைத்து விட்டு வந்து விட்டான் போலிருக்கிறது. இப்போது அதை விற்றுப் பணமாக்கப் பார்த்திருக்கிறான். அன்றைக்கு எவ்வளவு யோக்கியன் போல நடித்தான்! சுத்தத் திருட்டுப் பயல்!" என்று மிகுந்த ஆத்திரத்தோடு கூறினார்.

இதைக் கேட்டதும் சப்-இன்ஸ்பெக்டர், "அடேயப்பா, அவன் பலே எமகாதகப் பயலாக இருக்கிறானே! என்ன புளுகும் புளுகுகிறான்! பேனாவும், கடிகாரமும் அவனுக்குச் சொந்தமாம்! அவன் திருடவே இல்லையாம். நாங்கள்தான் ஆளைத் தெரியாமல் பிடித்துக் கொண்டு வந்து விட்டோமாம்! அவன் உண்மையிலே பெரிய ஆள்தான்! நீங்கள் கொடுத்த வயது, நிறம், உயரம் எல்லாம் சரியாயிருக்கின்றன. அவற்றையெல்லாம் அவன் மறைக்கப் பார்த்தாலும் முடிகிற காரியமா? ஆனால், பெயரை மட்டும் சரியாகச் சொல்லமாட்டேன் என்கிறான். அதனால் என்ன? இந்த ஏமாற்று வேலையெல்லாம் எங்களிடமா பலிக்கும்? திருட்டுப் பயல்களே இப்படித்தான்" என்றார்.

"ஆமாம் சார், அதிலும் இந்த மாதிரிக் கெட்டிக்காரத் திருடனுக்குப் புளுகக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? ஆனாலும், அவன் புளுகு எத்தனை நாளைக்கு நிலைக்கும்? 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்' என்பார்கள். இந்தப் பயல் புளுகு இன்னும் கொஞ்ச நேரத்திலே தெரியப் போகிறதே! எங்கே அந்த மோசக்காரப் பயல்? கொண்டுவரச் சொல்லுங்கள்; பார்ப்போம்." என்றார் முதலாளி மோகனரங்கம்.

"இதோ கொண்டுவரச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு, "யாரது? 753, இங்கே வா!" என்று கூப்பிட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

உடனே ஒரு போலீஸ்காரர் அங்கே வந்து கால்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து ஒரு 'சல்யூட்' அடித்தார். "உள்ளே போய் 'லாக்-அப்'பில் இருக்கிறானே ஒரு பொடியன், அவனைக் கொண்டு வா" என்று உத்தரவிட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

போலீஸ்காரர் உள்ளே சென்றதும், சப்-இன்ஸ்பெக்டர் மேஜை அறையி

விருந்த 'எவர் - ஷார்ப்' பேனாவை வெளியே எடுத்தார். "இதுதானே உங்கள் பேனா?" என்று மதுரநாயகத்தைப் பார்த்துக் கேட்டார்.

மதுரநாயகம் அதைக் கையில் வாங்கிப் பார்த்தார். பார்த்ததும், "சந்தேகமில்லை. இது என்னுடையதேதான். மேலே தங்க மூடி. கீழ்ப் பாகம் கறுப்பு. 'சேகர் அன்பளிப்பு' என்றுகூட இதில் இருக்கிறதே! ஆறு மாதமாக என் வீட்டிலே தின்று விட்டு, எனக்கே வேட்டு வைக்கப் பார்த்திருக்கிறானே! அப்பப்பா! நினைத்தாலே வயிறு எரிகிறதே! பட்டுத் துணியைத் திருடினான்; பேனாவைத் திருடினான்; கடிகாரத்தையும் திருடி வைத்திருந்திருக்கிறான்! நாலைந்து மாதத்துக்கு முன்பிருந்தே அவனிடம் இந்தத் திருட்டுத்தனம் இருந்திருக்கிறதே! இன்னும் என்ன என்ன சாமான்களைத் திருடி வைத்திருக்கிறானோ! ஏன் சார், அவனிடம் இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது பொருள் இருந்ததா?" என்று சந்தேகத்தோடு கேட்டார்.

அதற்கு சப்-இன்ஸ்பெக்டர் "வேறு எதுவும் அவனிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை, எங்கேயாவது ஒளித்து வைத்திருப்பானோ? எதற்கும் அடித்து உதைத்துக் கேட்டால், உள்ளதைக் கக்கி விடுகிறான்" என்றார்.

"அந்தப் பயல் உங்களிடம் எப்படி அகப்பட்டான்?" என்று கேட்டார் மோகனரங்கம்.

"ஒரு மார்வாரிக் கடையில் அவன் அந்தப் பேனாவை விற்கப் பார்த்திருக்கிறான். அந்தச் சமயம் பார்த்து ஒரு போலீஸ்காரன் 'லபக்'கென்று அவனைப் பிடித்துக் கொண்டான். பாவம், யாரிடத்திலே தப்பினாலும், போலீஸாரிடமிருந்து தப்ப முடியாது என்பது அவனுக்குத் தெரியுமா! அகப்பட்டுக் கொண்டதும், அவன் ஏதேதோ சொல்லித் தப்பிக்கப் பார்த்திருக்கிறான். விட்டால்தானே போவதற்கு? உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்!" என்று உற்சாகமாகக் கூறினார் சப்-இன்ஸ்பெக்டர்.

அப்போது மோகனரங்கம், "ஏன் சார், என் கடிகாரம் எங்கே? அதைக் காட்டவில்லையே!" என்று கேட்டார்.

"இதோ அதையும் தருகிறேன். சொந்தக் கடிகாரம் போல் அதை ஜம்மாகக் கையிலே கட்டிக் கொண்டிருந்தான் அந்தப் பயல்!" என்று கூறிவிட்டு மேஜை அறைக்குள்ளே கையை விட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

அதே சமயம்—உள்ளே சென்ற போலீஸ்காரர் அடைபட்டிருந்த பையனைப் பிடித்து வந்தார். அவனைப் பார்த்ததும், முதலாளி மோகனரங்கம், "ஆ! யார் இவன்? ரமணி இல்லையே!" என்று கூறி விட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் உற்றுப் பார்த்தார். மதுரநாயகமும் "அடே, இவன் யார்?" என்று சந்தேகத்துடன் அவனைக் கூர்ந்து பார்த்தார். அதற்குள் அந்தப் பையன், "ஓ!" என்று அலறிக்கொண்டே மதுரநாயகத்தின் அருகே ஓடிக் கால்களைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான்!



உடனே மதுரநாயகம் "ஆ! நீயா! எப்படி இங்கே வந்தாய்?" என்று திகிலுடன் கேட்டார். (தொடரும்)

மாடிவீட்டு வத்ஸலா



ஸோமாஸ்

ஆபீஸிலிருந்து வந்து வாசு உடைகளை மாற்றிக் கொண்டு, கை கால் முகம் கழுவிச் சாய்வு நாற்காலியில் வந்து, சாய்ந்து கொண்டான். அடுத்த நிமிஷம் அப்ஸரஸ் மாதிரி அவனெதிரில் அழகே உருவாக அவன் மனைவி பாரதி வந்து நின்றாள். காப்பி டம்ளரை மேஜையின் மேல் வைத்துவிட்டு, "ராத்திரி சாப்பாடு இன்றைக்கு மாத்திரம் நீங்களே எடுத்துப் போட்டுக் கொள்ளணும். எல்லாம் சமையலறையில் எடுத்து வைத்துவிட்டுப் போகிறேன். இன்றைக்கு என்று நீங்கள் எங்கே நேரம் கழித்து வருவீர்களோ என்று பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளையாகச் சீக்கிரம் வந்து விட்டீர்கள்......!" என்று பொரிந்து தள்ளினாள்.

"ஆகா, அப்படியே! இன்று தேவியின் அலங்காரம் பிரமாதமாயிருக்கிறதே! எங்கே போகிறாய் என்று சொல்லாமலே உத்தரவு மட்டும் பலமாயிருக்கிறதே!" என்றான் வாசு.

"இல்லை, இல்லை! உத்தரவு இல்லை. வேண்டுகோள்தான். இன்றைக்கு நானும்..." என்று பாரதி மேலே சொல்லுவதற்குள் வாசு இடை மறித்து, "......நான் சொல்லட்டுமா! நீயும் மாடி யகத்து வத்ஸலாவும் சினிமாவுக்குப் போகிறீர்கள். இல்லையா!" என்றான்.

"அடே! உங்களுக்கு ஜோஸ்யம் கூடத் தெரிந்திருக்கிறதே! உங்களுக்கு வத்ஸலாவைக் கண்டால் இளப்பம்தான். எவ்வளவு நல்ல பெண் தெரியுமா!" என்றாள் பாரதி.

"நான் அவளைப் பற்றி ஒன்றும் சொல்லி விட வில்லையே, பாரதி! நீதானே முன்பெல்லாம் ஓயாமல் வத்ஸலாவின்மீது கோள் சொல்லிக் கொண்டிருப்பாய்! இப்போது அவ்வளவுக் கவ்வளவு அவளிடம் உனக்குக் கரிசனம் உண்டாகி விட்டது!" என்றான் வாசு.

"முதலில் அவள் குணம் தெரியவில்லை. நம்மைப் பற்றியும் அவளுக்கு ஒன்றும் தெரியாது. சரி, நாழிகையாகிறது. இந்த அரட்டையெல்லாம் இருக்கட்டும். இரவு 9-30 மணிக்குப் படம் முடிகிறது. நீங்கள் தியேட்டர் பக்கம் வருகிறீர்களா! எங்களை அழைத்து வந்து விடலாம். என்ன, வருகிறீர்களா!" என்று கொஞ்சலாகக் கேட்டாள் பாரதி.

வாசு பதில் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வசீகரமான பாரதியின் மதி முகத்தை அழகிய நிலவும் அலங்கரித்தது. முன் நெற்றியில் வந்து விழுந்த சுருண்ட கேசங்கள் அவள் அழகுக்கு அழகு செய்தன. நீல வானை நிகர்த்த பெங்களூர் ஸில்க் புடவை அவள் பொன் உடலை நாகுக்காக அணைந்து அழகு பெற்றது.

"என்ன இது! நான் சொன்னது ஒன்றும் காதில் விழவில்லையா! மௌனம் சாதிக்கிறீர்களே!" என்று கூறினாள் பாரதி.

"பேஷாய் விழுந்தது. தேவியின் உத்தரவுப் படி தியேட்டர் வாசலுக்கு வந்து விடுகிறேன். உன் அழகில் மயங்கிச் சிறிது நேரம் மெய்ம் மறந்து போனேன்!" என்றான் வாசு.

பாரதி முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு, "பரிகாசம் இருக்கட்டும். சரியாக 9-20 மணிக்குத் தியேட்டருக்கு மறக்காமல் வந்துவிடுகிறீர்களா! இதோ வத்ஸலா கூடத் தயாராகி விட்டாள். பாவம், காத்துக் கொண்டிருக்கிறாள். நான் போய் வருகிறேன்!" என்று சொல்லி விட்டுப் பாரதி புறப்பட்டாள்.

வாசு, "அப்படியே" என்று சொல்லி விட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். அவனையும் அறியாமல் அவன் மனசுக்குள் சிரிப்பு பொங்கியது. இரண்டு மாதங்களுக்கு முன்பு பாரதி வத்ஸலாவை எவ்வளவு கரித்துக் கொட்டினாள்! வாசுவுக்கு அந்தச் சம்பவங்களையெல்லாம் நினைக்க நினைக்க இப்பொழுது மிகவும் சுவாரஸ்யமா யிருந்தது.

புரசபாக்கம் அக்ரஹாரத்தில் ஒரு வீடு காலியிருக்கிறது என்ற செய்தியறிந்ததும் வாசு உடனே ஸ்தலத்துக்கு விரைந்தான். முன் பக்கத்துப் 'போர்ஷன்' தான் காலியாயிருந்தது. நல்ல வெளிச்சமும் சுமாரான காற்றோட்டமும் கொண்ட அந்த இடம் வாசுவுக்குப் பிடித்திருந்தது. உடனே இரண்டுமாத வாடகையை முன் பணமாகக் கட்டி விட்டான். பாரதிக்கு மட்டும் இதில் சற்று வருத்தந்தான்.

"நீங்கள் சுத்த மோசம். வீட்டில் இருந்து நான் முழுவதும் குடித்தனம் செய்யப் போகிறது நான். நீங்கள் ஜோராக வேளா வேளைக்குச் சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குப் போய் விடப் போகிறீர்கள். அப்படி யிருக்க எனக்கு வீட்டைக் காட்ட வேண்டாமோ! நீலாவின் அகத்துக்காரர் தான் இதிலெல்லாம் எத்தனை ஒத்துழைப்பு! அவர் ஆபீஸிலேயே இடம் மாற்றினதுக்குக் கூட நீலாவைக் கேட்டுக் கொண்டுதான் சம்மதம் தெரிவித்தாராம்...!" என்று பாரதி சொன்னதும் வாசுவுக்குப் பதில் சொல்ல ஒன்றும் தோன்றவில்லை.

"பாகீரதி, சமாசாரம் உனக்குத் தெரியாது. புரசபாக்கம் மிகவும் நெருக்கடியான இடம். இந்த வீட்டைப் பிடிக்க நான் எவ்வளவு சிரமப் பட்டேன் தெரியுமா! எனக்குப் பிடித்திருந்தால் அந்த இடம் உனக்கும் பிடித்திருக்கும் என்ற நம்பிக்கையில் அந்த வீட்டை நிச்சயித்து விட்டேன்" என்று சொல்லி அவளைச் சமாதானப் படுத்தினான் வாசு.

அந்த வீட்டுக்குக் குடித்தனம் போனதிலிருந்து பாகீரதி அவனிடம் ஓயாமல் தினம் தோறும் என்னத்தைப் பற்றியாவது குறை கூறிக் கொண்டிருந்தாள்.

"இந்த வீட்டில் கொசு உபத்திரவம் தாங்க முடியவில்லை, அது போதாக் குறைக்கு மனுஷன் பிடுங்கலும் சரியாய்த்தான் இருக்கிறது. அதுவும் பின்கட்டு மாடிப் 'போர்ஷ'னில் குடியிருப்பவர்களுக்கு ராங்கி ஜாஸ்தி. மனுஷாளை மதிப்பதே யில்லை. அவர்கள் வீட்டுச் சின்ன மாட்டுப் பெண் இருக்கிறாளே — வத்ஸலா—அடேயப்பா! அவள் யாரையும் மதிக்கிறதே யில்லை......!"


"பாகீரதி, நீ படித்த பெண். உனக்கு நான் சொல்ல வேண்டுமா! நம்முடைய கை விரல்கள் ஐந்தும் ஒரு மாதிரி இருக்கின்றனவா! அதைப் போலத்தான் மனிதர்களும். மேலும் நம்முடைய குறைகளையும் நாம் கவனித்துத் திருத்திக் கொள்ளணும். நம் மனசிலே துவேஷமும் வெறுப்பு உணர்ச்சியும் குடிகொண்டிருந்தால், யாரைப் பார்த்தாலும் பொல்லாதவர்களாகவும் வேண்டாதவர்களாகவும் தோன்றும். வத்ஸலாவைக் கண்டால் இங்கு வந்ததிலிருந்து உனக்கு என்ன காரணத்தினாலோ பிடிக்க வில்லை. ஆகையினால் அவள் எதைச் செய்தாலும் உனக்கு அதெல்லாம் தவறாகவே படுகிறது. என்னைப் பொறுத்த வரையில் அவளிடம் ஒரு தவறையும் காண முடிய வில்லை......"

"சரி, போதும், உங்கள் பிரசங்கம். நீங்கள் உத்தமர். அதனால் உங்களுக்குப் பிறரிடம் குற்றம் குறை காண முடிய வில்லை. மேலும், வத்ஸலாவைப் போல் தளுக்கும் மினுக்கும் உள்ளவர்களிடம் உங்களுக்கு அநுதாபம் பிறப்பதைத் தவறென்று சொல்ல முடியுமா!"

"பாகீரதி, நீ பேச்சுக்கு நடுவில் எதையோ புகுத்தி விபரீதமாக்குகிறாய், போதும்!" வாசுவின் குரலில் கடுமை கலந்திருந்தது. பாகீரதி மேலே பேச வில்லை. இருவர் முகங்களிலும் கோபம் தாண்டவமாடியது.

* * *

"அன்றைக் கென்னவோ வத்ஸலாவைப் பற்றிப் பிரமாதமாகச் சிலாகித்துப் பேசினீர்களே! இப்பொழுது பாருங்கள், அவள் பொறுமைக் குணத்தை. நான் இன்று என்னுடைய நீல வர்ண பெங்கால் ஸில்க் புடவையை எடுத்துக் கட்டிக் கொண்டேன். அவளும் இன்று யதேச்சையாக பெங்கால் ஸில்க் புடவையைக் கட்டிக் கொண்டிருந்தாள். என்னையும் என் புடவையையும் பார்த்ததும் அவளுக்கு என்ன தோன்றியதோ தெரிய வில்லை; உள்ளே போய் வேறு புடவை கட்டிக் கொண்டு வந்து விட்டாள். என்ன திமிர் அவளுக்கு!" என்று பாகீரதி படபடவென்று பொரிந்து தள்ளினாள்.



"பாகீரதி, கொஞ்சம் மூச்சு விட்டுப் பேசு. ஏன் இவ்வளவு படபடப்பு! அவள் செய்ததும் ஒரு காரியத்துக்கு நல்லதுதான். நான் ஆபீஸிலிருந்து வந்ததும் 'யார் வத்ஸலா, யார் பாகீரதி' என்று தெரியாமல்..." என்று வாசு வாக்கியத்தை முடிப்பதற்குள் பாகீ

ரதி குறுக்கிட்டு, "போதும் அழகுதான்!" என்றாள். வாசு மேலே ஒன்றும் பேசவில்லை.

ஆனால் இது இத்துடன் நின்று விடவில்லை. வத்ஸலாவைப் பற்றிக் குற்றங்குறை கூறு விட்டால் பாரதிக்குப் பொழுது போவதில்லை.

"வாசலில் வெண்டைக்காய் வந்திருந்தது. குடித்தனக்காரர்கள் எல்லோரும் வாங்கினார்கள். நானும் வாங்கப் போனேன். வத்ஸலா, என்னைப் பார்த்ததும் வாங்கின வெண்டைக் காயைக் கீழே கொட்டி விட்டு, 'ஒரேயடியாக முத்திக் கிடக்கிறது. இது யாருக்கு வேணும்!' என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போய் விட்டாள். அவள் திமிரைப் பார்த்தீர்களா!"

இம்மாதிரி எத்தனையோ குற்றச் சாட்டுகள். வத்ஸலா எது செய்தாலும் எது சொன்னாலும் பாரதிக்குக் குற்றமாகவே பட்டது.

"சீக்கிரத்திலே வேறு வீடு பாருங்கள். இந்த மாடி வீட்டுக்காரர்கள் கண்களாலேயே நம்மைச் சுட்டு விடுவார்கள் போலிருக்கிறது!" என்றாள் பாரதி ஒருநாள்.

வாசு என்ன செய்வான், பாவம். மௌனமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அன்று ஊரிலிருந்து பாரதியின் அப்பா வந்தார். அவரைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்த பாரதி வத்ஸலாவைப் பற்றிப் பேசவே யில்லை. அது வாசுவுக்கு நிம்மதியா யிருந்தது.

ஆனால் அந்த நிம்மதி நீடிக்கவில்லை. வத்ஸலாவின் தகப்பனார் வந்த ஒருவாரத்துக்கெல்லாம் அது சீர்குலைந்து போய் விட்டது.

"வத்ஸலாவின் திமிரைப் பார்த்தீர்களா! என் தகப்பனார் ஊரிலிருந்து வந்ததிலிருந்து என்னை நிமிர்ந்து கூடப் பாராமல் 'சிடு சிடு' வென்றிருந்தாள். இப்பொழுது அவளுடைய அப்பா வந்ததும் அவள் முகத்தில் பொங்கும் மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டுமே......!"

"பாரதி, கொஞ்சம் பொறுத்துக் கொள். நான் எப்படியாவது வேறு வீடு பார்த்து விடுகிறேன். அந்தப் பெண் வத்ஸலாவை மட்டும் கொஞ்சம் சும்மா விட்டுவை!" என்று கசப்போடு சொல்லிவிட்டு அவள் பதிலை எதிர் பாராமல் 'விர்'ரென்று வெளியேறினான் வாசு.

இரண்டு நாட்களுக்கெல்லாம், வாசு விரும்பிய மாறுதல் திடீரென்று சற்றும் எதிர் பாராத விதமாக ஏற்பட்டு விட்டது. அன்று பாரதி ஒரேயடியாக வத்ஸலாவைப் புகழ ஆரம்பித்து விட்டாள். 'வத்ஸலா, வத்ஸலா' என்று அவளையே சுற்றிக் கொண்டிருந்தாள். பாரதிக்கு வத்ஸலாவின் மீது இருந்த மனக் கசப்பு எப்படி மாறியது! பாரதியே வாசுவுக்குக் காரணத்தைச் சொன்னாள்.

பாரதியின் தகப்பனார் கிருஷ்ணஸ்வாமியும் வத்ஸலாவின் தந்தை சேஷாத்திரியும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, (வத்ஸலா பிறப்பதற்கு முந்து ஆண்டுகளுக்கு முன்பு) வேலூரில் நண்பர்கள் இருவரும் ஒரே வீட்டில் குடி யிருந்தார்கள். கிருஷ்ணசாமி தபால் இலாக்காவில் நல்ல வேலையி லிருந்தார். சேஷாத்திரிக்குப் பாவம், அப்பொழுது ரொம்ப சிரமம். வேலை யில்லாமல், ட்யூஷன்கள் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்த சிரமத்தில் காலந்தள்ளி வந்தார். வத்ஸலாவுக்கு முன்னால் பிறந்தவர்கள் மூவரும் பெண்கள். வத்ஸலா பிறப்பதற்கு

முன்பே கிருஷ்ணசாமிக்கு மாற்றலாகி விட்டபடியால் சென்னைக்கு வந்தார். அவர் சென்னை வந்த பிறகு பாரதி பிறந்தாள். கிருஷ்ணஸ்வாமிக்கு உத்தியோகத்திலே உயர்வு ஏற்பட்டு வடநாடு சென்றார். அப்புறம் சேஷாத்திரியைப் பற்றிய நினைவே வரவில்லை.

சேஷாத்திரி தமது பெண் வத்ஸலாவைப் பார்க்க அந்த வீட்டுக்கு வந்த சமயம் கிருஷ்ணஸ்வாமி சேஷாத்திரியை ஒரு நொடியில் கண்டு கொண்டார். பழைய நட்பு புதுப்பிக்கப்பட்டது. சற்று நேரத்துக் கெல்லாம், மாடியகத்துப் பேர்கள் அனைவரும் வாசலின் வீட்டுக் கூடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கிருஷ்ணஸ்வாமிக்கு உற்சாகம் தாங்கவில்லை.

"பாரதி, இவர்கள் எல்லோரும் நம்முடைய பந்துக்கள் மாதிரி. வத்ஸலாவின் தகப்பனார் சேஷாத்திரியும் நானும் நீண்ட கால நண்பர்கள். அப்பொழுது நீயும் பிறக்க வில்லை. வத்ஸலாவும் பிறக்க வில்லை. உன் அக்கா கோமதி குழந்தை. அவளுக்கு இவர்களை யெல்லாம் தெரியும். ஒரு சமயம் நான் ஆபீஸ் விஷயமாக வெளியூர் போக நேர்ந்தது. அந்தச் சமயம் கோமதிக்கு நிமோனியா ஜுரம் கண்டு அபாயமாய்ப் போய் விட்டது. தன் சொந்தக் குழந்தை மாதிரி இவர் இராப்பகல் கண் விழித்துக் கொண்டிருந்து பாடுபட்டு, டாக்டரை வரவழைத்துக் காட்டி அவளுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார். அவ்வளவு நல்ல நண்பரைப் பிரியும்படி நேர்ந்தது மல்லாமல் பிறகு சந்திக்கவே முடியாமல் போய் விட்டது. நான் இங்கு வந்து முதல் தடவை வத்ஸலாவைச் சந்தித்ததுமே எங்கேயோ எப்போதோ அவளைப் பார்த்த மாதிரி யிருந்தது. எல்லாம் ஈசுவரன் செயல்..." என்று கிருஷ்ணஸ்வாமி உணர்ச்சியோடு பேசிக் கொண்டே போனார். அவர் நண்பர் சேஷாத்திரி உணர்ச்சி மிகுதியினால் பேச முடியாமல் தவித்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு வத்ஸலாவை மாடியில் பார்க்க முடிகிறதில்லை. அவள்தான் இங்கேயே பாரதியுடன் இருக்கிறாளே!

"என்ன பாரதி, வேறு வீடு பார்க்கலாமா!" என்று வாசு ஒரு நாள் ஆரம்பித்தான். உடனே பாரதி, "ஒன்றும் வேண்டாம். இந்த வீடே போதும். வத்ஸலாவை விட்டுவிட்டு எங்கேயும் போகக் கூடாது!" என்றாள்.

"பார்த்தாயா, பாரதி! நான் அப்பொழுதே சொல்லவில்லையா! எல்லாவற்றுக்கும் நம் மனசு தான் காரணம். வத்ஸலா உன் பிறந்தகத்து மனுஷியாகி விட்டாள். அவளிடம் நீ இனி எந்தக் குற்றத்தையும் காணமாட்டாய். நல்லதாய்ப் போயிற்று!" என்றான் வாசு குதூகலமாக.

பாரதி நாணத்தால் முகம் சிவக்க, "உங்களுக்கு என்னைச் சொல்லா விட்டால் பொழுது போகாது! சரி, வத்ஸலா எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்!" என்று சொல்லி விட்டு உள்ளே போனாள்.

* * *

'டங்' என்று கூடத்துக் கடிகாரம் அடித்து மணி 9-30 என்று காட்டியது. உடனே வாசுவின் சிந்தனையும் தடைப்பட்டது.

"அடடா, மணி 9-30 ஆகிவிட்டதே! படம் முடிந்திருக்குமே!" என்று சொல்லிக்கொண்டே தியேட்டர் வாசலுக்கு ஓடினான் வாசு.

ரவிசந்திரிகா



22. இடமாற்றம்!

அன்று மாலை டாக்டர் சுரேஷ், ரவீந்திரனையும் அப்புலிங்கத்தையும் 'புதிய யோசனையை'த் தங்களுக்குள் கலந்து பேசும்படி சொல்லிவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டார் அல்லவா? அதன் பிறகு அப்புலிங்கம் தன்னுடைய யோசனையை ரவியிடம் சொல்வதற்குச் சற்றும் தயங்கவில்லை. ஏனென்றால், வீடு மாற்றுவது சம்பந்தமாக ஒருவாறு ரவீந்திரனுடைய மன நிலையைச் சரிப்படுத்தி வைத்து விட்டார் டாக்டர், தாம் ஆஸ்பத்திரிக்குப் புறப்படுவதற்கு முன்பே! இப்பொழுது அப்புலிங்கம் அதைத் தொடர்ந்து பேசுவதற்கு ஆரம்பித்தான்.

"மிஸ்டர் ரவி! டாக்டர் சுரேஷ் சொன்ன பிறகாவது இந்த வீட்டை மாற்றுவது என்று நிர்மாணித்து விட்டீர்கள் அல்லவா?"

"அப்பு! அப்படியானால் எனக்குச் சுயபுத்தி இல்லை என்று தானே சொல்லுகிறீர்கள்? என்னை ஒரு கிளிப்பிள்ளை என்று நினைத்து விட்டீர்கள். வாஸ்தவந்தான். நான் ஒரு கிளிப்பிள்ளைதான். அதிலும் சந்தர்ப்பங்கள் என்ற கூண்டுக்குள் அடைபட்டு நிற்கும் ஒரு கிளிப்பிள்ளை! உண்மைதான்!" என்று கூறினான் ரவி. இந்தப் பதில் அப்புலிங்கத்துக்கு எதிர்பாராத விபரீதமாக இருந்தது!

"அப்படியில்லை ரவி! உங்களுடைய சுய புத்தியைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லையே இப்பொழுது—"

"பின் அர்த்தம் என்ன அப்புலிங்கம்! டாக்டர் சொன்ன பிறகு என் புத்தியில் ஏறி விட்டது என்று தானே சொல்ல வருகிறீர்கள்—"

"அப்படியில்லை. காரண காரியங்களோடு டாக்டர் சொன்னதால், உங்களுடைய வியவகார அறிவுக்கு அது பொருந்தியிருக்கும் என்று சொன்னேன்."

"பேஷ்! அப்படியானால் இனிமேல் நான் டாக்டர் சொன்னதற்கு மாறாகப் பேசினால் என்னை அறிவு இல்லாதவன் என்று சொல்வீர்கள். அப்படித்தானே?"

பேச்சு இப்படி நடந்து கொண்டிருந்த போது கல்யாணிஅம்மாள் குறுக்கிட்டாள்.

"அவரிடம் ஏன் இப்படி வரட்டு வாதம் செய்கிறீர்கள்? வீடு மாற்றுவதோ உறுதி என்று ஆகிவிட்டது—"

அப்புலிங்கம் பேச ஆரம்பித்தான்:

"இன்று சாயந்திரம் இங்கே வருவதற்கு முன்னமேயே, உங்கள் வீடு சம்பந்தமாக

சோமு

டாக்டர் என்னோடு சொல்லிக் கொண்டிருந்தார் அம்மா, காற்றோட்டமான வீட்டில் இருந்தால் உங்கள் உடம்புக்கு நல்லது என்று சொன்னார். நானும் ஒரு யோசனை கூறினேன்."

மௌனமாக இருந்த ரவி, "அந்த யோசனையைத்தான் சொல்லுங்களேன், அப்பு!" என்று வேகத்தோடு கூறினான்.

"அவர் அதைச் சொல்லும்படி விட்டால் தானே நீங்கள்!" என்று கல்யாணி அம்மாள் சொன்னாள். பொதுவாகக் கணவன் கோபப்படாத வேளைகளில் மனைவிக்கு ஏற்படுமே ஒரு கண்டிப்பு, அந்தக் கண்டிப்பு இருந்தது, கல்யாணி அம்மாளின் குரலில். ரவீந்திரன் மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

"மிஸ்டர் அப்பு! உங்கள் கட்சிக்குத்தான் பலம் சேர்கிறது! பேசுங்கள்! உங்கள் யோசனையைச் சொல்லுங்கள்!" என்றான் ரவி.

அப்பு சொன்னான்: "ஆண்டார் தெருவில் எங்கள் வீடு உங்களுக்குத் தெரியும். அத்தனை பெரிய வீட்டில் அப்பாவையும் அம்மாவையும் தவிர நான் ஒருவன்தான்."

"ஆமாம். நீங்கள்தான் நைஷ்டிக பிரும்மச்சாரி ஆயிற்றே! ஒற்றைக் கட்டை!" என்றான் ரவி.

"அதற்குச் சொல்லவில்லை. அத்தனை பெரிய வீட்டில் நாங்கள் மூன்றேபேர்தான். எங்கள் வீட்டு வளைவுக்குள் அவுட் ஹவுஸ் ஒன்று இருக்கிறதல்லவா? அந்த முற்றத்து வீட்டில் யாருமே இல்லை. பூட்டிக் கிடக்கிறது. அந்தக் காலத்தில் எங்கள் தகப்பனார் 'தியொஸாபிகல் ஸொஸைடி'யில் சேர்ந்து தீவிரமாக வேலை செய்தவர். அப்பொழுதெல்லாம் வெளியூரிலிருந்து பல பேர் வருவார்கள். அந்த விருந்தாளிகளுக்கு என்றே முற்றத்தில் ஒரு வீட்டைக் கட்டினார்கள். இப்பொழுது 'தியாஸபி' அப்பாவுக்கு ஒத்து வரவில்லை. வீடு பூட்டிக் கிடக்கிறது!" என்றான் அப்புலிங்கம்.

"ஓகோ! அந்த வீட்டுக்கு நாங்கள் குடி வந்து விடலாம் என்கிறீர்களோ? இனியை உங்களுடைய கூட்டிலேயே அடைத்து விடப் பார்க்கிறீர்களா?" என்று கேட்டான் ரவீந்திரன்.

"தயவுசெய்து இனிப் பிள்ளையைக் கொண்டு வராதீர்கள் இப்போது. டாக்டர் சுரேஷுக்குக்கூட இன்று அந்த வீட்டைத் திறந்து காட்டினேன். நல்ல காற்றோட்டம். மாடி அவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது. கீழே உங்கள் மனைவிக்குச் சௌகரியமான ஒரு பூஜை அறை இருக்கிறது. மாடியிலும் ஒரு நல்ல ஹால் இருக்கிறது!" என்றான் அப்புலிங்கம்.



"நடனம் ஆடுவதற்குச் சௌகரியம் என்கிறீர்கள். அப்படித்தானே? சந்திரிகா! சந்திரிகா!" என்று கூப்பிட்டான் ரவி.

மாடியிலிருந்து சந்திரிகா கீழே வேகமாக இறங்கி வந்தாள்.

கந்தப்பன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவன் எழுந்து நின்று கொண்டான்.

"நீ உட்கார் தம்பி! சந்திரிகா, இப்படி இந்த நாற்காலிக்கு வா. இவர் என்ன யோசனை சொல்கிறார் தெரிந்ததோ, உனக்கு?" என்று கேட்டான் ரவி.

"அரைகுறையாகக் காதில் விழுந்தது. உங்களுக்குச் சம்மதமாக இருக்க வேண்டுமே என்றுதான் பிரார்த்தனை செய்கிறேன். ஏனென்றால் இந்த மொட்டை மாடி எனக்கும் அலுத்து விட்டது!"

"பேஷ்! அலுத்து விட்டது என்பது மட்டும் இல்லை. திருடன் வந்து போனதிலிருந்து பயமாகவே போய் விட்டது என்று சொல்!" என்றான் ரவி. இப்படிச் சொல்லிவிட்டு அப்புலிங்கத்தைப் பார்த்துக் கேட்டான் ரவி:

"மிஸ்டர் அப்பு! உங்களுடைய முற்றத்து வீட்டில் குடியேற எங்களுக்குச் சம்மதமே. உங்கள் அன்புக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை!"

"சொல்லுங்கள். என் யோசனையை நீங்கள் ஒப்புக்கொள்ளும்போது, உங்கள் நிபந்தனையை நான் ஒப்புக் கொள்ள வேண்டியதுதானே? எப்படியும் எனக்கு நல்ல சங்கீதம் தினந்தோறும் காதில் விழுமே என்ற ஆனந்தம்தான்!"

"உங்கள் வீட்டில் குடியிருக்கிறேன். ஆனால் நண்பன் என்ற முறையில் அல்ல, வாடகைக்காரன் என்ற முறையில்!"

"அப்படியென்றால்?" என்று கேட்டான் அப்பு.

"நட்பு என்பது வேறு விஷயம். வீட்டு வாடகை என்பது வேறு விஷயம். மாதம் இத்தனை ரூபாய் என்று ஒரு முடிவு சொல்லுங்கள். நான் உங்கள் வீட்டில் குடியிருக்கத் தயார். மற்றப்படி நட்பையும் இதையும் போட்டுக் குழப்புவது எனக்குப் பிடிக்காது!" என்றான் ரவி.

"ரொம்ப சரி. டாக்டரையும் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு, வாடகை எவ்வளவு என்று முடிவு செய்து விடுவோம். நீங்கள் நல்ல நாள் பார்த்துக் குடி வந்து விடலாம்."

"நல்ல நாள் என்ன! ராகுவும் கேதுவும் சேர்ந்து ஒன்பது கிரகங்களுமே நல்லவைதான், பக்தர்களுக்கு. சந்திரிகா, சம்பந்தர் தேவாரம் நினைவிருக்கிறதா?

ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி சனி
பாம்பிரண்டுமுடனே

ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே!"

என்று பாடினான் ரவி.

கல்யாணி அம்மாள் இந்த இடத்தில் பேச ஆரம்பித்தாள்:

"பாம்பு வந்த பிறகு நாள் பார்த்துப் போகிறது என்ற பேச்சே கிடையாது. அது எந்த நிமிஷம் வந்ததோ, அந்த நிமிஷமே வீடு மாற்றுகிறதற்கு நல்ல முகூர்த்தந்தான்—"

"கல்யாணி! இன்னும் அந்தப் பாம்பு விஷயத்தைப் பேசினாயோ, பிறகு வீடு மாற்றுவதே இல்லை என்று தீர்மானித்து விடுவேன். தெரிந்ததா!" — இப்படிச் சொல்லும் போது பாம்பைப் போல் படமே எடுத்து விட்டான் ரவீந்திரன்!

அப்புலிங்கத்துக்குக் கலவரமாகப் போய் விட்டது. கல்யாணி அம்மாளிடம் உண்மையில் அவனுக்கு இரக்கமே உண்டாயிற்று. கலக்கத்தோடு அவன் ரவியைப் பார்த்தான். இந்தக் கட்டத்தில் சற்றும் எதிர்பாராத விதமாகக் கந்தப்பன் பேச ஆரம்பித்தான்!

"ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். நான் இதுவரை இங்கு நடந்த விஷயங்களையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது பாம்பைப் பற்றி நீங்கள் இப்படிச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. நல்ல பாம்பைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? கடவுள் புண்ணியத்தில் ஒரு முறை நீங்கள் சொக்கிகுடிக்கு வந்து எங்கள் நாகர் பீடத்தைப் பார்த்தால், எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்வீர்கள். அதெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், அம்மாள் அவர்கள் சொல்லுவதிலும் ஒரு உண்மை இருக்கிறது. நான் அதிகமாகப் படித்ததில்லை. என்றாலும், நாகப் பாம்புகள் விஷயத்தில்

உயர்ந்த கவிதை

கவியின் இஷ்ட தேவதை அல்லது இஷ்ட சித்தி, இஷ்ட தர்மம், இஷ்ட சுகம்,—இதனுடைய காந்தி அவனுடைய உள்ளத்திலே வீசும். அந்த ஒளி பாட்டிலே தெரியும். உயர்ந்த கவிதையின் நெறி அது. —பாரதியார்.



உங்களைவிட நான் அதிகம் தெரிந்தவன். நீங்கள் நாளைக்கே இந்த வீட்டைக் காலி பண்ணிவிட வேண்டும். என்னோடு வாதாடினால் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது! அந்தளவுக்குப் படிக்கவில்லை நான்!" என்றான் கந்தப்பன். அவனுடைய முகத்தில் கபடம் இல்லை. அவனுடைய வார்த்தைகளில் பக்தியும் சிரத்தையும் இருந்தன. ரவீந்திரனுக்கு எதிர்த்து வாதாட இடம் இல்லை!

"மிஸ்டர் அப்பு! வெற்றி உங்கள் கட்சிக்குத்தான். என்ன காரணமாய் இருந்தாலும் சரி, நாளைக்கே வீடு மாற்றி விடுவோம். கந்தப்பன், நீயும் நாளைக்குக் கட்டாயம் வந்துவிட வேண்டும். டாக்டர் சுரேஷும் அவசியம் வருவார்!"

• • •

வெள்ளிக்கிழமை காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் அப்புலிங்கத்தின் மூன்றாந்து வீடு, ரவீந்திரன் குடும்பத்தை வரவேற்கத் தயாராக இருந்தது. இரவோடு இரவே நாலு பேரை அமர்த்தி வீடு முழுவதையும் ஒட்டடை அடித்துக் கழுவிச் சுத்தப்படுத்தி விட்டான் அப்புலிங்கம்.

சங்கீதத்திலும் கல்வியிலும் அப்புலிங்கத்துக்கு எல்லையில்லாத ஈடுபாடு. ரவீந்திரனைப் பிடிப்பதற்கு முன்பே அவனுடைய சங்கீதத்தைப் பிடித்து விட்டது அப்புலிங்கத்துக்கு. பிறகு அவனோடு பழகப் பழக ரவீந்திரனுடைய கோபதாபங்களுங்கூட அவனுக்குப் பிடித்துப் போய் விட்டன. ரவீந்திரனுடைய புல்லாங்குழலின் கீதம் மேலும் கீழும் ஸ்தாயிகளிலே ஏறி இறங்குவதில்லையா? அது போலத்தான் இருந்தது ரவியினுடைய உணர்ச்சிகளும் என்று எண்ணி, சங்கீதத்தைப் போலவே அந்த உணர்ச்சிகளையும் ரசிக்க ஆரம்பித்து விட்டான் அப்பு.

ரவீந்திரன், கல்யாணி, சந்திரிகா மூவரும் டாக்டர் சுரேஷின் காரிலேயே அப்புலிங்கத்தின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். டாக்டர் சுரேஷ் ஒரே உற்சாகத்தோடு காணப்பட்டார்.

"மிஸ்டர் அப்பு, ரவீந்திரனுடைய வீட்டில் தட்டு முட்டுச் சாமான்களே மிக மிகக் குறைவு. ஆணி அடிக்கிறது, படம் மாட்டுகிறது, கட்டிலை இழுக்கிறது, பெஞ்சுகளைச் சுவரோடு கொண்டு போட்டு, அதிலே உட்கார்ந்திருப்பவர்கள் தலையிலுள்ள எண்ணெயை யெல்லாம் சுவரிலே மெழுகுவது,—இந்த மாதிரித் தொந்தரவு எல்லாம் கிடையாது! உங்கள் பாடு கல்ல யோகந்தான்! வாடகைக்கு இந்த மாதிரி ஒரு குடித்தனம் கிடைக்க வேண்டுமே, அப்புலிங்கம்!" என்றார் சுரேஷ்.

புது வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் முதலாவது காரியமாகக் கல்யாணி அம்மாள் பூஜை அறைக்குள்ளே சென்று குத்து விளக்கு ஏற்றினாள். உடனே அடுப்பைப் பற்ற வைத்துப் பால் காய்ச்சினாள். இதற்குள் கந்தப்பனும் அங்கு வந்து சேர்ந்து விட்டான்.

தட்டுமுட்டுச் சாமான்களைப் பற்றி டாக்டர் பேசியதில் இமைந்த நுட்பத்தைப் புரிந்து கொண்டவனாக, அப்புலிங்கம் தனது பங்களாவிலிருந்து நண்பர்கள் உட்காருவதற்காக ஐந்தாறு நல்ல ஆசனங்கள் எடுத்து வரச் சொன்னான்.

"உங்களைத்தானே? நீங்கள் பேசாமல் நிற்கிறீர்களே, எல்லாரையும் பால் சாப்பிடச் சொல்லுங்களேன்!" என்றாள் கல்யாணி, ரவீந்திரனைப் பார்த்து.

சந்திரிகா அடுக்களைக்குள்ளிருந்து பால் எடுத்து வந்தாள்.

"நாங்கள் எல்லாரும் சாப்பிடுவது இருக்கட்டும். முதல் முதல் கந்தப்பன் தான் பால் சாப்பிட வேண்டும். அதுதான் முறை!" என்றார் டாக்டர் சுரேஷ்.

சந்திரிகாவின் கையிலிருந்த பால் டம்ளரை வாங்கிக் கந்தப்பனிடம் பரிவோடு கொடுத்தான் ரவி.

"டாக்டர் சார்! இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே பால் சாப்பிடுவதில் உண்மையிலேயே எனக்கு சந்தோஷம். ஏனென்றால் பால் ஒன்றுதான் எங்கள் குலத்தில் எந்தச் சாதிக்கும் நாங்கள் உபயோகிக்

கிற புனிதமான பொருள்!" என்றான் கந்தப்பன்.

"அப்படியென்றால்? நீங்கள் வேறு பானங்கள் எதுவுமே சாப்பிடுவதில்லை என்று சொல்கிறீர்களோ தம்பி?" என்று வேடிக்கையோடு கேட்டார் சுரேஷ்.

"டாக்டர் ஸார்! நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது! எங்கள் பக்கத்தில் கஞ்சாத் தோட்டங்கள் அதிகம்தான். அந்த இலைகளைப் பாலிலே அரைத்துக் கலந்து, விழாக் காலங்களில் நாங்கள் ஒரு வகையான பானம் செய்து சாப்பிடுவது வழக்கம். அதைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தான் நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றான் கந்தப்பன்.

"ரொம்ப சரி. ஆனால் சாந்தி என்று ஒரு வார்த்தை உபயோகப் படுத்தினாயே தம்பி, அது என்ன?" என்று கேட்டார் டாக்டர் சுரேஷ்.

கந்தப்பன் பௌர்ணமி இரவுகளில், அவசியம் நேர்ந்தபோது நாகசாந்தித் திருவிழா கொண்டாடப்படுவதைக் குறித்துச் சொன்னான். அப்புலிங்கமும் ரவீந்திரனும் அந்தப் பேச்சை ஆவலோடு கூர்ந்து கேட்டார்கள்.

"நாகசாந்தி என்பது அத்தனை முக்கியமான ஒரு சடங்கு. நாளை மறுநாள் பௌர்ணமியல்லவா? எங்கள் சொக்கி குடியில் நாகசாந்தி செய்வதற்காகத் தகவல் சொல்லி யனுப்பி விட்டேன்!" என்றான் கந்தப்பன்.

டாக்டர் ஆச்சரியத்தோடு கேட்டார்: "என்ன கந்தப்பன்! ரவீந்திரன் வீட்டில் நாகம் இறந்து போனதற்காகச் சொக்கி குடியில் சாந்தி செய்யப் போகிறீர்களா?"

கந்தப்பன் சொன்னான்: "நல்லதோ கெட்டதோ அந்த நாகத்துக்கு நான் அல்லவா யமனாக வந்து சேர்ந்தேன். அதனால் சாந்தி செய்ய வேண்டியது என் பொறுப்புத்தானே!"

டாக்டர் சுரேஷ் கேட்டார்: "நீ எப்படி தம்பி தகவல் அனுப்பினாய்?"

"அது ஒன்றும் கஷ்டமில்லை டாக்டர். வழக்கமாகவே ஒவ்வொரு மாதமும் இங்கிருந்து செய்தி கொண்டு போகிற ஆள் ஒருத்தன் இருக்கிறான். அவனிடம்தான் இதையும் சொல்லியனுப்பி யிருக்கிறேன்."

"அப்படியானால் நாளை மறுதினம்—அதாவது—இன்று வெள்ளிக் கிழமை அல்லவா? நாளை மறுதினம் ஞாயிறன்று—உங்கள் மலைக் காட்டிலே நாகசாந்தி நடக்குமோ?"

"ஆமாம். பௌர்ணமி பூஜை பிரமாதமாக நடக்கும்!" என்று ஒரே பெருமையோடு சொன்னான் கந்தப்பன்.

"எனக்கு ஒன்று தோன்றுகிறது மிஸ்டர் அப்புலிங்கம்! நீங்கள் தான் பெரிய ரஸிகர் ஆயிற்றே. உங்களுடைய உள்ளம் ஒரு 'ப்ளாட்டிங் பாட்' மாதிரி. எழுத்துள்ள பக்கத்தில் எங்கெங்கே பசையிருக்கிறதோ அதை மட்டும் ஒத்தி எடுத்து விடுவீர்கள். இந்த மலையரசர் கூட்டத்தில் நடக்கும் விழாவையும், அப்படி ஒத்தி எடுத்துக் கொண்டு வந்தால் என்ன! நாளைக்கோ எனக்கு மாதத்தில் மூன்றாவது சனிக்கிழமை. நாளை மறுதினமோ ஞாயிறுதான். இரண்டு நாட்களும் சேர்ந்தாற் போல் லீவு. அப்படியே ஒரு உல்லாச யாத்திரை புறப்பட்டுப் போய் வந்தால் என்ன!" என்று கேட்டார் டாக்டர் சுரேஷ்.

"நான் அந்தக் காட்சிகளை உள்ளத்தில் படம் பிடிக்கப் போகிறேனா இல்லையோ, உங்களுடைய காமிராவில் அவற்றை



யெல்லாம் பிடித்துக் கொண்டு வந்துவிடுவீர்கள், அப்படித்தானே டாக்டர்?" என்று கேட்டான் அப்புலிங்கம். ரவீந்திரன் இப்பொழுது பேச ஆரம்பித்தான்:

"அதுமட்டும் இல்லை, அப்பு! டாக்டருக்கு சர்ப்பசாந்தியைப் பற்றிக் கேட்டதிலிருந்து அதைக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று ஆசை. அதனால் தான் இந்த யாத்திரையில் இத்தனை அக்கறை! அப்படித் தானே டாக்டர்!"

டாக்டர் சுரேஷ் இதற்குப் பதில் சொல்லாமல் சிரித்தார்.

"எது எப்படியானாலும் ரவீந்திரன் இந்த இடத்திலிருந்து நகரமாட்டார். அதிலும் புது வீட்டுக்கு வந்தவுடன் 'காம்ப்' கிளம்புவது என்றால் அவருக்கு—"

"அதுமட்டுமில்லை டாக்டர்! நான் இனி இந்த வீட்டிலிருந்து கிளம்புவதென்றால் அது அநேக விஷயங்களைப் பொறுத்தது. அந்த அயோக்கியன் நாகரத்தினத்துக்கு

ஒரு வழி செய்தால் ஒழிய நான் திருச்சியிலிருந்து கிளம்பப் போவதில்லை. கந்தப்பனுடைய ஊருக்குப் போக வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது உண்மைதான். ஆனால் அதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும். என் உயிரையே ரட்சித்திருக்கிற இந்த உத்தம இளைஞனுக்கு நான் காணிக்கை செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் சேர வேண்டாமா? அதற்காகத்தான் காத்திருக்கிறேன்" என்றான் ரவி. அப்பொழுது உணர்ச்சியினால் அவனுடைய குரல் கம்பித்தது. கந்தப்பனுக்கு மனம் நெகிழ்ந்தது.



"ஐயா! எங்கள் மலைப் பிராந்தியத்தில் உங்களுடைய அற்புதமான சங்கீதம் எழுந்து ஒலிக்கும்படியான புண்ணியம் என்று நேர்கிறதோ அன்று எங்கள் குலமே தழைக்கும். எங்கள் குல தெய்வமே களிக்கும். அதில் சந்தேகமில்லை" என்றான் கந்தப்பன்.

உணர்ச்சியின் வசத்தால் சற்று நேரம் மௌனம் நிலவியது. பிறகு சுரேஷ் பேச ஆரம்பித்தார்:

"என்ன கந்தப்பன்! உனக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை தானே?" என்று கேட்டார்.

"ஏன் சனிக்கிழமையும்தானே?" என்று கேட்டான் ரவி.

"இல்லை ரவி! குசையப்பர் கல்லூரியில் புதன் கிழமையும் ஞாயிற்றுக் கிழமையுந் தான் விடுமுறை. அப்படித்தானே தம்பி?"

"ஆமாம் ஐயா! அதனால் என்ன! நீங்களே இத்தனை சிரத்தையோடு புறப்படும்போது நான் மட்டும் தயங்கலாமா? சனிக்கிழமை ஒரு நாள் லீவு போடுகிறேன். நாளைக் காலையில் புறப்பட்டு நேரே அம்பாசமுத்திரம் வரையில் ரயிலில் போய் விட்டால், பிறகு—"

"பிறகு அங்கிருந்து பாபநாசம் போய் மலையிலே நடக்க வேண்டும். அப்படித்தானே?" என்று கேட்டார் சுரேஷ்.

"ஆமாம்" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் கந்தப்பன்.

"அதைப் பற்றிக் கவலை யில்லை. அப்புலிங்கமும் நானும் காலில் வலு உள்ளவர்கள்தான். சில பேரைப் போல நாங்கள் ஆனை உண்ட விளாங்கனியில்லை" என்றார் டாக்டர்.

"அப்படி யென்றால்?" என்று கேட்டான் ரவி.

"யானை விளாம்பழம் சாப்பிட்டால், தோடு அப்படியே இருக்கும். உள்ளே உள்ள சதைப் பற்றை மட்டும் யானை உட்கொண்டு விடும். பிறகு அந்தப் பழத்தை உடைத்துப் பார்த்தால் அது வெறும் போலாக, பொக்காக, இருக்கும். தோடு மட்டும் அப்படியே மூடியவாறு இருக்கும் — அப்படித்தானே டாக்டர்? தமிழ்ப் பாடல்களில் வருகிறது இதைப் பற்றி—" என்றான் அப்பு.

"அது சரி. ஆனால் 'யானை உண்ட விளாங்கனி' என்று சொல்வது நாம் பார்க்கும் யானையை அல்ல. யானை என்று ஒரு நோய் இருக்கிறது. அந்த நோய் விளா மரத்துக்கு வந்து விட்டால் அதிலுள்ள பழங்கள் எல்லாம் வெறும் பொக்காக இருக்கும். தோடு மூடியிருக்கும். உடைத்தால் உள்ளே ஒன்றும் இருக்காது!" என்றான் கந்தப்பன்.

"அப்படியா! எனக்கு இதுவரை தெரியாதே. ஏதோ யானைதான் விளாம்பழத்தைச் சாப்பிடுவதில் இப்படி ஒரு மந்திரம் செய்கிறது என்றல்லவா நினைத்தேன்! ஆனால் அதே சமயம் இது ஸையன்ஸோடு ஒத்து வராத காரியமாக இருக்கிறதே என்று நான் நினைத்ததுண்டு."

இவ்வாறு சொல்லிக் கொண்டு டாக்டர் சுரேஷ் கூறினார்: "அப்படிப்பட்ட யானை உண்ட அதாவது யானை நோயுண்ட விளாம்பழம் இல்லை நாங்கள். உடம்புக்குள்ளே நல்ல திராணி எங்களுக்கு இருக்கிறது. ஆகையால் நாங்கள் நடக்கத் தயார்தான்!" என்றார்.

பிரயாணம் உறுதியாயிற்று. மறுநாட் காலையே டாக்டர் சுரேஷ், அப்புலிங்கம், கந்தப்பன் மூவரும் சொக்கிகுடிக்குப் புறப்பட்டார்கள்.

திருச்சி ஜங்ஷனில் மூவரும் ரயில் ஏறுவதற்குச் சென்றபோது, அங்கே ப்ளாட்பாரத்தில் டெலிபோன் எக்ஸ்சேஞ் விலி ஓட் அவுலாம் அவனுடைய தகப்பனார் ஓட் அவுலாம் உஸ்தாத் மீரானும் நின்று கொண்டிருந்தார்கள்! (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon





வாரம் ஒரு அணா செலவிற்கு பற்களுக்கு முழுப் பாதுகாப்பளிக்கிறது!

சாம்பல், கரிபோன்ற கரகரப்பான பொருள்கள் பற்களில் கீரல் விழச் செய்கின்றன. இந்த கீரல் வழியாக பாக்டீரியா புகுந்து கெடுதல் விளைவிக்கிறது. பற்கள் பூரண ஆரோக்கியத்தோடு இருக்க விஞ்ஞான முறையில் தயாரித்த ஒரு பல் துலக்கும் வஸ்து உங்களுக்குத் தேவை. ஆகையால் கிப்ஸ் டென்டிபிரீஸ் வாங்குங்கள். பற்களுக்கு பூரண ஆரோக்கியத்தைத் தரும் எல்லா பொருள்களையும் ஒன்று சேர்த்து கெட்டியாகச் செய்ததுதான் கிப்ஸ். அன்றியும் ஒரு டூத்பேஸ்ட் செய்யும் எல்லா வேலைகளையும் அதன் பாதி விலைக்குச் செய்கிறது. இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். பிரஷையோ அல்லது விரலையோ தண்ணீரில் நனைத்துக் கொண்டு கட்டியின்மேல் தேய்க்கவும். அதன் சுவையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அன்றியும் அதன் மிருதுவான ஊடுருவிப்பாயும் நுரை உங்கள் பற்களை பளிச்சென்று வெண்மையாக இருக்கச்செய்யும்!



உங்களுக்கும் பிரியமான கிப்ஸின் கிளோரோபில் சேர்ந்திருக்க விரும்பினால் கிப்ஸ் கிளோரோபில் டென்டிபிரீஸ் கேளுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படும் வெள்ளை டப்பாவில் பெயரை கவனித்து வாங்குங்கள்.



நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்

கிப்ஸ் டென்டிபிரீஸ்

GD. 37-50 TM — டி. அண்டு டபிள்யு. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.